GOKULAM

கோகுலம்


ஆகஸ்ட் '98 ரூ. 6/-




கம்ப்யூட்டர் சக்தி, கல்விக்குப் பேருதவி!

கோலப் போட்டி முடிவுகள்!

இரண்டு படத்திற்கும் உள்ள ஏழு வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடை:பாப்பாவின் பனியன், பிரஷ், நோட்டில் உள்ள எழுத்து, கடிகாரம், கொலுசு, பூ, புத்தகம்



இங்கு உள்ள குறிப்புகளை வைத்து ஒளிந்திருக்கும் 'கை'களைக் கண்டு பிடியுங்கள்!


1. திருவிழா – மறு பெயர் = – – – கை
2. இதன் மேல் உறங்கலாம் = – – – கை
3. கரிய பறவை = – – கை
4. அமர்ந்து கொள்ள உதவுவது = – – – கை
5. கோமாளிகள் காட்டுவது = – – – கை
6. பெண் – மறுபெயர் = – – கை
7. சிரிப்புக்கு மறு பெயர் = – – – கை
8. மதுரையில் ஓடும் ஆறு = – கை
9. நெல் இடிக்க உதவும் = – – – கை
10. சகோதரியின் மறுபெயர் = – – – கை

– பு. ரம்யா, வேலூர்.


பிருந்தாவனம்

1. பண்டிகை, 2. படுக்கை, 3. காக்கை,
4. இருக்கை, 5. வேடிக்கை, 6. மங்கை,
7. புன்னகை, 8. வைகை, 9. உலக்கை, 10. தமக்கை

எந்த இரண்டு நாய்கள் ஒன்றாக உள்ளன?



விடை: 2,4



கோகுலம்


ஆகஸ்ட் 1998 மலர் : 16 இதழ் : 7

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

ரசிகமணி டி.கே.சி. என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? பெரிய மீசையும் அதனால் கூட மறைக்க முடியாதபடிக்கு தாராளமான புன்னகையுமாகப் படங்களில் பார்த்திருக்க லாம்.

தமிழ் நாட்டின் தொன்மையான பல கலை களை, ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்கு உட் பட்டிருந்த நாட்களில் நாம் மறந்து போயிருந் தோம். இந்த நிலைமை மாற்றி, தமிழிலக் கியம், தமிழிசை, சிற்பம், சித்திரம், பாத நாட்டியம் போன்ற பல கலைகளில் நமக்கு ஈடு பாடு உண்டாகச் செய்தவர் அவர்தான்.

ரசனை என்பது ஏதோ ஒரு கதையையோ கவிதையையோ ரசிப்பது மட்டுமல்ல; வாழ்க்கை யையே ரசனையோடு நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தவர் டி.கே.சி. அப்படி அவர் வாழ்ந்தும் காட்டினார். கூழும் மோரும்தான் உணவு என்றால் கூட அந்தக் கூழையும் மோரையும் பக்குவமாகத் தயாரித்து, ருசித்துச் சாப்பிட முடியும் என்று உணர்த்தியவர் அவர். வாசலில் ஒரு பூ மலர்ந்திருந்தால் அதை ரசிக்க வேண்டும்; ஒரு தேன் சிட்டு அதனருகே பறந்தால் வியந்து மகிழ வேண்டும்; உதய சூரியனையும் பூரண சந்திரனையும் பார்த்துப் பரவசமடைய வேண்டும். இந்த ரசனைதான் மானுடனை மிருக ஜன்மத்திலிருந்து உயர்த்திக் காண்பிப்பது.



ஒரு வீட்டு வாசலில் அழகான கோலத்தைப் பார்த்தால், ஒரு நிமிஷமாவது நின்று அதை அனுபவிப்பார் டி.கே.சி. ''எத்தனை அற்புதமான கலை பார்த்தீர்களா? இந்தக் கோலத்தைப் போட பெண் மணிகள் ஜியாமெட்ரி படித்தார்களா, அல்லது காம்பஸ், ஸெட்ஸ் கொயர் உபயோகித்தார்களா? எவ்வளவு திருத்தமாக, அழகாகக் கோலம் போடுகிறார்கள்! தமிழ் நாட்டுக்கே உரிய இந்தக் கலையை நம் தாய்மார்கள் அல்லவா காலம் காலமாகக் காப்பாற்றித் தந்திருக் கிறார்கள்!'' என்று கூறி வியந்து பாராட்டுவார்.

அந்தகைய அற்புதமான கோலக்கலை இன்றைய அவசர யுகத்தி லும், வீடு - வாசல் என்றே பார்க்க முடியாத அபார்ட்மெண்ட் குடி யிருப்புகள் காரணமாகவும் மறைந்து விடுமோ என்ற அச்சம் எனக்கு இருந்தது. ஆனால் கோகுலம் கோலப் போட்டி அந்தப் பயத்தை விரட்டி அடித்து விட்டது!

எத்தனை சிறுமியர், விதம் விதமான வண்ணக் கோலங்களை அனுப்பியிருக்கிறார்கள்! குறிப்பிட்ட கோலத்தைப் போடுவதற்கு எத்தனை புள்ளி, எத்தனை வரிசை என்று கணக்குக் கூட எழுதுகிறார்கள்! பார்த்து, சந்தோஷப்படும் போது கூடவே ரசிகமணி நினைவும் வருகிறது!

கோலப் போட்டியில் பங்கேற்றுள்ள சிறுமியருக்கு ஒரு வார்த்தை. ஒரு இதழில் சுமார் எழெட்டு கோலங்கள்தான் பிரசுரிக்க முடியும். உங்கள் கோலம் சிறப்பாக இருந்தால் நிச்சயம் பிரசுரமாகும். ஆனால் அதனை அச்சிலே காண நீங்கள் நீண்ட கியூ வரிசையிலே பொறுமையுடன் காத்திருக்கத்தான் வேண்டும். போட்டியில் பங்கு பெற்ற, இனி பங்கு பெறப் போகிற அனைவருக்கும் வாழ்த்துகள்.

அன்புடன்,

கி. ராஜேந்திரன்

ஆசிரியர்.

> உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
> உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.

கோகுலம்

ஆகஸ்ட் '98

இந்த இதழில்...








காகிதத்தில் கலைவண்ணம்!

முயல்



1. சதுர வடிவத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள்.

2. மேலிருந்து கீழ் நோக்கி மடியுங்கள்.

3. இடப் பக்கம் வலப் பக்கத்தை தொடுமாறு மடிக்கவும். பின் படம் 3-ல் காட்டிய படி மேலிருந்து பாதி தூரத்திற்கு வெட்டுங்கள்.

4. படத்தில் காட்டிய உருவம் கிடைக்கும்.

5. இப்போது வலப்பக்கமிருக்கும் தாளை கீழ் நோக்கி மடித்து விடுங்கள். இதோ முயல் தயார். பேனாவால் கண் வரைந்து நடுவில் உள்ள தாளைப் பிடித்து லேசாக அசைத்தால் முயல் காதுகளை ஆட்டும்.

மேஜை


1. வழக்கம்போல் சதுரத்தாளை எடுத்துக் கொள்ளுங்கள். புள்ளி வைத்த படி மடித்து விடுங்கள்.

2. மடித்த தாளை மீண்டும் பிரித்து படத்தில் காட்டியபடி வைத்துக் கொள்ளுங்கள்.

3. இட முனையை தாளின் மையத்தை தொடுமாறு மடித்து விடுங்கள். அதே போல் மீதி மூன்று முனைகளையும் மடியுங்கள்.

4. மடிக்கப்பட்ட தாளின் முனைகளை மீண்டும் பின்புறமாக மடித்து நிறுத்துங்கள்.

5. இதோ மேஜை தயார்.



தமிழில் கணிப்பொறி என்றும் கணினி என்றும் அழைக்கப்படும் கம்ப்யூட்டர் ஒரு மின்னணுக் கருவி. இது கொடுக்கப்படும் தகவல்களைத் தன்னுள் பதிவு செய்து கொண்டு விடுகிறது. பின் அவற்றைத் தொகுத்துப் பகுத்துத் தருகிறது. கணக்கிடுதல் போன்ற பணிகளையும் மிக விரைவாகச் செய்கிறது.

நீங்கள் பயன்படுத்தும் கால்குலேட்டர் கூட ஒரு வகை கம்ப்யூட்டர்தான். கடைகளில் 'பில்'போடும் எந்திரங்கள், வீடியோ கேம்ஸ், இரயில் நிலையத்தில் பயணச் சீட்டு பதிவு செய்து தரும் கருவி- இவை எல்லாமே கம்ப்யூட்டர்கள்தான்.

மைக்ரோ எலக்ட்ரானிக்ஸ் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக 'சிலிக்கன் சில்லுப் புரட்சி' நடந்தது. இன்டகிரேடட் சர்க்யூட்களை உள்ளடக்கிய மைக்ரோசிப்புகளைக் கொண்டு கம்ப்யூட்டர்கள் வேலை செய்கின்றன. கம்ப்யூட்டர்கள் அறிமுகமான போது 'ரொம்ப'வும் பெரிய சைசில் இருந்தன. இன்றோ நோட்புக் லாப்டாப் (Notebook, Laptop) என்ற பெயர்களில் அளவில் சுருங்கி, அறிவில் விரிந்து கிடக்கின்றன.



சரி குழந்தைகளின் கல்வி மற்றும் பொழுது போக்கு விஷயங்களுக்கு கம்ப்யூட்டர்கள் எந்த வகையில் உதவுகின்றன? ஆப்டெக் கம்ப்யூட்டர் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி பாரதியைச் சந்தித்தோம்.

"ஒரு மல்ட்டி மீடியா கம்ப்யூட்டர் இருந்தால் போதும். குழந்தைகளுக்கு மிகவும் பயனுள்ளதாய் இருக்கும். வீடியோ கேம்ஸ் எல்லாம் கம்ப்யூட்டருக்கு வந்தாச்சு. ஜாலியோ ஜாலி! தலையணை அளவு கலைக் களஞ்சியங்கள் நூல்கள் எல்லாம் 'சிடி ரோம்' என்ற சிறிய வட்டத் தட்டில் பதிவு செய்யப்பட்டுக் கிடைக்கின்றன. இவை தவிர 'மோடம்' என்ற தொலைபேசி இணைப்புக் கருவி மூலம் நம் கம்ப்யூட்டரை உலகின் வேறு பல கம்ப்யூட்டர்களோடு இணைக்க முடியும். கடிதங்கள் மற்றும் தகவல்களை மின் அஞ்சல் (e-mail) மூலம் அனுப்பலாம். நீங்கள் விரும்பும் அனைத்துத் தகவல்களையும் இணையம் (internet) மூலம் தேடி நொடிப் பொழுதில் திரட்டலாம்.

மல்ட்டி மீடியா கம்ப்யூட்டர் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

டி.வி. பெட்டி மாதிரி ஒரு மானிட்டர், தட்டச்சு செய்ய உதவும் ஒரு கீ போர்டு, ஒரு மௌஸ், இவற்றோடு வன் பொருள் (Hardware) கொண்ட ஒரு சிஸ்டம். இதுதான் பொதுவான கம்ப்யூட்டர். இதில் அடிப்படைத் தகவல்கள்- மென்பொருள் (Software) பதிவு செய்யப்பட்டிருக்கும். அதன் உதவி கொண்டு நாம் கடிதங்கள், மற்றும் தகவல்களைத் தட்டச்சு செய்து பிரிண்டர் மூலம் பிரதி எடுக்கலாம். தகவல்களை தேவையான பொழுதெல்லாம் மாற்றங்கள் செய்து மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம். கணக்கீடுகள் செய்வதற்கான மென்பொருள் பதிவு செய்து வைத்திருப்போமானால், அதையும் எளிதில் செய்யலாம்.

இது போன்றதொரு கம்ப்யூட்டரோடு சிடி ரோம் ட்ரைவ், ஸ்பீக்கர்கள்

கல்விக்கு

கொண்ட 'சவுண்ட் பிளாஸ்டர்' செட் பொருத்தினோமானால், மல்ட்டி மீடியா கம்ப்யூட்டராகி விடும். மிகத் துல்லியமான ஒலியை-இசை உட்பட கேட்க முடியும். திரைப்படங்களைக் கூட கம்ப்யூட்டர் திரையில் காண முடியும்.


இண்டர்நெட் மூலம் உலகின் எந்தப் பகுதிக்கும் மிகக் குறைந்த செலவில், விரைவாகத் தகவல்களை அனுப்பவோ, பெறவோ முடியும். அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களில் சேர விரும்பும் மாணவர்கள் இண்டர்நெட்

கம்ப்யூட்டர் பயன்படுத்தும் கண்மணிகள் கவனத்திற்கு!

* கம்ப்யூட்டர் விளையாட்டு சுவாரசியமாகத் தான் இருக்கும். ஆனால் அதிக நேரம் கம்ப்யூட்டர் திரையைப் பார்ப்பது உங்கள் கண்களுக்குக் கேடு விளைவிக்கும்.

* கம்ப்யூட்டர் விளையாட்டுகள் உங்கள் அறிவை வளர்க்கும். அதே நேரத்தில் உங்கள் உடலை வளர்க்க உதவும் உடற்பயிற்சி–விளையாட்டுகளை மறந்துவிட வேண்டாம்.

* கம்ப்யூட்டர்–இண்டர்நெட்–சிடிரோம்: இவற்றில் விளையாட்டுகள் தவிரவும் பயனுள்ள பல விஷயங்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றியும் அறிந்து கொள்வது அவசியம். குழந்தைகளுக்கான websiteகள், கலைக்களஞ்சியங்கள், பத்திரிகைகள், அறிவியல் நூல்கள் என ஏராளமாய் தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன. பாலையும் நீரையும் பிரிக்க வேண்டிய அன்னப் பறவையின் பணி உங்களுடையது தான்.



உதவுமா கம்ப்யூட்டர்?

மூலமே விண்ணப்பிக்கலாம். சில நிறுவனங்கள் நடத்தும் தேர்வுகளைக் கூட இண்டர்நெட் மூலம் இங்கிருந்தவாறே எழுதலாம். படித்து முடித்த பின் வேலை தேடவும் இண்டர்நெட் உதவும்.

ஆப்டெக் நிறுவனத்தில் குழந்தைகளுக்கு என்ன கற்றுத் தருகிறீர்கள்?

கம்ப்யூட்டர் அடிப்படைகள் பற்றி, கம்ப்யூட்டரிலேயே படம் வரைவது, பாடத்தில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்க்க இண்டர்நெட்டில் தகவல் திரட்டுவது எப்படி என்று, இன்னும் இண்டராக்டிவ் கேம்ஸ் என பல விஷயங்கள் கற்றுத் தருகிறோம். +2 முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் நிறைய கம்ப்யூட்டர் படிப்புகள் இருக்கின்றன. பகுதி நேரமாகவும் படிக்கலாம்."

குழந்தைகள் ஆர்வமாக பங்கேற்கிறார்களா?

குழந்தைகள் கம்ப்யூட்டரை மிகவும் விரும்புகிறார்கள். நிறைய கேள்விகள் கேட்கிறார்கள்.


டீ.வி. பார்ப்பதுபோல் கம்ப்யூட்டரே கதி என்று மூழ்கி விடுகிறார்களே?

ஆமாம். எதையும் அளவோடு செய்தால் நன்மைதான். படிக்க, விளையாட நேரம் ஒதுக்குவது போல் கம்ப்யூட்டருக்கும் ஒதுக்கிவிட்டால் பிரச்னை இல்லை.


"நன்றி பாரதி. நீங்கள் கூறிய நிறைய செய்திகள் குழந்தைகளுக்கு உதவியாக இருக்கும். மீண்டும் சந்திப்போம்."


"கம்ப்யூட்டர் பற்றி இன்னும் ஏராளமான விஷயங்கள் இருக்கு. எல்லாக் குழந்தைகளும் பயன்படுத்தக் கூடிய அளவில், பள்ளிக் கூடங்களுக்கெல்லாம் கம்ப்யூட்டர் வசதி வரணும். அதுதான், என் ஆசை."

அட்டையில்: டி. அர்பன்
வண்ணப்படம்: ஸ்ரீஹரி


தம்பி.. தர்மம்.. நடக்க முடியாதவன்
காசு போடாதே, குமார்..
ஐம்பது ரூபாய்
கதை: உம்மு அம்மாரா
படம்:
டேய் என்னடா ரவி! பாவம்டா.
ஒண்ணும் போடவேண்டாம் வா....வா.... எல்லாம் ஏமாற்று.
வழியில் புத்தகம் வாங்கிட்டு சீக்கிரம் வீட்டுக்குப் போகணும் அத விட்டுட்டு—....
தம்பி ஐயா... ஐயா...


புத்தகக் கடையில்~
தம்பி நீ கேட்ட மூணு புத்தகத்துக்கும் ரூ.48 ஆச்சு.
ஐம்பது ரூபாய் நோட்டு பையில தானே வச்சேன்!
காணோமா? ... என்னடா சொல்றே குமார்?!
ஸார், பணம் எங்கயாவது விழுந்திருக்கும். புக்ஸ் இருக்கட்டும். தேடி எடுத்துட்டு வரோம்!
அந்த ஆள்தான் திருடியிருப்பான்!
BOOK MARK
ரவி! அந்த ஆள் நம்மை நோக்கித்தான் வர்றமாதிரி தெரியுது.
அப்படியா?!


தம்பி இந்த ஐம்பது ரூபாய் நோட்டு உங்க பை யிலிருந்து விழுந்தது.
அப்பவே சொல்லக் கூடாதா?
நான் கூப்பிடக் கூப்பிட நீங்க பாட்டுக்குப் போயிட் டீங்களே!


ரொம்ப நன்றி சார்!
மன்னிச்சுடுங்க.. உங்களைத் தவறாய் பேசிட்டேன்.
அட... பரவா யில்லை தம்பி சந்தோஷமாய் போங்க!
முற்றும்

மந்திரக் கிழவியும் மாயாஜாலப் பானையும்

ஜானகி மணாளன்

சைபீரியாவில் ஒரு கிராமம். அங்கு ஒரு கணவன் மனைவி. மிகவும் வயதானவர்கள். அத்துடன் ஏழை.

அவர்களுக்கு இரண்டு மகன்கள். மூத்தவன் நைகோ. இளையவன் பக்சு. இருவரும் வேட்டையாடி உணவு தேடினர். ஆற்றில் மீன் பிடித்து வந்தனர். கிழவி அவற்றைச் சமைத்துப் போடுவாள்.

ஒருநாள் சகோதரர் இருவரும் நாள் முழுதும் வலை வீசியும் மீன் எதுவும் சிக்கவில்லை. கடைசியாக, ஒரே ஒரு சின்னஞ் சிறு மீன் சிக்கியது. அவர்கள் அதைத் தாயிடம் கொண்டு போய்க் கொடுத்தனர்.

கிழவி அதை நறுக்கக் கூரிய அரிவாள் மணையுடன் வந்தாள். அப்போது எங்கிருந்தோ ஒரு அழைப்புக் குரல். "பாட்டி...!"

'அழைத்தது யார்...?' கிழவி சுற்று முற்றும் பார்த்தாள். யாருமில்லை. அவள் பயந்து விட்டாள்.

அந்தச் சின்னஞ்சிறு மீன்தான், மீண்டும் மனிதக் குரலில் பேசியது "பாட்டி! என் செதிள்களை மட்டும் வெட்டிக் கொள். அவற்றுக்கு உப்பிட்டுச் சமைத்துச் சாப்பிடு. என்னை மீண்டும் ஆற்றிலேயே விட்டு விடு..." என்று கெஞ்சியது. கிழவி அவ்விதமே செய்தாள்.

அதன் செதிள்களைக் கிழவி ஒரு பானையில் இட்டாள். நீர் ஊற்றி உப்புப் போட்டாள். பிறகு அதை மூடி அடுப்பின் மீது வைத்து, பற்ற வைத்தாள். சற்று நேரத்தில் மீன் தளதளவென்று கொதிக்கத் தொடங்கியது. மூடியைத் தள்ளிக் கொண்டு நீராவி வெளி வந்தது. பாட்டி பயந்து போனாள்.


அதற்குள், திடீரென்று மூடி உயரே பறந்தது. வீடு முழுவதும் வெண்ணிற நீராவிப் புகை நிரம்பியது. அது அடங்கியதும் கிழவி பானைக்குள் எட்டிப் பார்த்தாள்.

என்ன ஆச்சர்யம்! பானை நிறைய ஏராளமான மீன்கள்!

அனைவரும் நீண்ட நாட்களுக்குப் பிறகு நிறைய சாப்பிட்டுப் படுக்கப் போனார்கள்.

நள்ளிரவு. கிழவர் திடீரென்று விழித்





துக் கொண்டார். குடிசை முழுவதும் பகல் போன்ற வெளிச்சம்.

உடனே அவர் மனைவியிடம் "எழுந்திரு... எழுந் திரு... பொழுது விடிந்து வெகு நேரம் ஆகி விட்டது..." என்றவாறு கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தார்.

ஆனால், வெளியில் நல்ல இருட்டு. வானத்து நட் சத்திரங்கள் அவரைப் பார்த்துக் கண் சிமிட்டின. அவர் மீண்டும் உள்ளே போனார். அறை யின் சுவரில் பை ஒன்று தொங்கிக் கொண் டிருந்தது. அதிலிருந்துதான் பகல் போன்ற பிர காசம் வந்து கொண்டிருந்தது.

அது ஒரு மாயாஜாலப் பை. சூரியனைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதை யார் அன்பளிப்பாக அனுப்பியது என் பது அவர்களுக்குப் புரிந்து விட்டது.

அதன் பிறகு அந்த வீட்டில் நிலவிய வறுமை சென்ற இடம் தெரியவில்லை. வீட்டில் மகிழ்ச்சி தாண்டவம் ஆடி யது. அவர்கள் அந்த மாயாஜாலப் பையைப் பத்திரமாகப் பாதுகாத் தனர்.

ஒருநாள் கெட்ட எண்ணம் கொண்ட மந்திரக் கிழவி ஒருத்தி, அவர்கள் வீட்டில் நுழைந்து, அவர்களின் மாயா ஜாலப் பையை எடுத்துக் கொண்டு காட்டை நோக்கி ஓடினாள். நைகோவும் பக் கவும் அவளைத் துரத்தினர்.

வெகு தூரம் ஓடிய பிறகு ஒரு காடு வந்தது. முதலில் கண் ணில் பட்ட ஒரு மரத்தி லிருந்து கள்ளி ஒன்றை

ஒடித்த மந்திரக் கிழவி, அதில் ஏதோ மந்திரத்தை ஜபித்து நைகோ அருகில் வந்ததும், அக்குச்சியால் அவன் தலையில் தட்டி, "ச்சூ... மந்திரக்காளி நாயாகப் போகக் கடவது..." என்றாள்.


அவ்வளவுதான் நைகோ நாயாகி விட்டான். அதேபோல் செய்து, பக்சுவையும் அவள் பூனையாக்கி விட்டாள். உடனே நாய் மந்திரக் கிழவியைப் பார்த்துக் குரைத்தது. பூனை 'மியாவ்... மியாவ்' என்று சீறியது.

அதைக் கண்டு உரக்கச் சிரித்த அவள், "நைகோ... நான் சாகும் வரையில் நீ நாயாகக் கிடப்பாய்... பக்சு நீயும்தான்... நான் நீண்ட நாள் வாழ்வேன்... சாகவே மாட்டேன்... கிடங்கள் இப்படியே..." என்று சபித்து விட்டு மறைந்து விட்டாள்.

வீட்டில் கிழவரும் கிழவியும் நீண்ட நேரம் மகன்களை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். வராதது கண்டு ஏமாந்தனர். சாலையோடு யார் போனாலும் 'மகனே நைகோ... மகனே பக்சு...' என்று அழைத்தனர்.

ஒருமுறை அப்படி அழைக்கும்போது, நாயும் பூனையும் அவர்கள் முன் போய் நின்றன. நாய் வாலை ஆட்டியது. பூனை அவர்கள் காலைச் சுற்றியது. அவைதாம் தமது மகன்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. எனினும் பாசத்தோடு அவற்றை வளர்க்கலாயினர். நாய் வீட்டைக் காத்தது. பூனை எலி பிடித்தது.

கிழவர் ஆற்றுக்குச் சென்று மீன் பிடித்து வரலானார். மிகுந்த சிரமத்துடன் நாட்கள்



நகர்ந்தன.

ஒருநாள் இரவு, பூனை ஒரு சுண்டெலியைப் பிடித்தது. உடனே அந்த எலி, "பக்சு... பக்சு..! என்னைக் கொல்லாதே.. நான் உனக்கு உதவுகிறேன்..." என்றது.

பூனை ஆச்சர்யம் அடைந்து "யார் நீ? எனக்கு உன்னால் எப்படி உதவ முடியும்...?" என்று கேட்டது.

அதற்கு எலி, "அந்த மந்திரக் கிழவி இருக்குமிடம் எனக்குத் தெரியும். என்னுடன் வா... காட்டுகிறேன்..." என்றது.

''அப்படியா...சரி...'' என்ற பூனை, "எனக்கு மீண்டும் எனது மாயாஜாலப் பை கிடைத்து விட்டால், நீ என்னுடனேயே தங்கி அதற்குக் காவலாக இருக்க வேண்டும்... சம்மதமா...?" என்றது.

"சரி...." என்ற சுண்டெலி முன்னே ஓட... அதைப் பூனையும் நாயும் பின் தொடர்ந்தன. மூன்றும் வெகுதூரம் ஓடின.

வழியில், பளபளக்கும் வெள்ளிக் குழம்பு போல் ஓடிய ஆறு குறுக்கிட்டது. அதை எப்படித் தாண்டுவது? மூன்றும் திகைத்து நின்றன.

ஆற்றின் கரையில் ஒரு தவளை உட்கார்ந்திருந்தது. பூனையும் நாயும் அதனிடம் "தவளையே... தவளையே... ஆற்றை நாங்கள் எப்படிக் கடப்பது...?" என்றன.

அதற்குத் தவளை. "ஆற்றங் கரையோடு மேலே போங்கள்... ஆறு வளையுமிடத்தில் ஒரு பாலம் இருக்கிறது..." என்றது.

மூன்றும் தொடர்ந்து ஓடின. பாலத்தை அவை கடந்தபோது, அவர்களை ஒரு குரல் வரவேற்றது. "ஹலோ... நைகோ...! ஹலோ பக்சு...! வந்து மாட்டிக் கொண்டீர்களா...?" என்றது.

குரலுக்குரியவள் யார் தெரியுமா? மந்திரக் கிழவிதான். தவளையாக வந்ததும் அவள்தான். மூவருக்கும் ஆற்றுப் பாலத்துக்கு வழி காட்டிய பிறகு, அந்தத் தவளை நீரில் குதித்து அக்கரையில் சேர்ந்து மீண்டும் மந்திரக் கிழவியாகி விட்டது. சுய உருவம் பெற்றுப் பாலத்துக்கு அருகில் வந்து பதுங்கியிருந்தாள் கிழவி.

அவள் தன் கைகளால், நாய் – பூனை இரண்டையும் 'லபக்'கென்று பிடித்துத் தரதரவென்று தன் வீட்டுக்கு இழுத்துச் சென்று, உள்ளே வைத்து வாசல் கதவைத் தாழிட்டு விட்டாள்.

நல்லவேளையாகச் சுண்டெலியை அவள் கவனிக்கவில்லை. சிறிது நேரத்தில் படுத்துத் தூங்கிப் போனாள் மந்திரக் கிழவி!


சுவரில் உயரமான இடத்தில், மாயாஜாலப் பை கயிற்றில் கட்டித் தொங்க விடப் பட்டிருந்தது. நாயும் பூனையும் அதையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தன.

அப்போது ஒரு சலசலப்பு ஒலி. வேறு யாருமல்ல. சுண்டெலிதான்! சுவரில் இருந்த விரிசல் வழியாக உள்ளே வந்த அது, ஓடிச் சென்று வாசல் கதவைத் திறந்து விட்டது.


மாயாஜாலப் பைக்கு நேர் அடியில், தனது இரண்டு பின்னங்கால்களையும் ஊன்றி மனிதனைப் போல் நிமிர்ந்து நின்றது நாய். பூனை அதன் தோள் மீது தாவி ஏறியது. பூனையின் தலை மீது ஏறி நின்ற சுண்டெலி, மாயாஜாலப் பை கட்டப்பட்டிருந்த கயிற்றைத் தனது கூரிய பற்களால் கடித்து அறுத்தது.

'கொர்க்... கொர்க்...' முதல் கயிறு அறுந்தது.

அந்தச் சத்தத்தைக் கேட்ட மந்திரக்



''நாவல்னா எனக்கு ரொம்ப இஷ்டம்டா.''
''யாரோட நாவல் விரும்பிப் படிப்பே?''
''நான் சொன்னது, நாவல் பழத்தை!''
— சீர்காழி வி. ரேவதி



"அர்ஜென்ட்டா வெளிநாடு போயிட்டிருக்கேன்..."

"எந்த நாட்டுக்கு?"

"அர்ஜென்ட்டினாவுக்கு!"

— டி.என். பாலகிருஷ்ணன்

கிழவி அரைத் தூக்கத்தில் "வீட்டில் என்ன சத்தம்?" என்றாள்.

அதைக் கேட்டு எலி பயந்து நடுங்கியது. எனவே மாயா ஜாலப் பை அந்த ஆட்டத்தில் சுவரில் மோதியது. நல்ல வேளையாகப் பூனை உடனே சலசலத்து ஓடும் மலையருவியைப் போன்று இனிமையாகப் பாடத் தொடங்கியது. அந்த இனிமையில் மந்திரக் கிழவி உடனே ஆழ்ந்து தூங்கிப் போனாள்.

மீண்டும் 'கொர்க்... கொர்க்...' இரண்டாவது கயிறும் அறுந்தது.

'கொர்க்... கொர்க்...' – மூன்றாவது கயிறும் அறுந்து போகவே, மாயாஜாலப் பை 'பொத்'தென்று கீழே விழுந்தது.

அதை உடனே நாய் 'லபக்'கென்று கவ்விக் கொண்டு வீட்டுக்கு வெளியே ஓடி விட்டது. பை வெளியில் போய் விட்டதால் வீடு முழுவதும் ஒரே இருள்!

நாயைப் பின் தொடர்ந்து பூனையும் வெளியில் ஓடியது. எலி அதன் தோள் மீது ஏறி அமர்ந்தது.

விழித்தெழுந்த மந்திரக் கிழவி, இருட்டில் தட்டுத் தடவி வெளியில் ஓடி வந்து அவற்றைத் துரத்தினாள். நாயும் பூனையும் ஆற்றை நெருங்கி விட்டன. பிடிபட்டு விடும் நேரம் நாய் சட்டென்று பூனையைத் தன் முதுகில் ஏற்றிக் கொண்டு எதிர்க் கரையை நோக்கி நீந்தத் தொடங்கியது.

ஏமாந்து போன மந்திரக் கிழவி, நீரில் இறங்கி நின்று ஏதோ மந்திரத்தை ஜபித்தவாறு, "என் முதுகு படகாக மாறட்டும்... எனது இரு கைகளும் அதன் துடுப்பாகட்டும். கால்கள் படகின் பின் பக்கமாகட்டும்..." என்றாள். உடனே அவள் படகாக மிதந்தாள்.

துடுப்புகள் வேகமாக இயங்கின. படகு ஆற்று நீரில் சீறிப் பாய்ந்து நாய், பூனை, எலியை நெருங்கியது.

உடனே நாய், "ஏ ஆறே...! உதவி செய்; எங்களைக் காப்பாற்று..." என்று வேண்டியது.

அவற்றிடம் இரக்கம் கொண்ட ஆறு, பேரலைகளைக் கிளப்பிப் படகைக் கவிழ்த்து, அதை இப்படியும் அப்படியும் புரட்டியெடுத்தது. படகின் துடுப்புகள் கழன்று உடைந்து சிதறின. பெரிய சுழல்கள் படகை நீருக்குள் அழுத்தின.

அதற்குள் எதிர்க்கரையில் ஏறிய நாய், பூனை, எலி மூன்றும் விரைந்து வீடு சென்றன. இரவு நேரம். கிழவரும் கிழவியும் தூங்கிக் கொண்டிருந்தனர். மூன்றும் அருகில் போய்ப் படுத்துத் தூங்கிப் போயின.

கடுமையான போராட்டத்திற்குப் பின் மந்திரக் கிழவி இறந்து போனாள். அதே நேரத்தில், அவள் இட்ட சாபத்தின்படி, வீட்டில் நாயும், பூனையும், உடனே நைகோ – பக்சுவாகச் சுய உருவம் பெற்று விட்டன.

பொழுது விடிந்தது. விழித்தெழுந்த கிழவரும், கிழவியும் அருகில் மகன்கள் படுத்திருப்பதைக் கண்டு, "ஹேய் நைகோ... ஹேய் பக்சு; எப்போது வந்தீர்கள்?" என்று கட்டி அணைத்துக் கொண்டனர்.

வழக்கம்போல் நைகோவும் பக்சுவும் வேட்டையாடச் செல்லலாயினர்.

கண்டெலி, மாயாஜாலப் பைக்குக் காவலாக அவர்கள் வீட்டிலேயே தங்கி விட்டது.

அந்த வீட்டில் மீண்டும் செல்வமும் மகிழ்ச்சியும் நிறைந்தன.



எங்கள் ஊரில் நடந்தது!

பலாப்பழம் சுளையாகக் கிடைக்கும்

சீப்பா கிடைக்கும்!

வெளியூரிலிருந்து மாமா வந்திருந்தார். என் பாட்டியிடம், "இந்த ஊரில் பலாப் பழம் ரொம்ப சீப்பா கிடைக்குமாமே?" என்றார். அதற்குப் பாட்டி, "இல்லைப்பா, இந்த ஊரில் வாழைப்பழம் தான் சீப்பா கிடைக்கும். பலாப்பழம் எல்லாம் சுளையாகத்தான் கிடைக்கும்" என்றார். மாமா குபீரென சிரித்து விட்டார். நாங்களும் அவர் சிரிப்பில் பங்கு கொண்டோம். பாட்டி ஒன்றும் புரியாமல் விழிக்க நான், "சீப் என்றால் மலிவு" என்று விளக்க அவரும் சேர்ந்து சிரித்து விட்டார்.



– ஐ. ஆபில் மகபூப்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
வத்தலக்குண்டு.

முழுக்கீரை!

பட்டணத்திலிருந்து ஒரு பையன் எங்கள் கிராமத்திற்கு வந்திருந்தான். அவன் பாட்டி



அவனிடம் "கடைக்குப் போய் ஏதாவது கீரை வாங்கிட்டுவா" என்றார். கடைக்குச் சென்றவன் சிறிது நேரத்தில் திரும்பி வந்தான். "ஏன் கீரை இல்லையா?" என்றார் பாட்டி. "பாட்டி அரைக்கீரைதான் இருந்தது என்று கடைக்காரர் சொன்னார். முழுசா கீரை வாங்கலைன்னா நீங்க திட்டுவீங்களேன்னு திரும்பி வந்துட்டேன்" என்று கூறினான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அனைவரும் சிரித்து விட்டோம். பாட்டி அவனுக்கு விளக்கிக் கூறினார்.

– நா.பா. குகன், எட்டாம் வகுப்பு,
அ.மே.நி. பள்ளி, பெரியதச்சூர்
அஞ்சல்.

ஒன்று பத்து....

நானும் நண்பனும் கடைத் தெருவிற்குச் சென்றிருந்தோம். நண்பன்



பிஸ்கெட் வேண்டுமென்றான். இருவரும் கடையில் இருந்த பிஸ்கெட்டைக் காட்டி, "என்ன விலை?" என்றோம். "ஒன்னு பத்து" என்றார் கடைக்காரர்.

என் நண்பன் முப்பது பைசா கொடுத்து மூன்று பிஸ்கெட் கேட்டான். கடைக்காரர் எங்களை ஒரு மாதிரியாகப் பார்த்தார். நாங்கள் என்னவென்று கேட்டோம். "நான் சொன்னது ஒரு பிஸ்கெட் ஒரு ரூபாய் பத்துக் காசு" என்றார். அருகிலிருந்தவர்கள் சிரிக்க ஆரம்பித்தனர். பிறகு இரண்டு பிஸ்கெட்டுகளை வாங்கிக் கொண்டு திரும்பினோம்.

– இராம. ஜெயகாந்தன், துத்திப்பட்டு.

பச்சையாக....



எங்கள் ஊர் திருவிழாவில் நாடகம் போட்டிருந்தனர். அதில் கோமாளியாக நடித்தவர், "மரம், செடி, கொடிகளெல்லாம் ஏன் பச்சையாக இருக்கு?" என்று கேட்டார். அதற்கு அவருடன் நடித்தவர் "தெரியாது" என்றார். கோமாளியாக நடித்தவர், "பச்சைத் தண்ணீர் ஊற்றுவதால் தான் பச்சையாக இருக்கு" என்றாரே பார்க்கலாம்!

– ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

கிறுக்கு வேண்டாம்!

ஊரிலிருந்து மாமா வந்திருந்தார். உடனே தம்பியிடம் அம்மா "பால்,



முறுக்கு கிறுக்கு ஏதாவது வாங்கிட்டு வா" என்று பையும் காசும் கொடுத்தார். "அம்மா முறுக்கு மட்டும் வாங்கிட்டு வர்றேன். கிறுக்கெல்லாம் வேண்டாம். இது ஒன்னை வைத்தே சமாளிக்க முடியலை" என்றான் என் தங்கையைக் காட்டி. மாமா சிரிக்க என் தங்கை அழ ஆரம்பித்தாள். அவளை சமாதானம் செய்ய சாக்லேட் வாங்கிக் கொடுக்க வேண்டியதாயிற்று.

– சி. செல்வி, வேலூர்.

புளியம்பழம்!

வீட்டில் சர்க்கரைப் பொங்கல் செய்திருந்தார்கள். பொங்கலைச் சாப்பிட்ட என் குட்டித் தம்பி, "அம்மா புளியம் பழம் போடுங்கம்மா" என்று கேட்டான். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. "புளியம் பழம் எங்கிருக்கு?" என்று கேட்டார் அம்மா. "பொங்கலில் போட்டிருக்கீங்களே அந்தப் புளியம் பழத்தைத்தான் கேட்டேன்" என்றான் தம்பி. உலர் திராட்சை புளிப்பாக இருந்ததால் புளியம்பழம் என நினைத்து விட்டான் என்று பிறகுதான் புரிந்தது.

– மு. தனகோபாலன், மன்னார்குடி.

யார் கெட்டிக்காரன்?

கோபாலன், கோவிந்தன் என்ற இரு நண்பர்கள் பத்ரிநாத் - கேதார்நாத் யாத்திரை புறப்பட்டார்கள். அந்தக் காலத்தில் ரயில், பஸ், காரெல்லாம் கிடையாது. மாட்டு வண்டிப் பயணம் தான். அதற்கு வசதி இல்லாததால் நடந்தே சென்றார்கள்.

ஆங்காங்கே பஜனை செய்தும், உழைத்தும் பசி தீர்த்துக் கொண்டார்கள்.

நடுவில் ஒரு கிராமத்தில் வேலுச்சாமி



என்ற கிராமவாசி வீட்டில் இரவு தங்க நேரிட்டது. வேலுச்சாமிக்கும் பத்ரிநாத் - கேதார்நாத் போக வேண்டுமென்பது நீண்ட நாள் ஆசை.

அதை அவர்களிடம் தெரிவித்து, "நான் உங்களுக்குப் பாரமாக இருக்க மாட்டேன். எனக்கும் நிறைய பஜனைப் பாடல்கள் தெரியும். அதோடு எந்த வேலையும் செய்ய பின் வாங்க மாட்டேன். கொஞ்சம் பணமும் சேர்த்து வைத்திருக்கிறேன்" என்று கெஞ்சினான்.

அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். மறுநாள் மூவரும் புறப்பட்டனர். ஒரு வாரம் சென்றது. ஒரு கிராமத்தில் அவர்கள் மூவருக்கும் வேலையே கிடைக்கவில்லை! பஜனை செய்ததில் கொஞ்சம் அரிசியும், பருப்பும் கிடைத்தன. ஆனால் மூவர் பசி தீர்க்க அது போதாது. ஆனாலும் என்ன செய்வது?

மூன்று கற்களை வைத்துக் காட்டுச் சுள்ளிகளை ஒடித்து பொங்கல் தயாரித்தான் கோவிந்தன். பிறகு "நாம் மூவரும் உறங்குவோம். நிச்சயம் கனவு வரும். யார் கண்ட கனவு உயர்ந்ததாக உள்ளதோ அவர் பசியாறட்டும். மற்ற இருவரும் விரதம் இருப்போம்" என்றான்.

மூவரும் நிழலில் படுத்தனர். பசி குடலைப் பிறாண்டியதால் மூவருக்கும் உறக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தனர்.





''வேலுச்சாமி தூங்கி விட்டாயா?'' என்று கேட்டான் கோவிந்தன். "தூக்கம் வரமாட்டேனென்கிறது'' என்றான் வேலுச்சாமி. சற்று நேரம் பொறுத்து இதே கேள்வியைக் கேட்டான் கோபாலன். அப்போதும் அதே பதிலைச் சொன்னான். மூன்றாவது தடவை கோவிந்தன் கேட்ட போது வேலுச்சாமி அசையாமல் இருந்தான்.

சிறிது நேரத்தில் "கோபாலா, வேலு தூங்கி விட்டான். எழுந்திரு என்று கோபாலனை உசுப்பினான் கோவிந்தன். எழுந்து உட்கார்ந்த கோபாலன் "நீ ஏன் அப்படிச் சொன்னாய்?" என்று முறைத்தான்.

"உன்னுடன் சாப்பாட்டைப் பகிர்ந்து கொள்ளவே அவ்விதம் சொன்னேன். நீ வைகுண்டத்திற்குப் போனதாகக் கனவு கண்டதாகச் சொல். நான் சொர்க்கம் சென்று பாரிஜாத மரம், சிந்தாமணி நகரம் எல்லாம் பார்த்ததாகச் சொல்கிறேன். அவன் கிராமத்தான். அவன் கனவில் என்ன வரும்? உழவும், மாடுகளும், வயலும், கலப்பையும்தான் வரும். நம் கனவே மேலானது என்று கூறி உணவைப் பகிர்ந்து கொள்வோம். எப்படி எனது யோசனை?'' என்று கேட்க கோபாலன் முகம் மலர்ந்து, ''அருமையான யோசனை'' என்று நண்பனைப் பாராட்டி விட்டுப் படுத்துக் கொண்டான்.

சாப்பாடு நமக்கு நிச்சயம் என்று நம்பியதால் சற்று நேரத்தில் அவர்களுக்கு நிம்மதியான உறக்கம் வந்தது.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு படுத்திருந்த வேலுச்சாமி 'அப்படியா சங்கதி! கிராமவாசி என்றால் அப்பாவி, முட்டாள் என்று அர்த்தமா? நட்புக்கு இதுவா இலக்கணம்! என் சாமர்த்தியத்தை எழுந்தவுடன் புரிந்து கொள்வீர்கள்' என்றபடி பானையிலிருந்த சூடான பொங்கலை சப்தமிடாமல் சாப்பிட்டு முடித்தான். இருந்தபடி மூடி வைத்தான். கையைச் சுத்தம் செய்து

மாலதி

உயிரினும் சிறந்தது...

உயிர் உயிர் உயிர் அதன்
தேவை யை — நாம்
உண்மை யாக எல்லாருமே
உணருவோம்

உயிர் மட்டும் இல்லா விட்டால்
அனைத்துமே — இங்கு
ஊர் அறிந்த சவங்கள் ஆக
மாறுமே?



ஆத லினால் உயிரை நாம்
மதிக்கிறோம் — மிக
அக் கறையாய் உயிரைக் காக்க
முனை கிறோம்.

உயிரை விடச் சிறந்த தென்று
வள்ளுவர் — வேறு
ஒன்றை அன்றே மிக அழுத்திச்
சொல்லி னார்.

உண்மை யான ஒல் ஒழுக்கம்
ஒன்று தான் — இந்த
உயிரை விட மிக மிகவும்
உயர்ந்த தாம்!

உண்மை யான அந்த நல்ல
ஒழுக்க மே — நமக்கு
உலகம் போற்றும் மேன்மை
பெற்றுக்
கொடுக்குமாம்!

— ரா. பொன்ராசன்

ஒழுக்கம் விழுப்பம் தரலான் -
ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.


கொண்டு படுத்தனர்.

வயிறு நிறைந்திருந்ததால் உடனே உறங்கி விட்டான். கோபாலனும், கோவிந்தனும் உலுப்பிய உலுப்பலில் விழித்துக் கொண்டான்.

"என்ன நீ இப்படித் தூங்குகிறாய்? நீ கண்ட சொப்பனத்தைக் கூறு" என்றனர்.

வேலுச்சாமி அமைதியாக "முதலில் கைலாசம்; பிறகு வைகுண்டம், சத்திய லோகம், சிந்தாமணிக் கிரகம், சொர்க்கம், கந்தர்வ, வித்யாதர லோகம் என்று ஈரேழு பதினான்கு லோகங்களையும் பார்த்து மகிழ்ந்ததினால் இதைவிட மேலான கனவை உங்களால் காண முடியாது" என்று தீர்மானித்து சாதம் முழுவதையும் நானே சாப்பிட்டு விட்டேன். உண்ட மயக்கம் அயர்ந்து விட்டேன். நீங்கள் பேசிக் கொண்டபடி வைகுண்டமும், சொர்க்கமும்தானே போனீர்கள்?" என்று சாவகாசமாகக் கேட்டான்.

சாதப் பானையைத் திறந்து பார்த்த இருவரும் பேயடித்தது போல் நின்றனர்.





குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம்

1. நிலவில் காலடி வைத்த முதல் மனிதர் (6)
2. மூங்கில், கரும்பு இவ்வகைத் தாவரங்கள் (2)
4. முல்லைக்குத் தேர் கொடுத்த மன்னன் (2)
11. குச்சியை இப்படியும் அழைக்கலாம் (2)
12. நட்சத்திரங்கள் இதில் தெரியும் (2)
13. சுதந்தரப் போராட்ட வீரர்கள் பலர் அந்தமானிலுள்ள இதில் அடைபட்டு அல்லலுற்றார்கள் (2)
14. வாட்டிகன் நகரம் இங்கு உள்ளது (2)
16. நோய்க்கு இன்னொரு பெயர் (2)

வலமிருந்து இடம்

3. சுவைக்கு இன்னொரு பெயர் (2)
5. குழந்தையை இப்படியும் அழைக்கலாம் (2)
6. மாடுகளில் ஒரு இனம் (2)
7. பழத்தை இப்படியும் அழைக்கலாம் (2)
15. மக்கள் கூடும் இடத்திற்கு பெயர் (2)
18. உப்பு சத்தியாகிரகம் நடந்த இடம் (6)

மேலிருந்து கீழ்

1. பழங்களில் ஒன்று. பதினொன்று சுளைகளை உடையது (4)
6. மார்கழி மாதத்தில் இது பொழியும் (2)
9. கண்ணாடியில் ஒட்டாத திரவம் (5)


கீழிருந்து மேல்

4. ஃபிரான்ஸ் தலைநகரம் (3)
8. ஒலியின் அலகு (4)
10. சுதந்தரப் போராட்டத்தில் இந்த இளைஞரை தூக்கிலிட்டது ஆங்கிலேய அரசு (5)
12. இம்மரத்தின் அனைத்து பாகங்களும் பயன்படும். விதை கிடையாது (2)
16. 1994ஆம் ஆண்டு கால்பந்து உலகக் கோப்பையை வென்ற நாடு (4)
17. அரசர்கள் இதில் பயணம் செய்வர் (3)
18. மன்னனை இப்படியும் அழைக்கலாம் (4)

– வ. ஏழுமலை
கல்லாவிப்பட்டு,
தளவானூர் அஞ்சல்,
செஞ்சி தாலுகா.

விடை - 61 ஆம் பக்கம்

பிருந்தாவனம்



கி.மு. 74ல் ரோமானியர் நாணயங்களில், டால்ஃபின் ஒரு பையனைச் சுமந்து கொண்டு செல்வது போல் படம் பொறிக்கப்பட்டிருந்தது.

– உலகச் செய்திகள் 1000

பி. ராஜசேகரன்

அனிமல்

மிருகங்களுக்கு ஆங்கிலத்தில் அனிமல் என்ற பெயர் எப்படி வந்தது?

இலத்தீன் மொழியில் அனிமா என்றால் உயிர் அல்லது பிராணன் என்று பொருள். அனிமா என்ற சொல்லிலிருந்துதான் உயிர்ப் பிராணிகளைக் குறிக்கும் அனிமல் என்ற ஆங்கிலச் சொல் வந்தது!

ஆதாரம்: எப்படி வந்தது?



கே.ஆர். ரவீந்திரன்

கண்ணாடியைப் பார்



ஒரு பெண் பெர்னாட் ஷாவைக் காண வந்தார். அவரை மடக்கிவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் "இன்று எப்படியும் ஒரு முட்டாளைப் பார்த்து விடுவது என்ற முடிவுடன் புறப்பட்டேன்" என்றார் அவர்.

உடனே பெர்னாட்ஷா "வழியில் கைப்பையில் உள்ள கண்ணாடியை எடுத்து உங்களை ஒருமுறை பார்த்துக் கொண்டிருப்பீர்களே" என்று கேட்டதும் அந்த அம்மையார் மௌனமாகி விட்டார்!

புத்தகப் பிரியர்

பாரசீக நாட்டு மன்னர் அப்துல் காசிம் இசுமாயில் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் புத்தகப் பிரியர்.




1, 17,000 புத்தகங்கள் அவர் நூலகத்தில் இருந்தன. படையெடுப்புக் காலங்களில் அந்தப் புத்தகங்களையும் உடன் எடுத்துச் செல்வாராம். 400 ஒட்டகங்கள் புத்தகங்களை எடுத்துச் செல்ல நூலக அதிகாரிகளும் உடன் செல்வதோடு, மன்னர் கேட்கும் நூலை எடுத்துத் தருவார்களாம்.

துணுக்கு மலர்கள் என்ற நூலிலிருந்து.

க. குழந்தைவேல்,
மேட்டுத் திருகாம்புலியூர்

●●●



ஒன்... டூ... த்ரீ... என்று ஆங்கிலத்தில் எழுதி வாருங்கள். ஆங்கில எழுத்துகளில் முதல் எழுத்தான 'A' ஆயிரம் (தௌஸண்ட்) என்று வரும்போதுதான் ஸ்பெல்லிங்கில் இடம் பெறுகிறது. 999 வரை 'A' என்ற முதல் எழுத்து வரவே வராது!

●●●

உலகின் நான்கு சமுத்திரங்களில் பசிபிக், அட்லாண்டிக் ஆகிய சமுத்திரங்களுக்கு அடுத்த

படியாக மூன்றாவது இடத்தில் இருப்பது இந்து சமுத்திரம் ஆகும்.

இந்து சமுத்திரத்தின் பரப்பு 7 கோடியே 40 இலட்சம் சதுர கிலோ மீட்டர். செங்கடல், பாரசீக வளைகுடா, அந்தமான் கடல், வங்காள விரிகுடா, அரபிக்கடல் ஆகியவற்றை இது தன்னுள் கொண்டுள் ளது.

ஆசியா, ஆப்பிரிக்கா, அண்டார்ட்டிகா ஆகிய மூன்று கண்டங்களை இதன் நீர் தொடுகிறது. இந்த மூன்று கண்டங்களிலும் இதன் நீர் தொடும் பெரிய நாடு இந்தியா, எனவே தான் இதற்கு இந்து சமுத் திரம் (Indian ocean) என்று பெயர் சூட்டப் பட்டுள் ளது.


– எம். சகிலா பானு

●●●



ஸ் பெயின் நாட்டில் ஒரு பத்திரிகை துணியில் அச் சடித்து வினி யோகிக்கப் படுகிறது.

எந்தக் கடி கார விளம்பர மும் நேரம் 10:10 என்று தான் காட் டும். ஆபிரகாம்



லிங்களை சுட்டுக் கொன்ற நேரம் இது. அப்போது அவர் கையில் இருந்த வாட்ச் அதே 10.10ல் நின்று போனது.

●●●

ஜப்பானியர் கள் முதலில் ஆண் டையும், அடுத்து மாதத்தையும் அடுத்து தேதியையும் எழுதுகிறார்கள். அமெரிக்கர்கள் முதலில் மாதம் அடுத்து தேதி, அதற்கடுத்து ஆண்டு என எழுதுகிறார்கள்.

10 நிமிடம் ஓடக் கூடிய கார்ட்டூன் திரைப் படத்திற்கு சுமார் 1100 சித்திரங்கள் தேவைப் படும்.

யானையின் துதிக்கை யில் சுமார் 40 ஆயிரம் தசைகள் இருக்கின்றன. ஒரு டன் எடையைக் கூட அது தூக்கி விடும்.



உலகிலேயே சீனாவில்தான் சைக்கிள்கள் அதிகம்.

உலகில் பிரசித்தி பெற்ற பொழுது போக்கு, தபால்தலை சேகரிப்பதுதான். இதற்கு இன் றைய வயது 147.



சாதாரண ஒரு யானை நாள் ஒன்றுக்கு 200 கிலோ உணவு சாப்பிடும்.

1001 ஆச்சர்ய செய்திகள் என்ற நூலிலிருந்து

குடந்தை ஆர்.எஸ். நாதன்,
கும்பகோணம்.

கிரிக்கெட்

-வேதியியல்

பா. அகிலா

பிரசாத் குடும்பம் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்து ஒரு வாரமாகி விட்டது. அக்கம் பக்கத்தில் பிரசாத் வயதை யொத்த மாணவர்கள் யாரும் இல்லாத தால் அவனுக்குப் பொழுதே போக வில்லை.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பிரசாத்திற்கு எதிர்வீட்டில் ஒரு பைய னைப் பார்த்ததும் முகம் பிரகாச மாகியது.

பிரசாத் அவனிடம் பேசலாம் என வாசலுக்கு வந்தான். அந்தப் பையன் விருட்டென்று உள்ளே சென்று விட்டான். ஏமாற்றத்துடன் திரும்பினான் பிரசாத்.

"ஏண்டா பிரசாத். ஒரு மாதிரி யிருக்கே?" என்று கேட்ட படியே வந்தார் அம்மா.

"அம்மா, எதிர்வீட்ல ஒரு பைய னைப் பார்த்தேன். பேசலாம்னு கிட்டே போனால் அவன் வீட்டிற்குள் சென்று விட்டான்" என்றான்.

"இதுக்கு ஏன் வருத்தப்படறே? நேரா அவங்க வீட்டிற்குப் போய் அறிமுகப் படுத்திக்கிட்டு பேசு" என்று அனுப்பி வைத்தார் அம்மா.

பிரசாத் தயங்கித் தயங்கி அழைப்பு மணியை அழுத்தினான்.

கதவு திறந்ததும் "ஆன்ட்டி, நாங்க எதிர்வீட்டுக்குப் புதுசா குடி வந்திருக் கிறோம். என் பெயர் பிரசாத்" என்று கூறியபடி வாசலில் நின்றான்.

"உள்ளே வாப்பா" என்றார் அந்த அம்மா.

"ஆன்ட்டி இங்கே பசங்க யாராவது இருக்காங்களா?" என்று சுற்றும் முற்றும் பார்த்தவாறு கேட்டான் பிரசாத்.

"என் மகன் தீபக் இருக்கிறான். இதோ கூப்பிடறேன். தீபக் இங்கே வா. எதிர்வீட்ல புதுசா குடி வந்திருக்கிற பிரசாத் உன்னைப் பார்க்கணுமாம்" என்றார்.

"நான் யாரையும் பார்க்க மாட்டேன்" என்று உள்ளேயிருந்தே குரல் கொடுத்தான் தீபக். தீபக்கை கட்டாயப்படுத்தி அழைத்து வந்து உட்கார வைத்தார் அவன் அம்மா.

"ஹலோ நான் பிரசாத், எதிர் வீடு. அக்கம்பக்கத்தில் பசங்களே இல்லை. ஒரு வாரமாக பயங்கர போர்! இன்று உன்னைப் பார்த்ததும் ரொம்ப சந்தோஷப் பட்டேன்" என்றான் பிரசாத்.

"எனக்கு வேலை யிருக்கு. உனக்கு என்ன வேணும்?" என்று கோபமாகக் கேட்டான் தீபக்.

"என்னிடம் கிரிக்கெட் பேட்டும், பந்தும் இருக்கு விளையாட..." முடிப் பதற்குள் குறுக்கிட்டான் தீபக்.

"நீ எழுந்து போய்விடு" என்று கத்திக் கொண்டே தன் அறைக்குப் போய் கதவை மூடிக் கொண்டான் தீபக்.

பிரசாத் செய்வதறியாது திகைத் தான். "ஆன்ட்டி, நான் என்ன சொல் விட்டேன்னு தீபக் இப்படி கோபப்பட றான்?" என்று கேட்டான் பிரசாத்.

"உன் மேல் தப்பு எதுவுமில்லை. அவனுக்குக் கிரிக்கெட் என்ற பேரைக் கேட்டாலே கோபம் வந்து விடுகிறது. அந்த சம்பவத்திற்கு பின்..." என்று கூறி நிறுத்தினார்.

"என்ன சம்பவம் ஆன்ட்டி. நான் ஏதாவது உதவ முடியுமான்னு பார்க்கிறேன்" என்றான்

பிரசாத்.

தீபக்கின் அம்மா சொல்ல ஆரம்பித்தார்.

மறுநாள் வேதியியல் தேர்வு. இயற்பியல் தேர்வு முடிந்து வீட்டிற்கு வந்தான் தீபக். மதியம் வீட்டில் அம்மா இல்லாதது எரிச்சலாக இருந்தது. உறவினர் திருமணத்திற்கு காலையிலே புறப்பட்டுச் சென்று விட்டார்கள் அம்மாவும், அப்பாவும். நாளை காலையில்தான் திரும்புவார்கள்.

அவனாகவே சாப்பாடு எடுத்து வைத்துச் சாப்பிட்டான். சோபாவில் வந்து உட்கார்ந்தவன் அன்றைய செய்தித்தாளைப் புரட்டினான்.

'இந்தியா-பாகிஸ்தான் - இறுதி ஒரு நாள் கிரிக்கெட்: கோப்பை யாருக்கு?' என்ற வரிகள் கண்ணில் பட அவசரமாகச் சென்று டீ.வியைப் போட்டான்.

அது பகலிரவுப் போட்டியாதலால் அப்பொழுதுதான் டாஸ் போட்டுக் கொண்டிருந்தார்கள். டாஸில் வென்றது இந்தியா. சந்தோஷப்பட்டான் தீபக். இந்தியா முதலில் பேட்டிங்கைத் தேர்ந்தெடுத்தது.

முதல் ஐந்து ஓவர் வரை பார்த்து விட்டு படிக்க வேண்டும். அம்மா இருந்தால் டீ.வியே பார்க்க முடியாது என்று நினைத்தபடி சோபாவில் சென்று அமர்ந்தான் தீபக்.


முதலில் களமிறங்கிய டெண்டுல்கர் நன்றாக விளையாட, ஐந்து ஓவர் கழித்து படிக்க வேண்டும் என்று நினைத்திருந்ததையே மறந்து விளையாட்டிலேயே மூழ்கிப் போனான்.

இந்தியா பேட்டிங் முடித்தவுடன் கிடைத்த இடைவேளையில் பரீட்சை நினைவிற்கு வந்தது.

வேதியியல் புத்தகத்தை எடுத்து வைத்துப் படித்தான்.

கண்கள் பாடத்தில் ஓட, மனம் சச்சின் அடித்த சிக்ஸரையே நினைத்துப் பார்த்தது.

திரும்பவும் ஆட்டம் தொடங்கியது. மனம் படிக்கவில்லையே என்று 'படக் படக்' என்று அடித்துக் கொண்டாலும் தீபக்கினால் விளையாட்டைப் பார்க்





வட்ட வட்டப் பூரி
விம்மிப் பருத்த பூரி
குட்டித் தம்பி தின்னும்
கோது மைமாப் பூரி

மாவை அடித்துப் பிசைந்து
மாலா தேய்ப்பாள் அசைந்து
தேவை யான அளவு
தின்போம் மசால் பூரி

எண்ணெய் சட்டி ஏறி
எழும்பி மிதக்கும் பூரி
எண்ணி எடுப்பாள் மேரி
எனக்குக் கொடுப்பாள் பூரி

— வேட்டைநல்லூர் தமிழன்பன்

காமல் இருக்க முடியவில்லை.

இறுதியில் பாகிஸ்தான் இந்தியாவை விட நன்றாக விளையாடி கோப்பையைத் தட்டிச் சென்றது.

ஆட்டம் முடிந்தபோது மணி இரவு பதினொன்று. அதன்பின் படிக்க நினைத்த தீபக்கின் கண்களில் தூக்கக் கலக்கம். இந்தியா தோற்றதால் ஏற்பட்ட வருத்தம் வேறு!

புத்தகத்துடன் அப்படியே சோபாவில் தூங்கிப் போனான்.

காலையில் ஊரிலிருந்து வந்த அம்மா எழுப்பிய பொழுது மணி ஏழு முப்பது. அதன்பின் பரீட்சைக்கு புறப்பட மட்டுமே நேரம் இருந்தது.

பரீட்சைக்கு ஒன்றுமே திருப்பிப் படிக்கவில்லை என்ற பயத்திலேயே தெரிந்த கேள்விகளைக் கூட ஒழுங்காக எழுதவில்லை தீபக்.

"தேர்வு முடிவு வந்தபோது தீபக் தேறியிருந்தாலும் அவன் எதிர்பார்த்த மதிப்பெண் அந்தப் பாடத்தில் கிடைக்காததால் பட்டப் படிப்பில் இடம் கிடைக்கவில்லை. அந்த வருத்தத்தில் யாரிடமும் பேசுவதில்லை. கிரிக்கெட் என்ற வார்த்தையைக் கேட்டாலே கோபப்படுகிறான்'' என்று வருத்தத்துடன் கூறினார் தீபக்கின் அம்மா.

''ஆன்ட்டி கவலைப்படாதீங்க. எங்கப்பாவே வேதியியல் ஆசிரியர் தான். தீபக்கை தினமும் வந்து பார்த்து, பேசி பழைய நிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்கிறேன்'' என்றான் பிரசாத்.


"தேங்ஸ் பிரசாத். நாளைக்கு உன் வீட்டிற்கு வந்து தீபக் விஷயமாக உங்கப்பாவிடம் பேசுகிறேன்'' என்றார் தீபக்கின் அம்மா.

"ஆன்ட்டி அம்மா கூப்பிடற சத்தம் கேட்குது. நான் நாளைக்கு மறுபடியும் வரேன்'' என்று கூறிய பிரசாத் தன் வீட்டை நோக்கி ஓடினான்.


தீரசேனன் வென்ற திகில் மலை!
2
கதை : விஜி படம் : தாமரை
தீரசேனன் விரைவில் சாமந்தி மலையை அடைந்தான்.
இளைஞனே தாகமாக இருக்கிறது. தண்ணீர் கொடேன்.
இதோ ஐயா!
மலை உச்சியை அடைய மூன்று நாட்களாகும். தண்ணீர் போதாதே!
பரவாயில்லை. முதலில் உங்கள் தாகம் தணியட்டும்.
தங்களுக்குப் பசி ஏற்பட்டுள்ளது போல் தெரிகிறதே! உணவு சாப்பிடுங்கள்.
நீ நன்றாக இருப்பாய்!
ஐயா, நான் திரும்பி வரும்போது தங்களைச் சந்திக்கிறேன்.
நில்! இதில் கூழ் இருக்கிறது. இதைச் சாப்பிட்டால் பசியே ஏற்படாது. கூழும் குறையாது.
அப்படியா?
ஆமாம். அத்துடன் இந்த வாளையும் வைத்துக் கொள். எந்தத் தீய சக்தியும் உன்னை அண்டாது.


நன்றி ஐயா. நான் வருகிறேன்.
தீரசேனன் மலையில் ஏற ஆரம்பித்தான். பார்க்கும் இடமெல்லாம் அடர்ந்த பச்சை மரங்கள்.
தீரசேனன் மன உறுதி கொண்டு முன்னேறினான். அப்போது –
ஆ! மலைப் பாம்பு!
கண்ணிமைக்கும் நேரத்தில் தீரசேனனை மலைப் பாம்பு சுற்றிக் கொண்டது!


தன் பலத்தையெல்லாம் சேர்த்து இடையில் இருந்த வாளை எடுத்தான் தீரசேனன்.
மலைப்பாம்பு தீரசேனனை விட்டு விலகி ஓடியது.
இந்த வாளுக்கு இவ்வளவு சக்தியா?
தீரசேனன் நீண்ட நேர பயணத்துக்குப் பின் ஆற்றை அடைந்தான்.
ஐயோ! பனிக்கட்டியில் கால் வைத்தது போல் இருக்கிறதே!
சற்று யோசித்த தீரசேனன் அங்கிருந்த நீண்ட கொடியைப் பறித்தான்.
கொடியில் கல்லைக் கட்டி அக்கரையில் உள்ள மரக் கிளையை நோக்கி வீசினான்.


என் குறி தவற வில்லை!
கொடியில் தொங்கியபடி அக்கரையை அடைந்தான் தீரசேனன்.
என்ன கஷ்டம் வந்தாலும் எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும்.
குகை மிகவும் இருளாக இருக்கிறது. ம்.... உயிர் பிழைப்பதே கடினம் போல் தெரிகிறது.
தொடரும்


ஐஸ்கிரீம் போல்...

❖ உலகக் கோப்பை கால்பந்தாட்ட சீசனுக்கு ஏற்றார் போல் கால் பந்தாட்டச் செய்திகளை அழகாகத் தொகுத்து வழங்கி என்னைப் போன்ற ரசிகர்களை அசத்தி விட்டீர்கள்!

– ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

❖ அட்டைப்பட பாப்பாவுக்கு கண்பட்டு விடப் போகிறது! அ.சு. கிருஷ்ணனின் 'யாரும் வேண்டாம்' படக்கதை ஒற்றுமையாக வாழ ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

– அ. கோபால கிருஷ்ணன், மோகனூர், நாமக்கல்.



❖ 'கிரிக்கெட் பயிற்சி பெறுவது எப்படி?' என்ற பக்கத்தைப் பார்த்தவுடனே என் மனம் ஐஸ்கிரீம் போல் ஜில்லிட்டு குதூகலித்தது. நான் கிரிக்கெட்டில் ஆர்வம் உள்ளவன். என் போன்ற பலருக்கு இது மிக மிக பயனுள்ள செய்தி.

– ஆர்.வி. மயில்வாகனன், டான்பாஸ்கோ உயர்நிலைப் பள்ளி, கோ.புதூர், மதுரை.

❖ வண்ண லேபில்கள் இலவசமென்று அட்டையில் போட்டு விட்டு அந்த பக்கங்களுக்கும் பக்க எண்ணை போட்டிருக்கிறீர்களே! இது இலவசம் இல்லை தானே!

– து. கார்த்திகேயன், கோவில்பட்டி.

தபால் துறை மூலம் அனுப்ப பக்க எண் போடுவது அவசியம். கோகுலத்தின் வழக்கமான பக்கங்கள் 80. இந்த லேபில்களுக்காக 84 பக்கங்கள் வரை போடப்பட்டுள்ளது. இப்போது சொல்லுங்கள் கார்த்திகேயன், லேபில்கள் இலவசம் தானே! – ஆர்.

❖ கோகுலத்தில் உள்ள லேபிலுக்காக எங்கள் வீட்டில் போட்டா போட்டி. இரண்டு குழந்தைகளுக்கு லேபில்கள் போதாததால் இன்னொரு கோகுலம் வாங்கினேன்.

– கல்பனா ராம், உடுமலைப்பேட்டை.

❖ பிருந்தாவனம் பகுதி பல சிறிய விஷயங்களையும் சீரிய முறையில் அறிய உதவுகிறது.

– கே. ஜகந்நாதன், சேலம் - 15.

❖ சீனக்கரடி பார்ப்பதற்கு பொம்மை போல் காட்சி தருகிறது. சீனக்கரடி கட்டுரையும் சீனக்கரடி வரைவோமா? பகுதி யும் மிகப் பொருத்தமாக வெளி வந்துள்ளது.

– ச. ஜவஹருணிஷா, ஊத்துக்கோட்டை.

❖ மாறுவேடப் போட்டி படக்கதை, காசு இருந்தால் தான் பரிசு கிடைக்கும் என்ற தாழ்வு மனப்பான்மை உள்ளவர்களுக்கு நல்ல பாடமாக இருந்தது. மசால் வடை கதை ரசிக்கும்படி இருந்தது.

– உஷா முத்துராமன், திருச்சி - 17.

❖ 'தீரசேனன் வென்ற திகில் மலை' படக்கதையும் கோலப் போட்டியும் சுவாரசியமான ஆரம்பங்கள்!

– கா. ஜோசப், எட்டாம் வகுப்பு, இரணியல்.

❖ ஜூலை இதழில் வலப் பக்கம் தலையங்கத்தில் யானையால் காப்பாற்றப்பட்ட பூனையின் கதையும், இடப் பக்கம் எலியை எதிர் நோக்கும் பூனைக்குட்டிகளின் படமும் அருமை.

– டெ. ஜோஷ்வின், ஐரேனிபுரம், குமரி மாவட்டம்.

❖ நோயாளியை அவர்களுக்குத் தொல்லை தராமல் நலம் விசாரிக்க வேண்டும் என்பதை விளக்கியது, 'ஏன் வரவில்லை?' கதை.

– செ. செய்யது உஸ்மான், இருமேனி, முகவை மாவட்டம்.



நிறம் மாறுவது ஏன்?


பழங்களும், காய்கறிகளும் நமது உணவின் முக்கிய அங்கங்கள். காய்கறிகள் மற்றும் பழவகைகள் பல நிறங்களிலும், மணம் மற்றும் ருசியுடனும் காணப்படுகின்றன. சில

காய்கறிகள் மற்றும் பழங்களை வெட்டி வைத்தால் அவை நிறம் மாறி கருத்துப் போய்விடுகின்றன; சில பழுப்பு நிறமாகி விடுகின்றன. இது ஏன்?

காய்கறிகளை நறுக்குவதால், பழங்களை உரிப்பதால் அல்லது நசுக்குவதால், அந்தப் பகுதியிலுள்ள திசுக்களில் வளிமண்டலக் காற்றுப் படுகிறது. இதனால் ஏற்கெனவே பழம் மற்றும் காய்கறிகளிலுள்ள 'பினோலேஸ்' என்னும் நொதி, காற்றிலுள்ள ஆக்ஸிஜனுடன் இணைந்து வேதி மாற்றம் அடைந்து, சிவந்த அல்லது கருத்தப் பகுதியாக மாறிவிடுகின்றன. எனவே பழுப்பு நிறமாய் மாறிய காய்கனிகளின் பகுதி சேதப்படுத்தப்பட்ட திசுக்களே என ஆராய்ச்சி முடிவுகள் சொல்லுகின்றன.

வாழை, பீச், பியர்ஸ், கத்தரி, ஆரஞ்சு மற்றும் எலுமிச்சை போன்றவற்றில் 'பினோலேஸ்' அதிகம் காணப்படுகிறது. ஆப்பிள், உருளைக்கிழங்கு, பீட்ரூட் மற்றும் முட்டைகோசு போன்றவற்றில் 'லேக்கேஸ்' என்ற நொதி உள்ளது. இவற்றை வெட்டாமல் இருந்தால், இவற்றிலுள்ள டைரோசின், காபிக் அமிலம் மற்றும் குளோரோஜெனிக் அமிலம் போன்ற பொருட்களுடன், பினோலேஸ் அல்லது லேக்கேஸ் செயல்படாமல் தனித்தே இருக்கும். வெட்டியவுடன் காற்றுப்பட்டதும், அதிலுள்ள ஆக்ஸிஜனின் உதவியால் இவை வேதி வினை புரிந்து நிறம் மாறி, திசுக்கள் சிதைவுறும்.

பெரும்பாலும் வெட்டிய காய்கறி மற்றும் பழங்கள் நிறம் மாறாமலும் கெட்டுப் போகாமலும் இருக்க, நாம் நெடுங்காலமாக எலுமிச்சை சாற்றையே பயன்படுத்தி வந்திருக்கிறோம். இதிலுள்ள



அஸ்கார்பிக் அமிலம், எதிர் உயிரிணைப்பியாக (Anti-oxidant) செயல்பட்டு, வெட்டிய பகுதியிலுள்ள ஆர்த்தோ, ஹைடிரோ குயினோன்களை, பினோலேஸ் நொதியுடன் சேரவிடாமல் தடுப்பதால், தாற்காலிகமாக பழங்கள் மற்றும் காய்கறிகள் பழுப்பு நிறமாவது தடுக்கப்படுகிறது.

பொதுவாக வெட்டிய பொருட்களின் நிறமாற்றம், அவைகளிலுள்ள கார, அமிலத் தன்மை மாறுபாட்டாலும் கூட ஏற்படும். வெட்டிய பொருட்களை காற்றில்லா வெற்றிடத்தில் வைத்தால் நிறம் மாறுவதில்லை. ஏனெனில் ஆக்ஸிஜனுடன் இணைய வாய்ப்பில்லாததால், இதிலுள்ள வேதிப் பொருட்கள் நிறம் மாறுவதில்லை. வெட்டிய காய்கறி மற்றும் பழங்களை அமிலத்தில் தோய்த்தாலும் நிறம் மாறுதல் தவிர்க்கப்படும். கந்தக டை ஆக்ஸைடும், பினோலேஸ் நொதியை செயல்பட விடாமல் தடுத்து, நிறம் மாறுவதை தவிர்க்கிறது. பொட்டாசியம் டை சல்பைடிலுள்ள, கந்தக ஆக்ஸைடும் இவ்வாறே நிறம் மாறுதலை நிறுத்துகிறது.

வெட்டிய பழம் மற்றும் காய்கறிகளை ஆவியில் வேக வைத்தாலும் நிறம் மாறுவதில்லை. பழங்களை ஜாம் செய்ய உயர் வெப்ப நிலையில் பதப்படுத்தும் போதும் நிறம் மாறுவதில்லை. சர்க்கரை நீரில் வெட்டிய காய்கறி மற்றும் பழங்களை நனைப்பதால், சர்க்கரை ஒரு மெல்லிய சவ்வுபோல் இலைகளில் படிந்து, காற்றிலுள்ள ஆக்ஸிஜனுடன் இணைய இடையூறாகி, நிறம் மாறுதல் தடைபடுகிறது. வெட்டிய காய்கறி மற்றும் பழங்களை நீரில் அமிழ்த்துவதாலும், பினோலேஸின் செயல்பாடு தடுக்கப்படுகிறது. உப்பு நீரில் அமிழ்த்தினாலும் வெட்டிய காய்கறிகள் கருத்துப் போவதைத் தடுக்கலாம்.

— எஸ். மோகனா

விடுபட்ட எழுத்துகளைக் கண்டுபிடியுங்கள்!

— போட்டி முடிவு

இந்தப் போட்டியில் ஏராளமானோர் உற்சாகமாகக் கலந்து கொண்டுள்ளனர். பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. பி. பாரதி, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.
2. தி. சாலினி, லாஸ்பேட், பாண்டிச்சேரி.
3. இ. ராஜேஸ்குமார், கிரப்பாளையம்.
4. அ. சிவக்குமார், விளாப்பாக்கம், வேலூர் மாவட்டம்.
5. கே.எம்.பி. வைஜூர் நிஸா, லெஷ்மாங்குடி, திருவாரூர் மாவட்டம்.
6. கிருஷ்ணகுமார், மூணாறு, கேரளா.
7. எம். சுமதி, கருங்கல்பாளையம், ஈரோடு.
8. ஏ.எஸ். மீனாட்சி சுந்தரம், இடையம்பட்டி, சோலையார் பேட்டை.
9. எஸ். பார்கவி, திருவிடைமருதூர்.
10. நா. நாராயணன், திருவில்லிபுத்தூர்.
11. ஜே. காந்திமதி, வெளிப்பாளையம், தரங்கம்பாடி தாலுகா.
12. ஜி. பிரகாஷ், ஆர்.எஸ். மங்கலம், இராமநாதபுரம் மாவட்டம்.
13. வி. ஆயிரத்தம்மாள், பத்தமடை, நெல்லை மாவட்டம்.
14. அ. ஆனந்தன், குழிபிறை, புதுக் கோட்டை மாவட்டம்.
15. எஸ். சங்கீதா, டி. முருங்கப்பட்டி அஞ்சல், திருச்சி.

சரியான விடை

1. தும்பி, அம்மி	7. அத்தை, வித்தை
2. கன்று, நன்றி	8. கிணறு, பணம்
3. கழுதை, விழுது	9. காவல், சுவடு
4. பாரம், வீரம்	10. மேகம், பகல்
5. கொக்கு, அக்கா	11. களம், சோளம்
6. குளவி, மிளகு	12. புயல், சாயம்

அயோத தௌமியருடைய குரு குலத்தில் பயின்ற மாணவர்களில் பாஞ்சால தேசத்து இளவரசனும் ஒருவன். அவன் பெயர் ஆருணி. அந்தக் காலத்தில் குருகுலத்தில் எல்லா மாணவர்களும் சமமே. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பதெல்லாம் கிடையாது. அனைவரும் எல்லாப் பணிகளையும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். திடீரென்று நதிக்கு நீராடப் போகும்போது, நீராடிக் கரையேறியபிறகு என்றெல்லாம் முனிவர்கள் நேரம் காலம் பார்க்காமல் பாடம் நடத்துவார்கள். அதனால் குரு எங்கே போனாலும் சீடர்கள் நிழல் போல் தொடர்வார்கள்.



ஒருநாள் தௌமியர் "ஆருணி! நமது குருகுலத்துக்கு உரிமையான நிலத்தில் தண்ணீர் பெருகுகின்றது. இன்னும் சற்று நேரம் இந்நிலை நீடித்தால் பயிர்கள் நாசமாகி விடும். நீ சென்று மடையைப் பலப்படுத்து" என்று உத்தரவிட்டார்.

அத்தனை மாணவர்கள் இருக்கும் போது ஆருணியைப் பார்த்து இப்படிச் சொல்வானேன் என்று தோன்றுகிறதல்லவா?

ஆருணி பொறுப்பானவன். ஆசிரமத் தோட்டத்தைப் பெருக்கும்போது நீட்டிக் கொண்டிருக்கும் புல் கட்டைகளைச் சுற்றி மற்ற மாணவர்கள் பெருக்குவார்கள். ஆருணியோ சிறு மண் கொத்தியைக் கொணர்ந்து அதைத் தோண்டி எடுத்து அந்த இடத்தை மண் போட்டு கெட்டிப் படுத்தி, காலால் மிதித்து சமப்படுத்துவான். இது போல எந்த அலுவலையும் அவன் சிறப்பாகச் செய்ததைப் பார்த்திருந்தார் குருநாதர். அதனால் தான் அவனை அனுப்பினார்.

மண்வெட்டியுடன் விரைந்து வயலை அடைந்த ஆருணி வாய்க் கால் பெருகி வரும் இடத்தில் மண்ணை வெட்டிப் போட்டான். காலையிலிருந்து மண்ணை வெட்டிப் போட்டும் நீரின் பலம் அதிகமாய் இருந்ததால் பயிரிட்ட நிலத்தில் நீரின் அளவு ஏறிக் கொண்டே இருந்தது. சூரியன் அஸ்தமனமாகத் தொடங்கினான்.

"ஆ! எத்தனை மாணவர்கள் பாடு பட்டு விதை விதைத்து களையெடுத்திருக்கிறார்கள். அறுவடையாகும் சமயத்தில்

உத்தாலகன்

ஆர். பொன்னம்மாள்


பயிர் அழுகி விட்டால் அத்தனை பேரின் உழைப்பும் பாழாகுமே என்று மனம் கசிந்தான். மண் வெட்டி, வெட்டி அவனது தோளும், கைகளும் சோர்ந்தன. தண்ணீர் உட்புகும் மடை வாயில் படுத்து விட்டான்.

ஆசிரமத்தில் பாடம் நடத்திக் கொண்டிருந்த தௌமியர் ''ஆருணி எங்கே?'' என்று கேட்டார். ஒரு மாணவன் எழுந்து "ஆருணி காலையில் மடை அடைக்கப் போனவன் திரும்பவே இல்லை" என்றான்.

''என்ன... காலையில் போனவன் திரும்பவில்லையா?'' என்று திடுக்கிட்டு எழுந்தார் தௌமியர்.

தீவட்டியுடன் வயலுக்கு விரைந்த குருநாதரை மற்ற மாணவர்கள் பின் தொடர்ந்தனர். வயல் அருகே வந்ததும் மாணவர்களும், தௌமியரும் "ஆருணி, ஆருணி" என்று உரக்கக் குரல் கொடுத்தனர்.

''மடைவாயிலில் படுத்துக் கொண்டிருக்கிறேன். எழுந்து வந்தால் நீர் மறுபடி உள்ளே புகுந்து விடும். நம் அனைவரது உழைப்பும் பாழாகி விடும்'' என்று குரல் கொடுத்தான் ஆருணி.




குருநாதர் நெஞ்சம் உருகினார்.

''தண்ணீர் பாய்ந்து பயிரை அழிக்கட்டும். நீ அழிந்தால் தாள மாட்டேன். எழுந்து வா'' என்றார் தௌமியர்.


ஆருணி எழுந்ததும் கட்டிக் கிடந்த நீர் பிளந்து கொண்டு வயலில் நுழைந்தது. நீரைப் பிளந்து கொண்டு வந்ததால் உத்தாலகன் என்றழைக்கப் பட்டான்.

குரு பக்தியால் அவனுக்கு சகல கலைகளும் எளிதாக வந்தன.


பிற்காலத்தில் உத்தாலகர் தமது குருகுலத்தில் சிறந்த பல மாணவர்களை உருவாக்கினார்.



சுற்றுலாத் தலங்களைக் கண்டுபிடியுங்கள் — போட்டி











இங்கு புகழ் பெற்ற ஆறு சுற்றுலாத் தலங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. போட்டி இதுதான். சுற்றுலாத் தலங்களின் பெயர்களைக் கண்டுபிடித்து தபால் கார்டில் எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 31.8.98. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியையும் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடைகளை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.



ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097

பச்சைப் பல்லி

சிறிய பச்சை நிறப் பல்லிகள் ஐரோப்பாவின் மிதவெப்பப் பகுதிகளில் வாழ்கின்றன. இத்தாலி போன்ற நாடுகளில் இப் பல்லிகள் சுவர்களிலோ, நடைபாதைகளிலோ வீற்றிருந்து சூரிய ஒளியில் குளிர்காய்வதைக் காணலாம்.

பல்லிகளில் ஏறத்தாழ 2,500 வகைகள் உள்ளன. இரண்டு செ.மீ. நீளமுள்ள பல்லியும் உண்டு; மூன்று மீட்டர் நீளமுள்ள பல்லியும் உண்டு.

ஆமை, பாம்பு, முதலை போன்ற விலங்குகளைப் போல பல்லியும் ஊர்வன இனத்தைச் சேர்ந்தது. இவை குளிர் ரத்தப் பிராணிகள். குளிர் அதிகமாக இருக்கும்போது ரத்தம் குளிர்ந்து விடுவதால் இப் பல்லிகள் மெதுவாகவே நகரும்.

பல்லிகள் பலவித உருவங்களில், நிறங்களில் காணப்படுகின்றன. இத்தாலியில் வாழும் இப் பச்சை நிறப் பல்லிக்கு நீளமான உடம்பும், வாலும், நான்கு உறுதியான கால்களும் உள்ளன. பின்னங்கால்களை விட முன்னங்கால்கள் நீளமானவை.





ஆண் பல்லி இனப்பெருக்கக் காலத்தில் பல வண்ணங்களுடன் காட்சியளிக்கிறது. இவ்வண்ணம் பெண் பல்லியைக் கவர்வதற்காக இயற்கை அளித்துள்ள சீதனம்.

பெண் பல்லிகள் ஆண்டுக்கு பலமுறை முட்டையிடுகின்றன. ஒவ்வொரு முறையும் மூன்றிலிருந்து ஆறு முட்டைகள் வரை இடும். மிகப் பாதுகாப்பான மரப் பொந்துகள் அல்லது தரையில் உள்ள குழிகளில் இவை முட்டைகளை இடுகின்றன.

பத்து வாரங்களில் முட்டைகளிலிருந்து குட்டிகள்




வெளிவருகின்றன. முட்டை ஓட்டினை உடைப்பதற்காக சிறப்பான பல் ஒன்று குட்டிகளுக்கு முளைத்திருக்கும். பிறந்த குட்டிகளை உணவாக்கிக் கொள்ள சில பிராணிகள் காத்துக் கொண்டிருக்கும். பிறந்த உடனேயே இப்பல்லிக் குட்டிகள் எதிரிகளிடமிருந்து உயிர் தப்ப வேண்டிய நிலைக்கு ஆளாகின்றன.

பல்லிகளுக்கு நீளமான வால் உண்டு. நடக்கும்போது உடலை சமநிலைப்படுத்த இந்த வால் உதவுகிறது. சுவரில் ஏறுதல், கிளைகளைப் பற்றிக் கொள்ளுதல் ஆகிய செயல்களிலும் வாலின் பங்கு உண்டு.


சில பல்லிகளின் வால் எதிரிகளை ஈர்க்கும் வகையில் ஒளிரும். இதனால் எதிரிகள் உடலுக்குப் பதிலாக வாலையே தாக்கும்! எதிரிகள்

எதிரிகளிடம் வால் இழந்த பல்லிகளுக்கு மீண்டும் வால் முளைக்கும் போது அதிசயமாக இரண்டு வால்கள் தோன்றுவதும் உண்டு.

பெரும்பாலான பல்லிகள் நகரும் போது முன்னங்கால் ஒன்றையும் பின்னங்கால் ஒன்றையும் ஒரே நேரத்தில் வைத்து முன்னேறும். சில பல்லிகள் இரு பின்னங்கால்களையும் நகர்த்துகின்றன. பச்சைப் பல்லிக்கு கால்கள் இல்லாவிட்டால் பாம்பைப் போன்றே தோற்றம் அளிக்கும்!



எஸ். சுஜாதா



பல்லியின் வாலைப் பற்றித் தூக்கும்போது, தன் வாலை வெட்டி விட்டு ஓடித் தப்பி விடுகிறது. வால் மட்டுமே எதிரியின் கையில் மிஞ்சும்!

நாக்கு நீளம்!

பொதுவாக பல்லிகளுக்கு நீளமான நாக்கு இருக்கும். நாக்கை நீட்டி, நீட்டி உள் இழுத்துக் கொண்டிருக்கும். சில பல்லிகள் இரையைப் பிடிக்க நாக்கைப் பயன்படுத்துகின்றன. சில பல்லிகள் நாக்கின் மூலம் வாசனையை உணர்ந்து கொள்கின்றன. பல்லிகளின் நுகரும் உணர்வு மூக்கில் இல்லை, நாக்கில்தான் உள்ளது.

சில நாட்களில் இந்த வால் மீண்டும் முளைத்து விடக்கூடிய சிறப்புத் தகவமைப்பு பல்லிகளுக்கு உண்டு. இந்த வால் முதலில் இருந்த வாலை விட குட்டையாகவும், சில சமயம் நிறம் வேறுபட்டும் காணப்படும்.

பொதுவாக பல்லிகள் மிதவெப்பப் பகுதிகளில் காணப்பட்டாலும் சில வகைகள் குளிர் மிகுந்த பிரதேசங்களிலும் வசிக்கின்றன. இவைகளுக்கு வெப்பம் அவசியம் தேவை. ஏனென்றால் சுயமாக வெப்பத்தை உருவாக்கிக் கொள்ள இயலாது. ஆனால் அதிக வெப்பமும் இவற்றிற்கு ஆபத்தை விளைவிக்கும்.

மிகப் பெரிய பல்லி!

உலகிலேயே மிகப் பெரிய பல்லி இந்தோனேஷியா தீவுகளில் வாழும் கொமடோ டிராகன்தான். இது மூன்று மீட்டர் நீளமும் 150 கிலோ எடையும் கொண்டது. இவை இறந்த பிராணிகளை உணவாகக் கொள்ளும். எப்போதாவது பிராணிகளை (மனிதன் உட்பட) கொன்று சாப்பிடுவதும் உண்டு. பொதுவாக பல்லிகள் மனிதனுக்கு தொந்தரவு தருவதில்லை. ரொம்ப சாதுவான பிராணிகள்.



நிறம் மாறும்!

பச்சைப் பல்லிகளுக்குத் தொல்லை கொடுத்தால் வேகமாக நகர ஆரம்பிக்கும். இருந்தாலும் அதிவேகமாக ஓட இயலாது. அப்போது உடல் நிறத்தை மாற்றி செடிகளுக்குள் மறைந்து தப்பி விடுகின்றன.

எனவே குளிர்காலத்தில் இப் பச்சைப் பல்லி மண்ணைத் தோண்டி தங்குவதற்கு பாதுகாப்பான இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும். அப்போது இதயம், தசை, மூளை எல்லாம் மெதுவாகவே வேலை செய்யும். இந்த நேரத்தில் நகரவோ, சாப்பிடவோ கூடச் செய்யாது. குளிர் குறைந்து சூரியன் வரும் நாட்களில் மெதுவாக வெளியே வந்து சூரியக் குளியல் எடுக்கும்.

எல்லா பல்லிகளும் தங்களது தோலை பலமுறை உரிக்கின்றன. பல்லியின் தோல் கடினமான செதில்களால் ஆக்கப்பட்டிருப்பதால், இது மனிதனின் தோலைப் போல விரிவடையாது. பல்லி வளர வளர பழைய தோல் உரிந்து புதிய தோல் உருவாகி விடுகிறது.

பச்சைப் பல்லி பலவித உணவுகளை உண்ணக்கூடியது. இலைகள், பழங்கள் தவிர, சிறிய பூச்சிகளும் இதன் உணவில் அடங்கும். பொதுவாக பூச்சிகள் அருகில் வரும் போது லபக்கென்று பிடித்து சாப்பிடுவதே பல்லியின் வழக்கம். எப்போதாவது பூச்சிகளை வேட்டையாடிப் பிடிப்பதும் உண்டு.



ஊர்வன என்றால் என்ன?

ஊர்வன வகைப் பிராணிகளுக்கு முதுகெலும்பு இருக்கும். இவற்றின் தோல் நீர் புகாத வகையில் செதில்களாக இருக்கும். ஊர்வனவற்றில் பெரும்பாலான பிராணிகள் முட்டைகள் இடுகின்றன.


ஊர்வன குளிர் ரத்தப் பிராணிகள். சுற்றுப்புறம் குளிர்ந்து இருந்தால் இவற்றின் ரத்தம் குளிர்ந்து காணப்படும். சுற்றுப்புறம் வெப்பமாக இருந்தால் ரத்தமும் வெப்பமாக இருக்கும். பாலூட்டிகள் வெப்ப ரத்தப் பிராணிகள். வெப்ப நிலை எப்படி இருந்தாலும் பாலூட்டிகளின் உடல் வெப்பம் சீராக இருக்கும்.

கோகுலம் க்விஸ்

1. பல்லிகள் எந்த இனத்தைச் சார்ந்தவை?
2. பச்சைப் பல்லிகள் எங்கு வாழ்கின்றன?
3. வால் இழந்த பல்லிக்கு மீண்டும் வால் முளைக்குமா?
4. பச்சைப் பல்லியின் உணவு என்ன?
5. மிகப் பெரிய பல்லி எங்கு வாழ்கிறது?


விடை :
1. ஊர்வன
2. இத்தாலி
3. முளைக்கும்
4. பூச்சிகள், இலைகள், பழங்கள்
5. இந்தோனேஷியா தீவுகளில்


கோலப் போட்டி முடிவுகள்




– கே. ப்ரியா,
ஐந்தாம் வகுப்பு,
மேட்டூர் அணை.

– என். ரம்யா,
திருவல்லிக்கேணி,
சென்னை - 5.






– பா. கவிதா,
ஒன்பதாம் வகுப்பு,
ஷெரான் வேளாங்கண்ணி பள்ளி,
தி.நகர், சென்னை.







— ஜெ. மாலதி,
ரெய்ச்சூர்,
கர்நாடகா மாநிலம்.

— பி. சித்ரா,
ஏழாம் வகுப்பு,
டி.வி.எஸ். லக்ஷ்மி
மெட்ரிகுலேஷன் பள்ளி,
மதுரை.




— ச. சௌமியா,
எட்டாம் வகுப்பு 'அ' பிரிவு,
வாணி வித்யாலயா பள்ளி,
காட்பாடி, வேலூர் - 7.





— ஆர். அம்பிகா,
ஐந்தாம் வகுப்பு,
மதுரை.

எங்கள் எண்ணம்



வேண்டாம் அணு ஆயுதம்

பயமில்லை!

நம் நாடு சொந்தமாக அணுகுண்டு தயாரித்து வெற்றிகரமாக சோதனையும் நடத்திவிட்டது. இனி நாம் எந்த நாட்டிற்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. பெருமையடைய வேண்டிய இச் செயலை நினைத்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

– பா. பிரசாத்,
பத்தாம் வகுப்பு,
திருமோகூர், மதுரை மாவட்டம்.

பாதிப்பு!


1945ஆம் ஆண்டு, இதே ஆகஸ்ட் மாதம் 6 மற்றும் 9ஆம் தேதிகளில் இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் அணுகுண்டுகளால் அழிக்கப்பட்டன.

இரண்டு நகரங்களையும் சேர்ந்த 3,10,000 ஆண், பெண், பச்சிளங்குழந்தைகள் நொடியில் மடிந்தனர். தப்பிப் பிழைத்த ஆயிரக்கணக்கானோர் அணுகுண்டு பாதிப்பால் நோயுற்று இறந்து போனார்கள்.

இத்துயரச் சம்பவம் நடந்து 53 வருடங்களான பிறகும் இன்று பிறக்கும் குழந்தைகள் கூட கண் பார்வையின்றி, கால் முடமாகி ஊனமாகப் பிறக்கின்றனர். அணுகுண்டின் சக்தி எவ்வளவு கொடுமையானது!

நம் நாடு சுயமாக அணுகுண்டு தயாரித்து சோதனை நடத்தியதில் பெருமை கொள்ளும் வேளையில் இதையும் சிந்திக்க வேண்டும். இன்னும் ஒரு வேளை உணவின்றி, இருக்க இடமின்றி, படிப்பறிவு இல்லாமல், அடிப்படை சுகாதாரம் கிடைக்காமல் எத்தனை கோடி மக்கள் வாழ்கிறார்கள்.

அணுகுண்டுக்கு செலவழிப்பதைவிட




இம்மாதிரியான காரியங்களுக்கு செலவு செய்தால் நம் நாடு முன்னேறும்.

அணுகுண்டு தயாரிப்பால் சுற்றுச் சூழல் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. மனிதன் மட்டும் வாழ்வதற்கல்ல இப்பூமி. பறவை, விலங்கு, தாவரம் போன்ற உயிரினங்களுக்கும் பூமியில் வாழ சமபங்கு உண்டு.

அணுகுண்டு, போர் போன்ற அபாயங்கள் நிகழாமல் இப் பூமியை நம் சந்ததியினருக்கு பத்திரமாக விட்டுச் செல்ல வேண்டியது நம் கடமை அல்லவா!

– சங்கீதா,
பி.ஏ. இரண்டாம் ஆண்டு, தஞ்சாவூர்.



நெருப்பை ருசித்தவனுக்கு நீண்ட ஆயுள்!

①

1. வண்ண நிலா விண்ணிலே, மலர்ந்திடுவான் மண்ணிலே. அது என்ன?
2. நீருக்குள் இருப்பவன் நிலத்துக்கு வந்தால் ஒரே காலி. அது என்ன?
3. சின்னச் சின்ன சிட்டுக்குருவி ஏழு முழம் சித்தாடை கட்டியிருக்கு. அது என்ன?
4. ஒற்றைக் காலால் சுற்றுபவனுக்கு அடிக்கடி மயக்கம். அது என்ன?
5. பஞ்சு போல் பாதம் கொண்டவன் எதிரிக்கு அதுவே பாதகம். அது என்ன?
6. ராத்திரி மழைக்கு காலையில் கம்பளம். அது என்ன?
7. கண்ணாடிக் குண்டு காற்றிலே பறக்குது. அது என்ன?
8. அரண்மனை ரத்தினங்கள் உடைத்தால் தான் வெளியே வரும். அது என்ன?
9. முத்துப் பல்லழகி முகம் காட்டி நிற்கிறாள். அது என்ன?
10. கண்ணருகே ஒரு மின்னல். கண்டதை பிடிக்கும் மின்னல். அது என்ன?

— கே. ராதாமணி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஒத்தக்கால் மண்டபம், கோவை.

②

1. என்னைச் சுற்றி ஒரு கோட்டை. நான் கிட்டப் போனால் அது எட்டப் போகும். அது என்ன?
2. அம்மிக் குழவி போல் பூ பூத்து அரிவாள் பிடி போல் காய் காய்க்கும் — அது என்ன?
3. வரிக்குதிரை ஓடியது, வாய்ப் பாட்டுப் பாடியது — அது என்ன?
4. ஒரு சாண் ஆளுக்கு அரை சாண் தொப்பி — அது என்ன?
5. நெருப்பை ருசித்தவனுக்கு நீண்ட ஆயுள் — அது என்ன?
6. கறுப்பு மேடையில் வெள்ளைக் குதிரை ஏறி, ஏறி இறங்குது. — அது என்ன?
7. கசப்புக்காரன். கண்போரை மயக்கும் நிறத்தான். — அவன் யார்?

— அ. செரின், தாராபுரம், பெரியார் மாவட்டம்.

③

1. சுற்றிச் சுற்றி வந்தாலும் இடத்தை விட்டு அசையாத தேர் இது. — அது என்ன?
2. குண்டோதரன் வாயில் குள்ளன் புகுந்தால் குபேரப் பட்டிணத்திற்கு வழி தெரியும். — அது என்ன?
3. கரை உண்டு படிக்கட்டு இல்லை; தலைப்பு உண்டு கதை இல்லை — அது என்ன?
4. வட்ட வடிவமானவன். குளித்ததும் பெரிய உருவமாகி விடுவான். — அவன் யார்?

— ஆர். புனிதா, தஞ்சை மாவட்டம்.

விடை : 1

1. அல்லிப் பூ
2. திமிங்கிலம்
3. வெங்காயம்
4. பம்பரம்
5. பூனை
6. பட்டுப்பூச்சி
7. நீர்க்குமிழி
8. மாதுளம்பழம்
9. சோளக்கதிர்
10. போட்டோ காமிரா.

விடை : 2

1. வானம்
2. வாழை
3. இசைத் தட்டு
4. பேனா
5. செங்கல்
6. தோசைக்கல் — தோசை
7. குன்றிமணி

விடை : 3

1. செக்கு
2. பூட்டு
3. புடைவை
4. அப்பளம்

ஒன்பதாம் வீடு!

12. புகழ் ஏணி!

கார் சென்னை நகரை நெருங்கியது.

"சார், நேராக என்னை ஹாஸ்டலிலேயே கொண்டு போய் விடுங்க. என்னைக் காணாமல் ஆசிரியர்களும் மற்றவர்களும் துடித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் நான் பத்திரமாகத் திரும்பி வந்து விட்ட செய்தியைக் கூறிவிட்டு, பிறகு வீட்டுக்குப் போகிறேன்" என்றாள் சித்ரா.

மணிவர்மா சிரித்துக் கொண்டே காரை ஹாஸ்டலுக்கு ஓட்டினார்.


போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்குக் கிளம்பத் தயாராக வெளியே வந்த வனிதா மேடமும், தமிழரசி டீச்சரும் மணிவர்மாவின் காரிலிருந்து சித்ரா இறங்குவதைப் பார்த்து ஆனந்த அதிர்ச்சி அடைந்தார்கள்.

மணிவர்மாவை இருவருக்கும் அறிமுகப்படுத்தி விட்டு, நடந்ததையெல்லாம் கூறினாள் சித்ரா. சமூக விரோத நயவஞ்சகக் கூட்டத்தின் பிடியிலிருந்து சித்ரா தப்பி வந்ததைக் கேட்டபோது அவர்கள் மனம் பதைபதைத்தனர்.

சித்ரா காணாமல் போன செய்தியும், அவள் மீண்டு வந்த செய்தியும் ஒன்றாகவே பசுபதி, மங்கைக்குக் கிடைத்தன. எத்தகைய பேராபத்தில் அவள் சிக்கி, உயிருடன் திரும்பியிருக்கிறாள் என்ற உண்மையை அறிந்த போது அவர்கள் ஆடிப் போனார்கள்.

"மிஸ்டர் பசுபதி, டாக்டராகவோ, பொறியாளராகவோ ஆகி, கைநிறைய சம்பாதித்து, அயல்நாடுகளுக்கெல்லாம் சென்று வந்த பெருமையோடு வாழ வேண்டும் என்று நீங்கள் உங்கள் மகளைப் பற்றிக் கனவு காண்பதை நான் தவறு என்று கூற மாட்டேன். இறைவன் எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரி அறிவைத் தருவதில்லை. ஒவ்வொரு குழந்தைக்கும் தனிப்பட்ட ஆர்வம், முயற்சி எல்லாம் தருகிறான். எல்லோருமே டாக்டராகவோ, பொறியாளராகவோ ஆகி விட்டால், மற்றவைகளை யார் கவனிப்பார்கள்? டாக்டர், பொறியாளராகும் குழந்தைகளே பெரிய புத்திசாலிகள் என்று எண்ணுவதுதான் தவறானது. தோட்டக் கலை, வேளாண் துறை, தணிக்கைத் துறை, பொருளாதாரத் துறை, ஓவியத் துறை, கட்டடக் கலை, கல்வி கற்பிக்கும் துறை, இசைத் துறை என்று எத்தனையோ துறைகள் உள்ளன. கவனமாக சிந்தித்துப் பார்த்தால் இவை ஒவ்வொன்றும் ஒரு தனியான கலையே என்பதை ஒப்புக் கொள்வீர்கள். ஏன் சமையல் கூட ஒரு கலைதானே? இவையெல்லாம் சமூகத்தின் அங்கங்கள். இவைகளுக்குள் உயர்வு பார்ப்பது நமது குறைபாடே. பிரம்மாண்டமான தேருக்கு சிறிய அச்சாணியே காப்பு நிலை. ஆனால் அதை ஒருவரும் கண்டுகொள்வதில்லை. தேரை மட்டுமே கண்டு மகிழ்கிறார்கள்."

பெரிய மேடம் மேலும் என்ன கூறப் போகிறார் என்பதைக் கேட்க



பகபதியும் மங்கையும் ஆவலாக இருந் தார்கள்.

"ஓவியத்தில் சித்ராவுக்கு உள்ள ஆர் வத்தைக் குலைக்க, நசுக்க நீங்கள் என் னென்னவோ செய்தீர்கள். ஆனால் இத் தனைத் தடைகளையும் மீறிக் கொண்டு, அவளுடைய மேன்மையை உலகம் உணர்ந்து பாராட்டத் தொடங்கி விட் டது. அவள் தொலைக்காட்சியில் பங் கேற்றதை, பார்த்தவர்கள் எல்லாம் பாராட்டினார்கள். ஆனால் நீங்கள் அதற்கு அளித்த பரிசு ஹாஸ்டல். நல்ல காலமாக ஓவிய ரசிகையான வனிதா ஹாஸ்டல் வார்டனாக இருந்ததால் சித்ரா விடம் தனி அக்கறை எடுத்துக் கொண்டு பாடத்தையும் கவனித்து, அவளுடைய ஓவிய ஆர்வத்தையும் மங்கிவிடாது பார்த் துக் கொண்டார். ஓவிய மேதை ரகு மானின் பாராட்டு கிடைப்பது என்றால் அது சாதாரணமான செயலா?"

பசுபதி மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"சித்ராவின் அற்புதத் திறமைகளை வானொலியும், தொலைக்காட்சியும், பத்திரிகைகளும் புகழ்ந்ததைக் கூட நீங் கள் கண்டு, கேட்டு படித்து மகிழவில்லை. ஆனால், மக்கள் மனதில் அவள் இடம் பெற்றாள். கடைசியில், சமூக நயவஞ்சகக் கூட்டத்தினரிடமிருந்து அவள் தப்பி வரவும் அவையே உதவியிருக்கின்றன என்பது எத்தனை பெரிய அதிசயம்!"

மாறுபட்ட கோணத்தில் இருந்து பெரிய மேடம் கோமதி எழுப்பிய கேள்வி, பசுபதியைச் சிந்திக்க வைத்தது.

"வருங்காலத்தில் மிகச் சிறந்த ஓவிய ராக வரக்கூடிய எல்லாத் திறமைகளும் சித்ராவிடம் நிறைந்திருக்கிறது. அதை இனி மூடி மறைக்க முடியாது. சித்ரா, ஒரு பொறியாளராகவோ, டாக்டராகவோ ஆகி பெறக்கூடிய பெருமைகளை விட எந்தவிதத்திலும் அது குறைந்ததாக இருக் காது" - பெரிய மேடம் தன் மனதில் இருந்ததைக் கொட்டி விட்டார்.

"மேடம், நீங்கள் கூறியதில் உள்ள நியா யம் என்னைத் தொட்டு விட்டது. எனக்கு எல்லாம் புரிந்து விட்டது. இனி அவளு டைய ஓவிய ஆர்வத்துக்கு நானோ என் மனைவியோ தடையாக இருக்க மாட் டோம்" என்றார் பசுபதி. அவர் பேச்சுக் காகச் சொல்லவில்லை. உளமாறச் சொல் கிறார் என்பதை அவரது கலங்கிய கண் கள் உணர்த்தின.

பசுபதி விரும்பியபடியே சித்ராவை மாறுதலுக்காக ஹாஸ்டலில் இருந்து சில நாட்கள் வீட்டில் இருக்க வைத்தார் வனிதா.

பெற்றோரின் மனமாற்றம் சித்ராவை அதிசயிக்க வைத்தது. ஓவியப் போட்டி களில் அவள் பரிசு பெற்ற காட்சிகள், கவர்னரோடு விருந்து சாப்பிட்டது, தொலைக்காட்சியில் பங்குகொண்டது என்று அவளுக்குப் பெருமைதந்த பல நிகழ்ச்சிகளின் புகைப்படங்களுக்கு மிக அழகாக பிரேம் போட்டு எடுப்பாக மாட்டினார் பசுபதி. அது மட்டுமா, சித்ரா வரைந்து ரகுமான் கையெழுத் திட்டு அளித்திருந்த விலைமதிப்பில்லாத ஓவியத்தையும் பொருத்தமாகவே சட்ட மிட்டு நடு ஹாலில் மாட்டி மகிழ்ந்தார். பத்திரிகைகளில் அவளைப் பற்றி வெளி வந்த செய்திகளை வெட்டி, ஒட்டி அழகு கொஞ்சும் ஆல்பமாகத் தயாரித்திருந்தார்

வெ. நல்லதம்பி



"நிலத்துல விதைக்க முடியாத விதை எது?"

"தெரியலையே."

"க 'விதை'தான்!"

— எஸ். எத்திராஜன்.

மங்கை.

அன்று பசுபதியின் அலுவலகத்திற்கு தமிழ்நாடு காவல் துறைத் தலைவர் தொலைபேசியில் பேசினார். "உங்களோடும் உங்கள் மகள் சித்ராவோடும் நான் அவசரமாகப் பேச வேண்டும். எப்பொழுது உங்களுக்கு சௌகரியப்படும்? நானே உங்கள் வீட்டுக்கு வருகிறேன் என்றார்"

அன்று மாலை ஆறு மணிக்கு மேல் அவரை வரச் சொல்லிவிட்டு பசுபதி வீட்டுக்கு விரைந்தார். சரியாகக் குறித்த நேரத்திற்கு காவல் துறைத் தலைவர் வந்து விட்டார். கூடவே மணிவர்மா! சித்ராவை முரடர்கள் பிடியிலிருந்து காத்த அதே நல்ல மனிதர்தான்.

சுற்றிவளைக்காமல் விஷயத்திற்கு நேரடியாக வந்தார் காவல் துறைத் தலைவர்.

"சித்ராவைக் காணவில்லை என்று தமிழரசி டீச்சரும், வனிதாவும் கொடுத்த புகார் இன்னும் முடிக்கப்படாமல் இருக்கிறது. உங்களைப் பொறுத்தவரை சித்ராவை மணிவர்மா காப்பாற்றிக் கொண்டு வந்து விட்டார். அதனால் உங்கள் கவலை தீர்ந்து விட்டது. ஆனால் அதில் எங்கள் பங்கு இன்னும் தீர்க்கப் படாமலேயே இருக்கிறது. சிறுநீரகத்திற்காக சிறுவர் சிறுமிகளையும் அப்பாவிகளையும் கடத்தி வந்து பணம் பண்ணும் கொடிய செயல், நாளுக்கு நாள் பெருகி வருகிறது. இந்தக் கும்பலைக் கண்டு பிடிக்க முடியாமல் எங்கள் துறை திண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்த மாதிரி ஒரு கும்பலில் சிக்கி உயிருடன் மீண்டு வந்திருப்பவள் உங்கள் பெண் சித்ரா மட்டுமே. அவள், குற்றவாளிகளை நன்கு பார்த்திருக்கிறாள். சில மணி நேரம் அவர்களுடன் இருந்திருக்கிறாள். அவள் மனம் வைத்தால் குற்றவாளிகளைப் பிடிக்க எங்களுக்கு உதவ முடியும்" என்றார் காவல் துறைத் தலைவர்.

"குற்றவாளிகளைப் பிடிக்க சித்ரா நீங்கள் கேட்கும் எந்த உதவியையும் செய்யத் தயாராக இருக்கிறாள். சொல்லுங்கள் சார்" என்றார் பசுபதி.

"ஓவியம் வரைவதில் திறமைசாலி அல்லவா உங்கள் பெண்? அந்த இரண்டு முரடர்களையும் அவள் படம் வரைந்து தர வேண்டும். அது மட்டும் கிடைத்தால் உடனே குற்றவாளிகளைப் பிடித்து விடுவோம்!"

பசுபதி சித்ராவின் முகத்தைப் பார்த்தார்.

"அவர்கள் முகம் எனக்கு இன்னமும் பசுமையாக இருக்கிறது. இப்பவே ஆரம்பிக்கிறேன்" என்றாள் சித்ரா. "நானும் உதவி செய்கிறேன்" என்றார் மணிவர்மா. காவல் துறைத் தலைவரும் உடனிருந்தார்.

சைவி, மொட்டை ஆகிய இருவரின் முகங்களையும் போட்டு முடிக்க ஆறு மணி நேரம் ஆனது! முடிக்கும் போது மணி அதிகாலை இரண்டு.

தான் தமிழ்நாட்டின் சக்திமிக்க காவல் துறைத் தலைவர் என்ற இறுமாப்பு ஏதும் இல்லாமல், சித்ராவுக்கு ஓவியத்தை முடிக்க அவரும் உதவிய காட்சி, தன் பெண் எத்தகைய புகழ்மிக்க நிலையில் இருக்கிறாள் என்ற உண்மையை பசுபதிக்கு உணர வைத்தது.

"நன்றி சித்ரா, இந்த உதவியை நானும் மறக்க மாட்டேன். தமிழகத்தின் காவல் துறையும், அரசும் கூட இதை மறக்காது. தக்க நேரத்தில் உனக்கு சிறப்புச் செய்வோம். நாங்கள் கூறும் வரை இந்தப் படங்களை வரைந்ததை மட்டும் இரகசியமாக வைத்திருங்கள். அப்பொழுதுதான் எங்கள் வேலை எளிதில் முடியும்" என்று நன்றி கூறி கைகுலுக்கி விடைபெற்றார் காவல் துறைத் தலைவர்.

ஒரு வாரம் ஓடியது.

சித்ரா வரைந்த படங்களை வைத்து போலீசார் வைத்த கண்ணி வலையில் கைலியும், மொட்டையும் சிக்க, அவர்களை வைத்து, சிறுநீரகத்திற்காக சிறுவர்களையும் அப்பாவிகளையும் கடத்தி வந்த பயங்கரமான கும்பலை போலீசார் பிடித்தனர். காவல் துறைத் தலைவர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து, சித்ராவையும் அறிமுகப்படுத்தி, தனது தனிப்பட்ட பரிசாக ஒரு டிஸ்பிளே போர்டைத் தந்து, அரசாங்கப் பரிசு தனியாக வரும் என்றார்.

அந்த வாரம் முழுக்க எல்லாப் பத்திரிகைகளிலும் சித்ராவின் பேட்டியும், குடும்பப் புகைப்படமும் வெளிவந்தன. தொலைக்காட்சியினரும், வானொலியும் மட்டும் சும்மா இருப்பார்களா? அவர்களது பேட்டியும் ஒளி -ஒலிபரப்பானது. ஒரு பிரபலமான ஆங்கில நாளேடு, சித்ராவின் ஓவிய ஆர்வம், திறமை, அவள் இது வரை செய்துள்ள சாதனைகள் என்று எல்லாவற்றையும் தொகுத்து வண்ணப் புகைப்படங்களுடன் அருமையான குடும்பக் கட்டுரையாக வெளியிட்டிருந்தது. அதோடு எந்த ஒரு பெரிய நிறுவனமாவது அவளுக்கு இத் துறையில் மேலும் முன்னேற, நிபுணர்களின் பயிற்சியைப் பெற உதவ முன்வர வேண்டும் என்று எழுதியிருந்தது.

அந்தக் கட்டுரை, அதுவரை சித்ராவைப் பற்றி அறியாதவர்களைக் கூட அறியும்படி செய்து விட்டது. குடும்பப் புகைப்படமே வெளியாகியிருந்ததால், சுற்றவர்கள் நடுவே எங்கே சென்றாலும் பசுபதி அடையாளம் கண்டுகொள்ளப் பட்டு தனிப் பெருமையுடன் நடத்தப் பட்டார்.

பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு விட்டதால், அதற்குத் தேவையான கட்டடங்களைக் கட்ட பணம் தேவைப்பட்டது. பெற்றோர்களிடம் ஓரளவு நன்கொடை திரட்ட முடிவெடுக்கப்பட்டது.

சித்ராவின் சமீபத்திய ஓவியங்களைப் பார்த்த ஓவிய மேதை ரஹ்மான், அவளைக் கொண்டே ஓவியங்களை வரைய வைத்து ஒரு கண்காட்சி நடத்தினால் அதைத் திறக்கத் தானே வருவதாகவும், அந்தக் கண்காட்சியில் ஓவியங்களை விற்று அதனால் வரும் தொகையை பள்ளிக்குச் செலவு செய்யலாம் என்றும் யோசனை கூறினார்.

சித்ரா முழு வேகத்தில் தனது திறமைகளை எல்லாம் காட்டி இருநூறு ஓவியங்களுக்கு மேல் தயார் செய்தாள். வாக்



களித்தபடி ரஹ்மானே காட்சியைத் திறக்க வந்தார். வெகு விரைவில் புகழின் உலக உச்சியை எட்டவிருக்கும் சித்ரா என்று புகழ்ந்ததோடு, காட்சியில் வைக்கப் பட்டிருந்த ஓவியங்களின் கலைச் சிறப்பையும் பாராட்டினார். அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது.

பிரபலங்களும், பெரிய நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு ஓவியங்களை வாங்கின. இரண்டு நாளில் முடிக்க இருந்த ஓவியக் காட்சி, கலாபிமானிகளின் வேண்டுகோள் காரணமாக மேலும் இரு நாட்களுக்கு நீடிக்கப்பட்டது. இருநூறுக்கு மேற்பட்ட ஓவியங்களில், நூறுக்கு மேல் விற்று விட்டன. இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் வசூலாயிற்று. யாராலுமே இதை நம்ப முடியவில்லை!



ஓவியக் காட்சி முடிந்த அன்று இரவு சித்ராவின் சிநேகிதிகள் கவிதா, சுந்தரி, புவனா, கதிஜா, மார்க்கரெட் ஆகியோர் மண்டபத்தில் மூட்டை கட்டிக் கொண்டிருந்தார்கள்.

விற்கப்பட்டவைகளுக்கு எல்லாம் உடனுக்குடன், 'விற்கப்பட்டு விட்டது' என்ற சீட்டு எழுதித் தொங்க விட்டிருந்தார்கள். காட்சி முடிந்ததும், வாங்கியவர்கள் அவற்றை எடுத்துச் சென்று விட்டார்கள். மீதி இருந்தவை விற்கப்படாதவை மட்டுமே.

திடீரென்று பவானி கேட்டாள், "ராட்டையில் நூற்கும் காந்தி படத்தைக் காணோமே!"

"ஆமாம், அதை சித்ரா தானே வைத்துக் கொள்ள விரும்பினாள்" என்றாள் சீதா.

"புதிதாகக் கட்ட உள்ள பள்ளிக் கட்டடத்தின் மைய மண்டபத்தை அழகு செய்ய அதை அன்பளிப்பாகத் தர அவள் எண்ணியிருந்தாள். பெரிய மேடம் பெரிதும் விரும்பிய படமாம் அது. அதனால் அதை நம் பள்ளிக்குத்தான் நன்கொடையாகத் தர இருந்தாள். அதனால்தான் அதில், 'விற்பனைக்கு அல்ல' என்று சீட்டு ஒட்டியிருந்தோம். அதையா காணவில்லை!" – தேவி பதைபதைத்தாள்.

"ஒருவேளை பெரியமேடத்திடமே சித்ரா கொடுத்து விட்டாளோ என்னவோ?" என்றாள் ராணி.

இரண்டு பேர் கோமதி மேடத்தின் அறைக்கு ஓடினார்கள். விஷயத்தைக் கேள்விப்பட்டதும், "என்னிடம் தரவில்லையே! தருவதாக வாக்குறுதி தந்தாள் அவ்வளவுதானே? எத்தனையோ பேர் விலைக்குக் கேட்டார்களே! எங்க பெரிய மேடம் கேட்டிருப்பது, எங்க பள்ளியின் புதிய கட்டடத்தின் மண்டபத்தை அலங்கரிக்கப் போகிறது என்று மறுத்து விட்டாளே... அதையா காணவில்லை!" என்று பதறிக் கொண்டு ஓடி வந்தார். மறுபடி எல்லாவற்றையும் எடுத்து தேடினார்கள். காந்தி படம் போன இடம் தெரியவில்லை.

அன்று சித்ராவின் பெயருக்கு ஒரு அயல்நாட்டுக் கடிதம் வந்திருந்தது. ஒரு மாதத்திற்கு முன் பிரான்ஸ் நாட்டில் போஸ்ட் செய்யப்பட்ட அது, இருபது நாட்களுக்கு முன்பு சென்னைக்கு வந்து, பசுபதி குடியிருந்த ஒவ்வொரு வீட்டுக்கும் அனுப்பப்பட்டு, கடைசியில் சரியான வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டது!

கடிதத்தை எழுதியிருந்தவர், அவளுடைய பிறந்த நாளன்று கோவிலைப் புகைப்படம் எடுத்து, பணம் பிடுங்கும் கும்பலிடம் சிக்கி, பின்னர் விடுவிக்கப்பட்ட பிரெஞ்சுக்காரர் ஸ்டான்லிதான். ஆங்கில நாளேட்டில் வெளிவந்த சித்ராவைப் பற்றிய கட்டுரையைப் படித்து

அவளுடைய முன்னேற்றத்தைப் பற்றி அறிந்து தனது மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தார். தானும் தனது குடும்பத்தார், நண்பர்கள் அவளை நேரில் சந்திக்க ஆசைப்படுவதாகவும், இதற்கான விமானப் போக்கு வரத்துக் கட்டணத்தைத் தாங்களே ஏற்பதாகவும், பிரான்ஸ் விஜயம் அவளுடைய ஓவியப் பணிக்கு மேலும் மெரு கூட்டும் என்றும் அவர் எழுதியிருந்தார்.

மங்கைக்கும், பசுபதிக்கும் அளவில்லாத மகிழ்ச்சி. 'சித்ரா பிரான்சுக்குப் போகப் போகிறாள். இந்த வயதில் யாருக்கு இந்த வாய்ப்புக் கிடைக்கும்!'



என்று அவர்களுக்கு ஒரே பெருமை. ஆனால், சித்ராவிடம் அந்த அளவுக்கு மகிழ்ச்சி இல்லை.

''ஏம்மா, ஸ்டான்லிக்கு விமான டிக்கெட் போக வர எடுத்து அனுப்பச் சொல்லி எழுது. நாங்கதான் திருப்பதியைத் தாண்டிக் கூடப் போனதில்லை. நீயாவது விமானத்தில் பறந்து பிரான்ஸுக்குப் போய் விட்டு வாம்மா'' என்றார் பசுபதி.

''அப்பா, நான் கூறுவதைத் தவறாக எண்ணாதீர்கள். ஸ்டான்லி விடுத்திருக்கும் இந்த அழைப்பு அவருக்கு என் மேல் உள்ள அன்பைக் காட்டுகிறது. அவர் தன் பணத்தைச் செலவழித்து என்னை வரச் சொல்லியிருக்கிறார். இது பெரிய பெருமை இல்லையே? பிரெஞ்சு அரசாங்கம் என்னை அழைத்து நான் போக வேண்டும். இல்லை, இந்திய அரசு என்னை அனுப்ப வேண்டும். அதுதான் பெருமை. அவரது அழைப்புக்கு நன்றி தெரிவித்தும், காலம் வரும்போது கண்டிப்பாக வருவேன் என்றும் எழுதி விடுகிறேன்'' என்றாள் சித்ரா.

அவளுடைய தன்னம்பிக்கை பசுபதிக்கும் மங்கைக்கும் பிரமிப்பாக இருந்தது. அவள் இதைச் சாதிக்கக்கூடியவள்தான். அவளுடைய திறமையை வளர விடாமல் மட்டம் தட்டி வைத்திருந்த குற்றம் தன்னுடையதுதான். இப்போதாவது தனக்குக் கண் திறந்ததே என்று பசுபதி எண்ணிக் கொண்டார்.

சிறுநீரகத்திற்காக சிறுவர் சிறுமியரையும், அப்பாவிகளையும் ஏமாற்றி அழைத்து வந்து, கொடுஞ்செயல் புரிந்த சமூக விரோதக் கும்பலைப் பிடிக்கக் காரணமாக இருந்த சித்ராவின் பெருதவி

தனித்திருப்பது எது?

கோடை விடுமுறைப் போட்டி - 2 முடிவு

கோடை விடுமுறைப் போட்டியில் மலை போல் குவியும் அளவிற்கு வாசகர்கள் பங்கு பெற்றுள்ளனர். எனவே குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. இ. மணிமேகலை, செய்யாறு
2. கே. கிருஷ்ண மணிகண்டன், கோவை
3. ஜி.ஆர். நிஷா, நாகர்கோவில்
4. ஜே. இன்பாண்ட்ஜோ, தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம்
5. மு. ஜென்னத்கனி, கண்டியூர் அஞ்சல், தஞ்சை மாவட்டம்
6. எஸ். அன்பு ஜிக்கி, கீழ்பூமி, கொடைக்கானல்
7. ஆர். ரேவதி, திருவள்ளூர்
8. ரா. கௌசல்யா, நான்குநேரி
9. சை. முகம்மது மீரான், துறையூர், திருச்சி மாவட்டம்
10. எஸ். உமா மகேஸ்வரி, எம்.ஜி.ஆர். நகர், சென்னை
11. ஆர். ராஜேஷ், சித்தூர்
12. அ. இளவரசி, செல்லூர், மதுரை மாவட்டம்
13. ஜெ. ஜான் ராபின் ரோஸ், ராஜபாளையம், விருதுநகர்
14. என். அனந்தராமன், பாலக்கோடு
15. உ. வித்யா ராணி, காயாமொழி வழி, தூத்துக்குடி மாவட்டம்

சரியான விடை :

சக்கரம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்! கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி!

யைப் பராட்டி முதலமைச்சர் ஐந்தாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், பதக்கமும் விடுதலை நாள் விழாவில் தரப் போவதாக அரசு அறிக்கை வெளியானது.

மறுபடியும் பேட்டி – புகைப்படம் எல்லாம் தொடர்ந்தன. விழாவுக்கு சித்ராவை அழைத்துக் கொண்டு பசுபதியும் மங்கையும் சென்றனர்.

"என்ன மிஸ்டர் பசுபதி, போகிற போக்கைப் பார்த்தால், டாக்டராகவோ, எஞ்சினீயராகவோ ஆகாமலேயே சித்ரா அயல்நாடுகளுக்குப் போய், புகழையும் பொருளையும் அள்ளிக் கொண்டு வந்து உங்கள் கனவைப் பூர்த்தி செய்து விடுவாள் போலிருக்கே!" என்றார் பெரிய மேடம்.

அன்று மாலை பசுபதி அலுவலகத்திலிருந்து திரும்பி வந்த போது வீட்டின் சொந்தக்காரர் அவருக்காகக் காத்திருந்தார். காப்பி உபசரிப்பு முடிந்தது.

"பசுபதி சார், பங்கு மார்க்கெட்டில் எனக்கு திடீர் நஷ்டம். தலைதூக்க முடியாது போலிருக்கு. உடனடியாக வீட்டை விற்பதாக முடிவு பண்ணியிருக்கேன். காலி வீடாகத் தந்தால் கூடுதலாக இருபதாயிரம் ரூபாய் தருவதாகக் கூறுகிறார்கள். இன்னும் இரண்டு மாதத்தில் வீட்டை தயவுசெய்து காலி செய்து கொடுங்கள்" என்று கெஞ்சினார் வீட்டுக்காரர்.

'ஒன்பதாவது வீடா!' பசுபதி அசந்து போய் நின்றார்.

அந்த வீட்டுக்காரர் மிக மிக நல்லவர். பேராசை இல்லாத பெருந்தன்மைக்காரர். ஓவிய ரசனை உள்ளவர். சித்ராவின் ஓவியங்களை மனம் திறந்து பாராட்டி ஊக்கமளிப்பார். இன்னும் சொல்லப் போனால், அந்த வீட்டில் மிகவும் மகிழ்ச்சியாக, மன அமைதியுடன், பெருமையுடன் அவர்கள் இருந்தார்கள். அதற்கும் ஆபத்து வந்து விட்டது.

"ஐயா, என்னால் உங்களுக்குத் தொந்தரவு இருக்காது. கண்டிப்பாகக் காலி செய்து விடுகிறேன்" என்று அவரை அனுப்பி வைத்தார் பசுபதி.

மூன்றாவது வீட்டுப் பையன் ஓடி வந்தான்.

"அங்கிள், உங்களுக்கு போன் வந்திருக்கு. சித்ரா அக்காவுக்கு ஏதோ விபத்தாம். நர்சிங்ஹோமில் சேர்த்திருக்கிறார்களாம்" என்றான்.


(வளரும்)


ஆசை!


கதை : ராம் ஜீசஸ்
படம் : சசி




எதுக்கு?
உன்னுடன் பழகுவதைப் பற்றி!
மற்றவர்கள் எப்படியோ! நான் உனக்காக உயிரையே கொடுப்பேன்.
எனக்கு உன் மேல் நம்பிக்கை இருக்கு.
நான் ஒண்ணு சொன்னா செய்வியா?
கண்டிப்பா செய்வேன்.
இங்கே சுற்றிக் கொண்டிருக்கே ஒரு ஒட்டகச்சிவிங்கி, அதைச் சாப்பிடணும்னு ரொம்ப நாள் ஆசை!
என்ன சொல்றே?
ஆமாம். ஏன் பதறுகிறே?
அது மிகவும் நல்ல குணமுடையது. எல்லோருக்கும் உதவும்.
உன் நண்பனோட சின்ன ஆசையைக் கூட நிறைவேற்ற மாட்டே!
கோவிச்சுக் காதே! திட்டத்தைச் சொல்லு.


ஒட்டகச்சிவிங்கி உறுதியான கால்களால் உதைத்தால் தாங்க மாட்டோம்.
அப்ப என்ன செய்யலாம்?
ஒட்டகச்சிவிங்கியிடம் கால் ஒடிந்த மாதிரி நடி. உன்னை முதுகில் ஏற்றிக் கொள்ளும். பின் மெதுவா கழுத்தைப் பிடித்துக் கொன்று விடு.
என்ன யோசிக்கிறே! நானே செய்வேன். ஆனால் என்னை நம்பாது.
சரி, எனக்கும் சாப்பிட ஆசை வந்து விட்டது.
நான் பக்கத்திலேயே தான் இருப்பேன்.
மறுநாள் –
ஒட்டகச் சிவிங்கி வருது. சீக்கிரம் படு.
கரடி படுத்தது.
சிவிங்கி அண்ணா என்னைக் காப் பாற்றுங்க.
என்னாச்சு?


மரத்திலிருந்து கீழே விழுந்திட்டேன். கால் ஒடிந்து விட்டது.
சரி. என் முதுகில் ஏறு. வைத்தியரிடம் போகலாம்.
முதுகிலே உட்கார முடியாது. வழுக்கும்.
சரி. என் தலையிலே உட்கார்ந்து காது ரெண்டையும் பிடிச்சுக்க.
ஒட்டகச்சிவிங்கி தலையைக் கீழே வைத்து நிமியை ஏற்றிக் கொண்டது.
தலையில் உட்கார்ந்த நிமி கழுத்தைப் பிடிக்க முயலும் போது –
ஆ! அம்மா! ஐயோ!
என்னாச்சு நிமி?
தடுமாறி விழுந்திட்டேன்.


ஐயோ! கிமி சீக்கிரம் ஓடிவா. என் கால் நிஜமாவே ஒடிஞ்சு போயிடுச்சு.
அப்படி என்றால்?
நானும் நண்பனும் உன்னைக் கொல்லத் திட்டம் போட்டோம். வலிக்குதே! கிமியைக் காணோமே!
அது ஓடிவிட்டது. சரி என் முதுகில் ஏறு.
எதுக்கு?
மருத்துவரிடம் காண்பித்து காலை சரி செய்ய வேண்டாமா?
நன்றி அண்ணா.

SUMMER ADVENTURE

Rs. 6/- only

KUKU AND MIKU

A LITTLE KINDNESS

Midnight Monster

PLUS

COMICS SPECIAL



August 1998

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

வந்தே மாதரம்!

°எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்



காட்சி 1

இடம்: ஸ்ரீதர் வீடு

ஜான்சி : என்ன ஸ்ரீதர் எதையோ துடைச்சுக்கிட்டிருக்கே?

ஸ்ரீதர்: எதையோவா?... இதோ பார், இந்த இந்தியாவோட பித்தளைப் பகுதியைத்தான் 'பாலிஷ்' போட்டு பளிச்சின்னு ஆக்கிக்கிட்டிருக்கேன். இது போன வருஷம் இதே தேதியில எனக்குக் கிடைச்ச பரிசாச்சே!... நினைவில்லையா?

ஜான்சி: ம்... நல்லா நினைவிருக்கு... ஒவ்வொரு மாதமும் இதே பத்தாம் தேதியிலே நீ இப்படி 'பாலிஷ்' போடும் போதெல்லாம் இதைப் பத்தி சொல்லிக்கிட்டுத்தானே இருக்கே?

ஸ்ரீதர்: அக்கா, இப்ப இந்த இந்தியா பளிச்சுன்னு இருக்கா பாரு!

ஜான்சி: ம்... ஜோராயிருக்கு... 'பாலிஷ்' போட்டது போதும். எடுத்து வச்சுடு... இல்லேன்னா பரிசு தேய்ஞ்சு பஞ்சா மாறிப் பறந்துடப் போறது!

ஸ்ரீதர்: ஏய் கிண்டலா பண்றே?... ஜான்சிராணியா வேஷம் போட்டு நடிச்சதுக்காகக் கிடைச்ச பரிசை, நீ கூடத்தான் அடிக்கடி பாலிஷ் போட்டுக்கிட்டிருக்கே!

ஜான்சி: ஸ்ரீதர், இப்போ இங்கே ஓர் அதிசயம் நடக்கப் போறது!

ஸ்ரீதர்: என்ன அதிசயம்?

ஜான்சி: கண்ணை மூடிக்க!... ஒன்,டு, த்ரீ! இப்போ கண்ணைத் திற! எதிரிலே டீ.வி.யைப் பார்!

ஸ்ரீதர்: ஹைய்யா... நான் போன வருஷம் பரிசு வாங்கினப்போ எடுத்த வீடியோ கேஸட்டைப் போட்டிருக்கியா?' வெரிகுட்! 'டெக்'கை எப்போ வாங்கிக்கிட்டு வந்தே? நான் கவனிக்கவேயில்லையே...!

ஜான்சி: ஒரு வாரமா இந்த வீடியோ கேஸட்டைப் போட்டுப் பார்க்க துடிச்சுக்கிட்டிருந்தே இல்லே? அதுக்காக என் ஃப்ரெண்டு வீட்லேயிருந்து நான்தான் எடுத்துக்கிட்டு வந்தேன்...

ஸ்ரீதர்: ரொம்ப நன்றிக்கா! அதோ நான் வரேன். பாரு... ஐய்யய்யோ... கரெண்ட் போயிடுத்து. இன்னும் ரெண்டு மணி நேரத்துக்குக் கரெண்ட் வரப் போறதில்லே... ச்சீ!

ஜான்சி: சரி, உன் மலரும் நினைவுகளை மெதுவா பார்த்துக்கலாம். மத்த வேலைகளைக் கவனி!

காட்சி 2

இடம்: ஸ்ரீதர் வீடு

(போன் மணி அடிக்கிறது. ஜான்சி எடுக்கிறாள்)

ஜான்சி: ம்... ஆமாம்! ஸ்ரீதர் அக்கா

ஜான்சிதான் பேசறேன். ம்... ஸ்ரீதர் தானே? இருக்கான். இதோ கூப்பிட றேன்... டேய் ஸ்ரீதர்...உன் ஃப்ரண்டு ராஜேஷ் கூப்பிடறான்!

ஸ்ரீதர்: உஷ்ஷ்.. நான் வீட்லே இல்லேன்னு சொல்லிடு!

ஜான்சி: ஹ்ஹூம்... நான் பொய் சொல்ல மாட்டேன்... வேணும்னா, நீ இப்படி வீட்லே இருந்துகிட்டே 'இல்லே'ன்னு சொல்லச் சொன்னதா சொல்லிடறேன்... ஹலோ... ஹலோ.... அடேடே... போன் லைனே கட் ஆயிருச்சு! டேய், ஏன் இப்படி பொய் சொல்றே?

ஸ்ரீதர்: போக்கா. இந்த ராஜேஷ் கொஞ்சம்கூட நன்றியில்லாதவன்.

ஜான்சி: என்ன சொல்றே நீ?

ஸ்ரீதர்: போன மாதம் ஒருநாள் ராஜேஷ் எனக்கு போன் பண்ணினான் நினைவிருக்கா?

ஜான்சி: ஆமாம்! ஏதோ ஒரு புத்தகத் தோட தலைப்பைச் சொல்லி, அவ சரமா வேணும்னு கேட்டான்!


ஸ்ரீதர்: நானும் திருவல்லிக்கேணி நடை பாதைக் கடைகளையெல்லாம் அலசி, அவன் கேட்ட அந்தப் புத்தகத் தைக் கண்டுபிடிச்சேன்; அடுத்த நாளே அவன் வீட்டுக்குப் போய் புத்தகத் தைக் கொடுத்துட்டு வந்தேன். நான் செய்த அந்த உதவிக்காக இந்த ராஜேஷ் இது வரைக்கும் 'நன்றி'ன்னு ஒரு வார்த்தைகூட சொல்லல்லே!"

ஜான்சி: ஒருவேளை 'தாங்க்ஸ்'ன்னு சொல்லியிருப்பான்; உனக்குப் புரிஞ் சிருக்காது.

ஸ்ரீதர்: ஏய்... இன்னும் கேளு! இந்த ராஜேஷ் ஒருநாள் பள்ளிக்கூடத்து 'கிளாஸ் ரூம்'லே தன்னையறியாம தூங் கிட்டான். கடைசி 'பீரியட்' முடிஞ்சு பள்ளிக் கூடம் மூடற நேரம். யாரோ அவன் அறைக்குள்ளே இருக்கிறதைக் கவனிக் காம வெளியிலே பூட்டிட்டுப் போயிட் டாங்க!

ஜான்சி: ஐய்யய்யோ அப்புறம்?

ஸ்ரீதர்: என் கூடவே எப்போதும் வீட்டுக்குத் திரும்பற ராஜேஷைக் காணாமல் நான் அவன் வகுப்பறை பக்கமா தேடப் போனேன். அறை பூட்டிக் கிடந்தது. ஆனா அறைக்கதவை யாரோ உள்ளேயிருந்து தட்டற சத்தம்



கேட்டது. 'கதவைத் திறங்க! ராஜேஷ் உள்ளே இருக்கேன்'னு குரல் கொடுத்துக்கிட்டேயிருந்தான். உடனே நான் ஹெட்மாஸ்டர் அறைக்கு ஓடிப் போய் விவரத்தைச் சொல்லி கதவைத் திறக்கச் செய்தேன்.

ஜான்சி: நல்லவேளை! நீ மட்டும் இல்லேன்னா ராஜேஷ் ரொம்ப அவதிப் பட்டிருப்பான்!

ஸ்ரீதர்: ஆமாம்! என் முயற்சியால தான் ராஜேஷுக்கு அன்னிக்கு விடுதலை கிடைச்சது. ஆனா இதுவரைக்கும் அவன் எனக்கு நன்றி சொல்லல்லே... தப்புதானே?

ஜான்சி: ஆமாம்! நிச்சயமா தப்பு தான்! அவன் ஏன் இப்படி நன்றி தெரிவிக்காம நடந்துக்கிட்டான்?

ஸ்ரீதர்: திமிர்... தான்தான் ஒவ்வொரு முறையும் வகுப்பிலே முதல் ரேங்க் எடுக்கறோம்கிற நினைப்பு!

காட்சி 3

அப்பா: டேய் ஸ்ரீதர் ரெடியா?

ஸ்ரீதர்: எதுக்குப்பா?

அப்பா: என்னடா எதுவும் தெரியாத மாதிரி கேக்கறே? நம்ம நகர்ல இன்னிக்கு சுதந்தர தினப் பொன்விழா ஆண்டைக் கொண்டாடப் போறாங்க. விழாவிலே சுதந்தரப் போராட்ட வீரர்கள் வந்து பேசப் போறாங்க. விடுதலைப் போராட்டத்திலே, தாய் நாட்டு சுதந்தரத்திற்காக தாங்கள் பட்ட பல அனுபவங்களைச் சொல்லப் போறாங்க... உங்களை மாதிரி சின்னப் பிள்ளைங்கதான் கட்டாயம் இந்த மாதிரி விழாவுக்கெல்லாம் வரணும்!

ஸ்ரீதர்: போங்கப்பா நான் வரல்லே... இப்போ நான் உடனே இந்த வீடியோவைப் போட்டுப் பார்க்கணும்.

அப்பா: டேய், போன வருஷம் இதே நாள்லே கிரிக்கெட் மாட்சைக் காரணம் காட்டி விழாவுக்கு வரல்லே... இப்போ வீடியோ பார்க்





''கால்ல கால் போனா என்ன வரும்?''
''சைபர் வரும்!''
''இல்ல 'கல்' வரும்!''

— பொன். குமார்

கணும்கிறே... இந்த வீடியோவை நீ எப்ப வேணும்னாலும் பார்த்துக்கலாம்... இன்னிக்கு நம்ம எல்லோருக்கும் விடுமுறை விட்டிருக்கிறதே, சுதந்தர தின விழாக் கொண்டாட்டங்கள்லே எல்லாரும் தவறாம கலந்துக்கணும்கிற காரணத்தாலதான். இந்தா சுதந்தரக் கொடி... சட்டையிலே குத்திக் கிட்டு உடனே புறப்பட்டு வா... நான் முன்னாலே போறேன். (அப்பா வெளியே புறப்படுகிறார்)

ஜான்சி: நானும் வரேன்பா!

அப்பா: வேண்டாம்! உனக்கு ரெண்டு நாளா உடம்பு சரியில்லே.... அலையக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார். நான் போனதும் ஸ்ரீதரை அனுப்பு. நான் வரேன்.

ஜான்சி: என்ன ஸ்ரீதர் யோசிக்கறே. விழாவுக்குப் புறப்படு.

ஸ்ரீதர்: போக்கா... நான் விழாவுக்குப் போகப் போறதில்லே... அங்கே எல்லாம் வழக்கம் போலத்தான் நடக்கப் போறது.

ஜான்சி: இந்த டெக்கும் இங்கேயே தான் இருக்கும். எப்ப வேணும்னாலும் பாத்துக்கலாம்... ம்.. புறப்படு.

ஸ்ரீதர்: அதெல்லாம் முடியாது. எனக்கு உடனே 'வீடியோ' பார்த்தாகணும்... ச்சே! இப்பவும் கரெண்ட் கட்டா?

அப்பா: (வெளியிலிருந்து வந்தபடி) ஆமாம், நன்றி உணர்ச்சி இல்லாதவங்களை இந்த கரெண்ட்டுக்குப் பிடிக்காது.

ஜான்சி: அப்பா ஏன் திரும்பி வந்துட்டீங்க?

அப்பா: ஒரு பொன்னாடையை எடுத்துக்கிட்டுப் போக மறந்துட்டேன்; அதுக்காகத்தான் திரும்பி வந்தேன். ஸ்ரீதர், நீ பேசினதையும் கேட்டேன். உனக்கு நன்றியுணர்ச்சியே இல்லலே!

ஸ்ரீதர்: என்னப்பா சொல்றீங்க?

அப்பா: ஆமாம்! அன்னிக்கு கொஞ்சம் நேரம் வகுப்பறையிலே தூங்கிக்கிட்டிருந்த ராஜேஷை விடுவிச்சதுக்கே நன்றியை நீ எதிர்பார்க்கறே!

ஸ்ரீதர்: அப்படி எதிர்பார்க்கறது தப்பா?

அப்பா: இல்லை... ஆனா இப்ப சொல்லப் போறதை கேட்டுக்க.. ஐம்பது வருஷங்களுக்கு முன்னால நாம ஆங்கிலேயர் அரசாட்சியிலே இருந்தோம். பல கொடுமைகளை அனுபவிச்சோம். அடிமை வாழ்வு வாழ்ந்துக்கிட்டிருந்த இந்தியர்களை விடுவிக்கப் பல விடுதலைப் போராட்ட வீரர்களும் ஆயிரக்கணக்கான தொண்டர்களும் முன் வந்தாங்க! இவங்க தங்கள் உயிரையும் செல்வத்தையும் நாட்டு விடுதலைக்காக அர்ப்பணிச்சிருக்காங்க! இவங்களுக்கெல்லாம் நாம நன்றி சொல்லணுமா, வேண்டாமா?

ஜான்சி: ம்!... நிச்சயமா சொல்லணும்! 'நன்றி மறப்பது நன்றன்று'.

அப்பா: கொஞ்ச நேரம் வகுப்பறையிலே அடைஞ்சு கிடந்த ராஜேஷை விடுதலை பண்ணதுக்காக நீ நன்றியை எதிர் பார்க்கிறபோது, பல நூறு வருஷங்களா அடிமைபட்ட இந்தியர்களை விடுவிச்ச தியாக வீரர்களுக்கு நாமும் நன்றி செலுத்தறது நம்மோட கடமை!

அது மட்டுமில்லை ஸ்ரீதர், உனக்குக் கிடைச்ச இந்தியா உருவம் பதிச்ச பரிசுப் பொருளை தும்பு தூசு துடைச்சு பளிச்சுன்னு வச்சுக்க நீ ஆசைப்படறே! நமக்குக் கிடைச்சிருக்கிற சுதந்தரம், காந்தி தலைமையிலே பல தலைவர்கள் ஒண்ணா சேர்ந்து போராடி நமக்கு வாங்கித் தந்திருக்கிற ஓர் அபூர்வமான பரிசுப் பொருள்தான். இதை வழிவழியா நாமதான் பாதுகாக்கணும்!

ஜான்சி: அதுக்காகத்தான் குடியரசு தினம், சுதந்தர தினம் போன்ற தேசிய விழாக்களை நாம தவறாது கொண்டாடிக் கிட்டிருக்கோம்; அந்தத் தலைவர்களுக்கும் நன்றி சொல்லிக்கிட்டிருக்கோம்; இல்லையாப்பா?

அப்பா: ஆமாம்! இது நாம் பிறந்த நாடு! இந்த இந்தியா நமக்குச் சொந்தம்; நாம் யாருக்கும் அடிமையில்லை. நாம் எல்லோரும் சுதந்தரக் குடிமக்கள்! இந்த உணர்வுதான் சுதந்தர வாழ்க்கைக்கு அடிப்படை. இந்த உணர்வு உன் தாத்தாவுக்கு இருந்தது. எங்க அப்பாவுக்கு இருந்தது. எனக்கு இருக்கு. உங்களுக்கும் இருக்கணும். ஏன்னா நாளைய இந்தியாவை ஆள வேண்டிய பொறுப்பு உங்கக்கிட்டே தான் இருக்கு! அதனால சின்னப் பிள்ளைகளாகிய நீங்கதான் தவறாம இது போன்ற தேசிய விழாக்களில் கலந்துக்கணும்; சுதந்தர இந்தியாவைப் பத்தி பல விஷயங்களைத் தெரிஞ்சுக்கணும். அப்போதுதான் தேச பக்தி உணர்ச்சி நமக்கு வரும்; ஒற்றுமையா வாழ ஆசைப்படுவோம்!

ஸ்ரீதர்: அப்பா!... நீங்க சொல்றதெல்லாம் ரொம்ப கரெக்ட்! இதோ ஒரே நிமிஷத்துல உங்களோடு வந்து விழாவிலே கலந்துக்கறேன்!

ஜான்சி: ஸ்ரீதர்! இந்த மாதிரி தேசிய விழாவிலே கலந்துக்கறவங்க அடிக்கடி ஒரு கோஷம் போடுவாங்க. பிறந்த நாட்டை தாயா நினைச்சு வணங்குவாங்க! அது என்னன்னு உனக்குத் தெரியுமா?


ஸ்ரீதர்: ஓ! தெரியுமே! வந்தே மாதரம்! வந்தே மாதரம்!... வாங்கப்பா போகலாம்!

ஜான்சி: ஸ்ரீதர்! இதோ கரெண்ட் வந்தாச்சு; வீடியோ போடவா?

ஸ்ரீதர்: வேண்டாம்; மொதல்லே விழா; அப்புறம் வீடியோ! 'வந்தே மாதரம்!' 'வந்தே மாதரம்!'



1 ஆ	ம்	ஸ்	ட்	ரா	ங்		2 பு	ல்
ர		ரி			சி	3 ரு		ப
ஞ்		4 பா	ரி		த்		சு	5 சி
சு	6 ப			னி	7 க			8 டெ
	னி		9 பா		10 ப		ழை	
ல்			11 த	டி			12 வா	ன்
13 சி	றை		ர		14 ரோ	ம்		த
ரே		பை	15 ச			த		ந்
16 பி	னி		ம்	ய	ண்	17 ர	தா	18 வே



எங்கள் பள்ளியில் நடந்தது

வைரஸ் என்றால் என்ன?


கம்பு கொண்டு வா!

எங்கள் பள்ளியைச் சுற்றி வயல்வெளி. புதிதாக கணித ஆசிரியர் எங்கள் வகுப்பிற்கு வந்திருந்தார். முதல் நாள் கொடுத்த வீட்டுப் பாடங்களை செய்யாதவர்கள் எழுந்து நிற்கும்படி கூறினார். பத்துப் பேர் எழுந்து நின்றனர். ஒரு மாணவனை எழுப்பி "கம்பு கொண்டு வா" என்றார். அவனோ வயலில் விளைந்த கம்புப் பயிரைப் பறித்து வந்தான். அதைப் பார்த்த ஆசிரியர் சிரித்தபடியே,

ஒளித்து வைத்த...

அறிவியல் பாட வேளை. "எறும்புகளைப் பற்றி ஒவ்வொருவரும் ஒரு செய்தி சொல்ல வேண்டும்" என்றார் ஆசிரியர். நான் கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்தேன். எறும்பைப் பற்றி தெரிந்த விஷயங்கள் அனைத்தையும் மற்றவர்கள் சொல்லி விட்டார்கள். என் முறை வந்தது. நான் என்ன சொல்வதென்று விழித்தேன். ஆசிரியரோ கண்டிப்பாகச் சொல்ல வேண்டும் எனக் கூறி விட்டார். சிறிது யோசனைக்குப் பின், "வீட்டில் அம்மா ஒளித்து வைத்த தின்பண்டத்தைக் கண்டு பிடிக்க உதவும் சார்" என்றேன். அனைவரும் சிரித்தனர். அன்றிலிருந்து என்னை எறும்பு சங்கர் என்றே அழைக்கின்றனர்.

– செ. சங்கர், எட்டாம் வகுப்பு,
அரசினர் ஆண்கள் மேல்
நிலைப் பள்ளி, வத்தலக்குண்டு.







உன் பெயரைக் கேட்டேனா?

பள்ளி உணவு இடைவேளையின் போது நானும் என் தோழியும் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது இரு

பாயசமா?

அறிவியல் ஆசிரியர் முதல் நாள் நடத்திய பாடத்திலிருந்து கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார். என் நண்பன் எதையோ தேடிக் கொண்டிருந்ததைப் பார்த்த ஆசிரியர் அவனை எழுப்பி "வைரஸ் என்று





"நான் அடிக்கக் கம்பு அதாவது குச்சி கேட்டேன்" என்று விளக்கினார். வகுப்பு முழுவதும் சிரிப்பு. அவர்களும் அடிவாங்காமல் தப்பினர்.

– கோ. பிரியா, ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேனிலைப் பள்ளி,
பெரியதச்சூர்.

சுத்தம் சோறு போடும்!

தமிழ் பாடவேளை. தமிழாசிரியர் வகுப்பு தலைவனைக் கூப்பிட்டு கேள்வி,



பதில்களை வாசிக்கச் சொல்லி எல்லோரையும் எழுதும்படிக் கூறினார். நாங்கள் எழுத ஆரம்பித்தோம். "சுத்தம் சோறு போடும்" என்று வாசிக்கும் போது என் பின்னால் இருந்த மாணவன் "எது குழம்பு ஊத்தும்னு சொல்லேண்டா" என்றான் கிண்டலாக. வாசித்தவனுக்கோ கோபம் வந்தது. "சார் வந்ததும் கேட்டுச் சொல்றேன்" என்றான். உடனே மன்னிப்புக் கேட்டுவிட்டு எழுத ஆரம்பித்தான் அந்த மாணவன்.

– ஆர். லட்சுமணன், ஒன்பதாம் வகுப்பு,
வெள்ளையாம்பட்டு.

வருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அவள் மிகவும் கோபமடைந்து என்னை "முட்டாள்" என்றாள். நானும் சளைக்காமல் "உன் பேரை நான் கேட்டேனா?" என்றேன். என் தோழி ஒரு நிமிடம் மலைத்து நின்றாள். பிறகு சிரித்தபடியே மன்னிப்புக் கேட்டாள். நானும் சமாதானமடைந்து பேசினேன்.

– எம்.எஸ். உம்மு அம்மாரா,
இமாம் கஸ்ஸாலி மெட்ரிக் பள்ளி,
லால்பேட்டை.


சொல்லின் பொருள் என்ன?" என்று கேட்டார். பதில் சொல்ல வேகமாக எழுந்து "பாயசம் சார்" என்றான். வகுப்பில் ஒரே சிரிப்பு. ஆசிரியரும் எங்களுடன் சிரித்து விட்டு, "வைரசை வைத்து பாயசம் காய்ச்ச முடியாது, வைரஸ் என்றால் பாக்டீரியாவை விட நுண்மையான கிருமி; அம்மை போன்ற பல வியாதிகளுக்குக் காரணமாகிறது" என்று விளக்கினார். பிறந்தநாள் பாயசத்தை டிபன்பாக்ஸில் தேடிக் கொண்டிருந்த நண்பன் அசடு வழிந்தான்.

– கே. புருஸ்லின், ஏழாம் வகுப்பு,
சி.எஸ்.ஐ.ஜி.எஸ். ஆங்கிலப் பள்ளி,
ஐரேனிபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.

எட்டி எட்டி...

ஓவிய வகுப்பு. ஆளுக்கொரு படம் வரையச் சொன்னார் ஆசிரியர். என் பக்கத்தில் இருந்த மாணவன் எட்டி எட்டிப் பார்த்து வரைந்து கொண்டிருந்தான். நான், "சார் பாபு எட்டி எட்டிப் பார்த்து வரையறான்" என்றேன். உடனே ஆசிரியர், "பாபு உன் பக்கத்திலேதான் அவன் உட்கார்ந்து இருக்கானே, அப்புறம் ஏன் எட்டிப் பார்த்து வரையறே? எட்டாமல் வரை" என்றார் சிரித்தபடியே. பிறகு பாபுவைக் கூப்பிட்டுக் கண்டித்தார்.

– கி. சடைச்சாமி,
புதுப்பேட்டை, சிதம்பரம்.



செல்லாக்காசு!

பள்ளிக்கூடம் விட்டதும் அனைத்து மாணவர்களும் வீடு நோக்கிச் செல்ல, மாதவன் மட்டும் தோப்பை நோக்கிச் சென்றான்.

தோப்பிற்குள் நுழைந்து விட்டால், அவனுக்கு ஒரே 'குஷி'தான். எல்லாவற்றையுமே மறந்து விடுவான். வீட்டு நினைவே வராது. ஆலமரத்தின் இரண்டு விழுதுகளை ஒன்று சேர்த்து முடிச்சுப் போட்டான். அதன் மேலே ஏறி உட்கார்ந்து ஊஞ்சலாடினான்.

"ஏண்டா, விழுந்தா என்ன ஆகும்? கீழே இறங்கி விளையாடுடா..." என்று அந்த வழியாகச் சென்றவர்கள் சொன்னார்கள்.

அவன் அதையெல்லாம் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை.

தூரத்தில் அவனது ஆசிரியர் வருவது எப்படியோ, அவன் பார்வையில் பட்டு விட்டது. 'பட்....'டென்று கீழே குதித்தான். மரத்தின் அடியில் அமைதியாக உட்கார்ந்து பாடம் படிக்க ஆரம்பித்தான்.

அருகில் வந்த ஆசிரியரும், அவன் படிப்பதைப் பார்த்து, "என்ன மாதவா... படிக்கிறியா? ம்... நல்லாபடி..." என்று சொல்லி விட்டுச் சென்றார்.

இவன் இப்படி நடந்து கொள்வதால், இவனது தவறுகள் ஆசிரியர்களுக்குத் தெரிய வாய்ப்பே இல்லாமல் போனது. அதிலும் அவன் எப்படிச் சுற்றினாலும், படிப்பு மட்டும் நன்றாக அமைந்ததால், அவனது சிறு சிறு தவறுகளைக் கூட யாரும் கண்டிப்பதில்லை.

இருட்ட ஆரம்பித்தது. பசி தன் வயிற்றைப் பிசைந்த போதுதான் அவனுக்கு வீட்டு நினைவே வந்தது. தோப்பை விட்டு வெளியே வந்தான்.

தெரு ஓரத்தில் ஒரு ஆணி கிடக்க, அதை கையில் எடுத்துக் கொண்டான். அவனால் அதை வைத்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தான். ஒரு கடையின் ஓரத்தில், சைக்கிள் நின்று கொண்டிருந்தது. அப்போதுதான் அவனுக்குள் அப்படியொரு எண்ணம் தோன்றியது.

சாலையின் இருபுறமும் திரும்பிப் பார்த்தான். யாருமே அவனைக் கவனிக்கவில்லை. சைக்கிளின் பின் சக்கரத்தில், அந்த ஆணியை வைத்துக் குத்தினான். அவ்வளவுதான். காற்று 'புஸ்' என்று வெளியேறியது.

அவனுக்குள் அப்படி ஒரு சந்தோஷம்! அந்த சைக்கிள்காரர் வந்ததும் என்ன பாடு படுகிறார் என்பதைப் பார்க்க அவனுக்கு ஆசை. சற்று ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டான்.

சற்று நேரத்தில் கடையின் உள்ளே இருந்து அவனது தாத்தாவும், அவரது நண்பரும் பேசிக் கொண்டே வந்தனர். அவ்வளவுதான்... அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. சைக்கிள் அருகே வந்ததும், தாத்தா, இவனைப் பார்த்து விட்டார்.

"என்ன மாதவா... இவ்வளவு நேரமாச்சு. வீட்டுக்குப் போகாம, இங்கே என்ன பண்ணுறே...?" என்று கேட்டார், தாத்தா.

"அது... வந்து... தாத்தா... ஸ்கூல் விட்டு... என் நண்பன் வீட்டுக்கு..."

அவன் தயங்கித் தயங்கிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

"சார்... சைக்கிள் பஞ்சர் ஆயிடுச்சு போல... ச்சே... வரும்போது நல்லாத்தான் இருந்தது" என்று சலித்துக் கொண்டார்,

தாத்தாவின் நண்பர்.

எப்படியோ... தப்பித்தாகி விட்டது. அதுபோதும். தாத்தா கூடவே நடந்தான். தாத்தாவின் நண்பர் நடந்து கொண்டே, தன் வீடு நோக்கிச் செல்ல, தாத்தாவும், அவனும் மெதுவாக நடந்தனர். தாத்தாவுக்கு உண்மை புரிந்து விட்டது போலும். ஏனென்றால், அவரது பேச்சு, அடிக்கடி சைக்கிளைப் பற்றியே இருந்தது. ஆனால்... நேரிடையாகக் கேட்கவில்லை. ஒரு வழியாக வீடும் வந்து விட்டது.



தாத்தாவிடமிருந்து தப்பித்து விட்ட திருப்தியில், அடுக்களையில் இருந்த அம்மாவுடன் ஒட்டிக் கொண்டான்.

அடுத்த நாள் காலை தூங்கி எழுந்தான். தாத்தா காலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார். முகம் கழுவி விட்டு அடுக்களைக்குள் நுழைந்தான் மாதவன்.

"மாதவா... தேங்காய்ச்சில் வேணும். ஒரு ரூபாய் எடுத்துட்டுப் போய் வாங்கிட்டு வா..." என்று அம்மா சொல்ல, கடைக்குச் சென்றான்.

போன சில நிமிடங்களில் திரும்பி வந்தான்.

"என்ன மாதவா... தேங்காய்ச்சில் இல்லையா...?" என்று கேட்டார், தாத்தா.

"இல்லே தாத்தா... இந்த ஒரு ரூபாய் நாணயம் செல்லாதாம். அதான் திரும்பி வந்துட்டேன்."

"எங்கே... அந்த ஒரு ரூபாயைக் கொடு, பார்க்கலாம்" என்றார் தாத்தா.

தன் கையில் இருந்த ஒரு ரூபாய் நாணயத்தைத் தாத்தாவிடம் கொடுத்தான். நாணயத்தின் ஒரு பகுதி அரித்துப் போய் இருந்தது. தாத்தா அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன தாத்தா... அதுதான் செல்லாத காசாச்சே... அதைப் போய் ஏன் இப்படிப் பார்க்குறீங்க...?" என்று கேட்டான், மாதவன்.

"மாதவா... இந்த நாணயத்தைப் பார்த்து உனக்கு ஒண்ணுமே புரியலையா?" என்று கேட்டார், தாத்தா.

"ம்ஹூம்... புரியலையே..."


"மாதவா... இப்படிப் பக்கத்துல வா... நாணயம்னு இருந்தா, அதுல ரெண்டு பக்கம் இருக்கும். அந்த ரெண்டு பக்கமும், சிதைந்து போகாம, தெளிவா இருக்கணும். அப்பத்தான் அந்த நாணயம் பயன்படும். இல்லாட்டி, அதை 'செல்லாக் காசு' அப்படின்னு நாம ஒதுக்கிடுறோம் இல்லையா! அது மாதிரிதான் மாதவா, படிக்கிற உன் போன்ற மாணவர்கள்" என்று நிறுத்தினார் தாத்தா.

"என்ன தாத்தா... என்னென்னமோ சொல்றீங்க?" என்று புரியாமல் கேட்டான், மாதவன்.

"அவசரப் படாதே. படிக்கிற மாணவர்கள் படிப்புல மட்டும் கவனம் அதிகம் செலுத்தி, நல்ல மார்க் வாங்கினா மட்டும் போதாது. அவங்களோட வெளிப் பழக்கமும், நல்லா இருக்கணும். படிப்பு மட்டும் நல்லா இருந்து, ஒழுக்கம் தவறி இருந்தா, அவங்களும் செல்லாக் காசு மாதிரிதானே" என்றார் தாத்தா.

மாதவனுக்கு இப்போது நன்றாகவே விளங்கியது. அன்று முதல் படிப்பில் மட்டுமின்றி, பிற விஷயங்களிலும் சிறந்தவனாக நடந்து கொண்டான்.

அருப்புக்கோட்டை செல்வம்



"எங்க வீட்டில் இருந்த பழைய வாளைப் போட்டு பேரீச்சம்பழம் வாங்கினோம்."

"அப்ப அது 'பழம்' பெறும் வாள்னு சொல்லு!"


— சு. சௌம்யாயனி,
நான்காம் வகுப்பு,
தூத்துக்குடி.

"சிங்கத்திற்கு பக்கத்திலேயே போய் தைரியமா நின்னேன். அது என்னை ஒண்ணும் பண்ணலை!"

"அடடே எங்கே?"

"மிருகக் காட்சி சாலையில்தான்!"

— அ. புவனேஸ்வரி, தாரமங்கலம்.



ஹா, ஹா, ஹா!

"பால்காரர் சினிமாவுக்கு போனா எங்க உட்கார்ந்து படம் பார்ப்பார்னு சொல்லு?"

"பால்கனியிலதான்!"


— காழி. ஆர். சீதாராமன்.




"அவன் ராஜா மாதிரி இருக்கான்னு சொல்றியே அப்படி என்ன வேலை?"

"'செக்'கிங்' இன்ஸ்பெக்டர் வேலை!"

— கங்கா கணேசன்.





"என்ன செய்துக்கிட்டு இருக்கே?"

"'பசு'மையான நினைவுகளை அசை போட்டுக்கிட்டு இருக்கேன்!"

— கடலூர் கன்னியப்பன்.



மண் பொம்மை

கே. சோமசேகர்

விமலா ஓர் அப்பாவி. யார் எதைச் சொன்னாலும் நம்பி விடுவாள். அவள் கணவன் காட்டில் விறகுவெட்டி விற்று பிழைப்பு நடத்தி வந்தான். விமலாவின் மாமியார், தன் மருமகள் இப்படி ஒரு அப்பாவியாக இருக்கிறாளே என்று எண்ணி மிகவும் கவலைப்பட்டாள்.

விமலா எந்த வேலையையும் தம் மாமியாரைக் கேட்காமல் செய்ததேயில்லை. "அம்மா சாதம் பண்ணட்டுமா...? அம்மா குழம்பு பண்ணட்டுமா..? எவ்வளவு சாதம் பண்ணனும்....? எத்தனைப்படி அரிசி செய்யணும்?" இப்படிப்பல கேள்விகள் கேட்ட பிறகுதான் வேலையைத் தொடங்குவாள். மாமியாரும் எவ்வளவோ சொல்லிப்பார்த்து விட்டாள்.

"தினம் செய்யும் சமையல்தானே... உனக்கே அளவு தெரியாதா? என்னைக் கேட்காமல் உன்னால் செய்ய முடியாதா?"

விமலா கேட்பதாயில்லை. விமலாவின் அப்பாவித்தனம் அந்த ஊருக்கே தெரிந்திருந்தது.

எதிர்பாராத விதமாக விமலாவின் மாமியார் ஒருநாள் இறந்து விட்டாள். விமலா மிகவும் வேதனைப்பட்டாள். அழுதாள்.

"இனி நான் யாரைக் கேட்டு சமையல், மற்ற வேலைகளைச் செய்வேன்?"

அவள் கணவன் வேலப்பன் அதிகாலையிலேயே விறகு வெட்ட கிளம்பிவிடுவதால் அவனிடமும் கேட்டுச் செய்ய முடியாது. ஒருநாள் விமலா பக்கத்து வீட்டு பரிமளத்திடம் விஷயத்தைச் சொல்லி அழுதாள். அப்பாவி விமலாவை ஏமாற்ற நினைத்தாள் பரிமளம்.

"கவலைப்படாதே விமலா...! நான் ஒரு மண்ணில் உன் மாமியாரைச் செய்து தருகிறேன். எனக்கு ஒரு மந்திரவாதியைத் தெரியும். அவன் மூலம் அந்த பொம்மைக்கு உயிர் வர வழைக்கிறேன். ஆனால் பொம்மையால் பேச முடியாது. கையால் சைகைகள் காட்டும்!" என்றாள் பரிமளம்.

விமலா ஆச்சரியமடைந்தாள்.

"ஆனால் சில நிபந்தனைகள் இருக்கு விமலா. நீ சமையல் பண்றதுக்கு முன்னாடி உன் மாமியார் எவ்வளவு செய்யச்

சொல்றாங்களோ அவ்வளவு அரிசி, பருப்பை அவர் முன்னாடி நீ அரைமணி நேரம் வச்சிட்டு வெளியிலே போயிடணும். இந்த விஷயம் நம் இரண்டு பேரைத் தவிர வேறு யாருக்கும் தெரியக் கூடாது.''

விமலா ஒப்புக் கொண்டாள்.

பரிமளம் களிமண்ணில் ஒரு பொம்மையை விமலா மாமியார் சாயலில் செய்து கொடுத்தாள். தினமும் மெதுவாகச் சென்று மண் மாமியார் பொம்மையின் விரல்களை ஈரக் களிமண்ணால் தனக்கும் சேர்த்து பொருள்கள் வருகிறார் போல் மாற்றிவிடுவாள். தனக்கு ஐந்து படி அரிசி தேவையெனில் மண் மாமியார் பொம்மை விரலை ஏழுபடி எனக் காட்டும் வகையில் ஏழு விரல்களை நீட்டி வைத்து விடுவாள். அந்த அரைமணி நேரத்திற்குள் விமலாவுக்குத் தெரியாமல் அரிசியைத் தூக்கிக் கொண்டு போய் விடுவாள். இதேபோல பருப்பு, எண்ணெய் என எல்லாவற்றையும் ஏமாற்றி எடுத்துக் கொண்டாள்.



நம் நாட்டில் தந்தையின் பெயரின் முதல் எழுத்தையே தங்கள் பெயருக்கு இனிஷியலாகப் போடுகிறோம். ஆனால் 'ஸ்பெயின்' நாட்டில் தாயார் பெயரின் முதல் எழுத்தையே 'இனிஷியலாக' வைத்துக் கொள்கிறார்கள்!

– கே. பாரதி

அப்பாவி விமலாவும் தன் மாமியார் தான் உண்மையிலேயே சொல்கிறாள் என நம்பி கை விரல்களின் ஆணைகளுக்கேற்ப எல்லாப் பொருட்களையும் பொம்மை முன் வைத்து வந்தாள்.

அடிக்கடி மளிகை சாமான்கள் காலியாவதைக் கண்டதும் வேலப்பனுக்கு சந்தேகமாய் இருந்தது.

'நாம் இரண்டு பேர்தானே...! முன்பெல்லாம் இதே அளவுச் சாமான்கள் வாங்கிப் போட்டால் ஒரு மாதம் வரை வரும். இப்போதெல்லாம் ஒரு வாரம் கூட வருவதில்லை. இத்தனைக்கும் நாம் சாப்பிடும் சாப்பாட்டு அளவு கூட மாறாமல் தான் இருக்கிறது!' என்று எண்ணினான்.

விமலாவிடம் கேட்டான்.

விமலா பதில் பேசாமல் மௌனம் சாதித்தாள்.

வேலப்பன் கோபமாகக் கேட்டான்.

"நான் என்னங்க பண்ணட்டும். உங்க அம்மா சொல்படிதான் சமையல் பண்றேன்!'' என்றாள் விமலா.

''என்ன உளர்றே... என் அம்மாவா? புரியும்படி சொல்!''

மண் மாமியார் விஷயத்தை விமலா சொன்னாள்.

வேலப்பனுக்கு விமலா மீது கடுங்கோபம். விமலாவை நன்கு திட்டி, அந்த மண் மாமியார் பொம்மையை வெளியே எறிந்தான். விமலாவையும் வீட்டைவிட்டு துரத்திவிட்டான்.

மண் மாமியார் பொம்மையை கையிலெடுத்துக் கொண்ட விமலா போக்கிடம் தெரியாமல் அழுதுக் கொண்டே கால் போன போக்கில் நடந்தாள். எங்கே போவது என்று அவளுக்குப் புரியவில்லை.

அது ஓர் அடர்ந்த காடு.

விமலா அழுது கொண்டே காட்டுப் பகுதிக்கு வந்து விட்டாள். இருட்டு பரவிக் கொண்டிருந்தது. தூரத்தில் காட்டு விலங்குகளின் கூக்குரல் ஒலித்தது. விமலாவுக்கு ஒரே பயம்! அமாவாசை இரவு. ஒரு மரத்தின் மீது ஏறி அமர்ந்து

கொண்டாள். கையில் மண் மாமியார் பொம்மை.

விமலா தன்னையறியாமல் மரத்திலேயே தூங்க ஆரம்பித்தாள். அப்போது அந்த ஊரிலேயே பெரிய கொள்ளைக்





கூட்டம், தாங்கள் திருடிய பொருட்களுடன் விமலா ஏறியிருந்த மரத்தடியில் வந்து அமர்ந்தது. அந்தக் கும்பலில் நான்குபேர் இருந்தனர். அதில் ஒருவன்,

"டேய்... நாம் இத்தனை நாளாய் அடித்த பணம், நகைகளை இன்றைக்குப் பங்கு போட்டுக்கலாம்... எடுத்துப் பிரிங்கடா!" என்றான். எல்லாவிதமான நகை, பணத்தையும் எடுத்துப் பிரித்து வைத்தனர். தூங்கிக் கொண்டிருந்த விமலா தூக்கக் கலக்கத்தில் லேசாய் புரள அவள் கையிலிருந்து மண் மாமியார் பொம்மை சரியாக திருடர்கள் நடுவில் விழ, எதிர்பாராத அதிர்ச்சியினால் காவல் துறைதான் வந்து விட்டது என்று பயந்து நகை, பணத்தை அப்படியே போட்டு விட்டு திருடர்கள் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர்.

விடிந்தது.

விமலா கீழே இறங்கி வரவும் தன் மாமியார் பொம்மையைச் சுற்றி ஏராளமான பணம், நகைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டாள்.

தன் மாமியார்தான் தனக்கு இத்தனை செல்வங்களை அளித்திருப்பதாக நினைத்துக் கொண்டாள். அவைகளை எடுத்துக் கொண்டு ஊர் நோக்கி நடந்தாள்.

இதற்கிடையில், ஏதோ ஒரு கோபத்தில் தன் மனைவியை துரத்திவிட்ட வேலப்பன், பின் தன் தவறை உணர்ந்து தன் செயலுக்காக வருந்தினான்.

விடிந்ததும் வேலப்பன் விமலாவை தேடியபடி கிளம்பினான்.

ஓரிடத்தில் விமலாவைக் கண்டு, தன் செயலுக்காக வருத்தம் தெரிவித்தான். விமலாவும் தன்னிடமிருந்த செல்வங்களைக் காட்டினாள். வேலப்பனுக்கு ஆச்சர்யம்.

அரசாங்கத்திடம் அவற்றை வேலப்பன் ஒப்படைக்க, சன்மானமாக மிகப் பெரிய தொகை வேலப்பனுக்கும் விமலாவுக்கும் கிடைத்தது.

உனக்குப் பூச்சா?


ரஞ்சுவிற்கு உடம்பு ஏதோ செய்தது. சிறிது நேரத்தில் அவன் உடம்பு ப்ரவுன் கலர் ஆகிக்கொண்டே வந்தது. அவன் உருவமும் சிறுத்துக் கொண்டே வந்தது. அவன் தலைமுடி எல்லாம் கொட்டி உச்சந்தலையில் இரண்டே இரண்டு தலைமுடி மட்டும் நீண்டிருந்தது. கை கால்களின் வடிவம் மாறியது. அவனுக்கு என்ன நடக்கிறது என்று தெரிவதற்குள், "ரஞ்சு, ரஞ்சு" என்று அம்மா கூப்பிட்டுக் கொண்டே வந்தார். அவன் அம்மாவிற்கு ஒரே வியப்பு. "இத்தனை நேரம் இங்குதானே இருந்தான்" என்று கூறிக் கொண்டிருந்த அம்மாவின் பார்வை அங்கிருந்த நாற்காலியின் மீது பட்டது. "சீ! கரப்பான் பூச்சி. ரஞ்சு பார்த்தால் அலறுவான்" என்று துடைப்பத்தைத் தூக்கிக் கொண்டு வந்தார்.

சற்றும் எதிர்பாராத இத்தாக்குதலால் நிலைகுலைந்து போன ரஞ்சு ஓடிப் போய் அவன் அலமாரிக்குள் புகுந்து கொண்டான். ஐந்து நிமிடங்கள் கழித்து அவன் தலையை வெளியே நீட்டிப் பார்த்தபோது அம்மா அங்கு இல்லை. மெல்ல ஊர்ந்து வந்து அவன் கண்ணாடி முன் நின்று பார்த்தபோது அவன் கண்களிலிருந்து நீர் வழிந்தது. எதைக் கண்டு இத்தனை வருடங்கள் அவன் பயந்து கொண்டிருந்தானோ அதுவாகவே அவன் மாறி விட்டிருந்தான்.




திடீரென்று அவன் காதில், 'உஸ், உஸ்' என்று குரல் கேட்டது. அருகே அவனைப் போலவே ஒரு கரப்பான் நின்று கொண்டிருந்தது. "டேய், ஊருக்குப் புதுசா" என்று கேட்டது. "ஊருக்கு மட்டுமில்லை..." என்று அவன் கூறும்போதே குரல் தழுதழுத்தது. "எதுக்கு அழறே. சீக்கிரம் வா. ஸ்ப்ரே கிளாஸ் ஆரம்பம் ஆகப் போகிறது" என்றது. "ஸ்ப்ரே க்ளாஸா" என்று வியந்து கொண்டே ரஞ்சு அதன் பின்னே சென்றான்.


அங்கு பத்து கரப்பான்கள் வரிசையில் நின்று கொண்டிருந்தன. அவனும் போய் வரிசையில் நின்று கொண்டான். ஒரு பெரிய கரப்பான் ஆடி ஆடி வந்து முன்னே நின்றது. "மாணவர்களே நேற்று நான் பூச்சிக்கொல்லிப் பொடிகளைப் பற்றி கூறினேனல்லவா? இன்று நம் எதிரிகளான மனிதர்கள் ஸ்ப்ரேயரை எடுத்துக் கொண்டு வந்தால் எப்படித் தப்பிக்கலாம் என்று செயல்முறை விளக்கம் அளிக்கப் போகிறேன்," என்று கூறிவிட்டு இங்கும் அங்கும் வேக வேகமாக ஓடி மறைந்து சர்க்கஸ் காட்டியது. சிறிது நேரத்தில் அது வணக்கம் கூறி விடைபெற்றுச் சென்றது. பின்பு அனைவருக்கும் பூச்சிக்கொல்லிகளை எதிர்க்கும் மருந்து கொடுக்கப்பட்டது. ரஞ்சு அதை எப்படிச் சாப்பிடுவது என்று தெரியாது முழித்தான்.



ரஞ்சுவிற்கு தூக்கம் தூக்கமாய் வந்தது. ஓடிப் போய் அவன் தன் படுக்கையில் படுத்துக் கொண்டான். சிறிது நேரத்தில் அவன் தங்கை அங்கு வந்தாள். அவளிடமாவது தன் நிலைமையை தெரியப்படுத்தலாம் என்று அவளின் காதருகே பறந்தான். அவளோ, "ஐயோ, அம்மா பறக்கும் கரப்பான்" என்று அலறினாள். அம்மா வருவதற்குள் அவன் தப்பித்து திரும்ப தன் அலமாரிக்குள் புகுந்து கொண்டான்.

திடீரென்று அம்மாவின் குரல் கேட்டது. "ரஞ்சு, ரஞ்சு ஸ்கூலுக்கு நேரமாச்சு. வீட்டுப் பாடம் முடிக்கணுமே எழுந்திரு" என்று கத்தினார். ரஞ்சுவிற்கு ஒரே சிரிப்பு. தான் கரப்பானாகி விட்டது எங்கே தெரியப் போகிறது? ஸ்கூலாவது, பாடமாவது என்று நினைக்கையில் அங்கு வந்த அவன் தங்கை, "அம்மா ரஞ்சு தூக்கத்தில் சிரிக்கிறான்" என்று கேலியாகக் கூறினாள். திடுக்கிட்டு எழுந்தவன் அத்தனையும் கனவு என்று உணர்ந்தான். குளிக்கச் செல்லும் போது அவன் காலருகில் ஒரு கரப்பான் இருந்தது. குனிந்து அவன் அதை நோக்கினான். அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவனது தங்கையும், அம்மாவும் அச் செய்கையைக் கண்டு வியந்தனர்.





பாவலர் போற்றும் படிக்காசுப் புலவர், சேலம் பா. அன் பரசு, பக். 80 ரூ. 14/- அமிழ்தம் பதிப்பகம், 15, முத்துப் பிள்ளை தெரு, வ.உ.சி. நகர், வேலூர் - 632 001.

பொன் விளைந்த களத்தூரில் வாழ்ந்து, சிதம்பரத்தில் மறைந்த புகழ்மிக்க படிக்காசுப் புலவரின் வாழ்க்கை வரலாறு சுவையாகத் தரப்பட்டுள்ளது. தருமபுரம் ஆதீனத்தில் இவர் துறவறம் மேற்கொண்டு கட்டளைத் தம்பிரானாக நியமிக்கப்பட்ட செய்திகள் படிப்பவர்களுக்கு சுவையாக இருக்கும். இலக்கியம் கற்போர் மட்டுமல்ல, எல்லா வயதினரும் படித்துப் பயன் பெறத்தக்க நூல்.

பொய் சொல்லான், பூவை அமுதன், பக். 112 ரூ. 22/- செந்தூரான் பதிப்பகம், 6, ஜெய்சங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 33.

கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான எழுத்தாளரின் 13 சிறுகதைகளின் தொகுப்பு. பெரும்பாலானவை கோகுலத்தில் வெளிவந்து வாசகர் களின் பாராட்டைப் பெற்றவை என்பதே இதன் சிறப்பை விளக்கப் போதுமானது. ஒரு படம் கூட இல்லாதது மனதை உறுத்துகிறது!

சிவநெறி காட்டிய சீலர், கி. பட்சிராஜன், பக். 86 ரூ. 25/- பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – 14.

மிக எளிய நடையில் சிவநேசச் செல்வர்களாய் வாழ்ந்து சைவம் தழைக்க வைத்த திருமூலர், கண்ணப்பர், காரைக்கால் அம்மையார், பட்டினத்தார், குமரகுருபரர், அருணகிரி, தாயுமானவர், வள்ளலார், பாம்பன் சுவாமிகள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு சிறுவர்க்குப் பொருத்தமாகத் தரப்பட்டுள்ளது. மதாவின் வண்ணப்படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன. பெருமைப்படத்தக்க தயாரிப்பு.

ஜலதரங்கம் வாசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். நாட்யாசார்யா ஸ்ரீ எஸ். பாலசந்தர் ராஜு, பக். 208 ரூ. 39/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை – 17.

ஜலதரங்கம் இசைக்கக் கற்போருக்கு வழிகாட்டும் நூல் இது. மிகவும் விரிவாகத் தொடக்கத்தில் இருந்து கீர்த்தனைகளை இசைப்பது வரை பல நிலைகளையும் விவரித்து வழிகாட்டும் குருவாக இருக்கிறது. கூடவே ஜல

ஜலதரங்கம் வாசிக்க வேண்டுமா?

தரங்கம் தோன்றிய வரலாறு. இத்தகைய ஒரு வழிகாட்டி நூலை எழுதுவது எவ்வளவு கடினம் என்பதை இத்துறையில் இருப்பவர்களாலேயே உணர முடியும். ஜலதரங்கம் வாசிக்க விரும்பும் தம்பி தங்கைகளுக்கு மட்டுமல்ல, இசைப் பிரியர்கள் எல்லோருக்குமே மகிழ்ச்சி தரும் நூல்.

பண்பை வளர்க்கும் பல்சுவைக் கதைகள், திருநின்றவூர் வெ. பாண்டுரங்கன், பக். 96 ரூ. 21/- செந்தூரான் பதிப்பகம், 6, ஜெய்சங்கர் தெரு, சென்னை – 33.

படிக்கும்போதே பண்பு நலன்களை மலரவைக்கும் பதினொரு சிறுகதைகள் இதில் உள்ளன. ஒவ்வொரு கதைக்கும் பேச வைக்கும் முழுப்பக்கப் படங்கள் தரப்பட்டுள்ளன. எல்லாம் நிறைந்த விருந்து.

— ரே

பூனை வரையலாம்!

கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எழுத்தும் எண்ணும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் பூனை உருவாகி விடும். எங்கே ஆரம்பியுங்கள் பார்க்கலாம்!


தலை: D13→C12→C9→D8→ D6→ E8→ G8→H6→H8→I9→I12→H13→D13

உடல்: I10→N7→S7→W9→X14→ X16 → U18→Q19→I18→H17 E16→D17→B17→ B16→E14→E13

வால்: H17 →I16→S16→V15

முன்னங்கால் : E14 → L14 → M13

பின்னங்கால்: P16→P14→R12



நன்றி: லிட்டில் ஆர்க்

உலகக் கோப்பை கால்பந்தாட்டம்

● சாக்கர் என்றழைக்கப்படும் கால்பந்தாட்டம் உலகப் புகழ்பெற்றது. இந்த ஆட்டம் பல கோடிக் கணக்கான மக்களால் விரும்பி பார்க்கப்படுகிறது.

● கால்பந்தாட்ட வீரர் இருவர் ஆண்டுதோறும் ஆடிச் சம்பாதிக்கும் பணம் எவ்வளவு என்று கூறினால் போதும். இதன் புகழ் எளிதில் விளங்கும். பிரேசில் நாட்டு வீரர் ரோனால்டா பத்து கோடி ரூபாய் ஊதியம் பெறுகிறார். ஜெர்மனியின் தாமஸ் கேஸ்லர் பெறுவது ரூபாய் 9.75 கோடி! விளம்பர வருவாய் தனி.

● உலகக் கோப்பை கால்பந்தாட்டம் '98 இன் சின்னம் ஒரு சேவல் குஞ்சு. அதன் பெயர் ஃபூட்டிக்ஸ்.

● இருபத்தைந்து லட்சம் ரசிகர்களுக்கு உலகக் கோப்பை நிகழ்வுகளை நேரில் கண்டு களிக்கும் வாய்ப்புக் கிட்டியது. 180 தொலைக்காட்சி சேனல்களும் 130 வானொலி நிலையங்களும் நேரடி ஒலி-ஒலிபரப்புச் செய்கின்றன. இப்பணிக்காக பிரான்ஸில் குழுமியிருக்கும் செய்தியாளர்கள் மட்டுமே 9000 பேர்.

● ரோனால்டா தவிர ரசிகர்களால் பெரிதும் விரும்பப்படும் வீரர்கள் இதோ: பென்னி மெகார்த்தி (தென் ஆப்பிரிக்கா), கியோ மியூரா (ஜப்பான்), மைக்கேல் ஓவன் (இங்கிலாந்து), பாலோ மால்டினி (இங்கிலாந்து), பெட்கோ (பல்கேரியா), பெனிடேஸ் (பராகுவே), கார்லோஸ் (பிரேசில்). டேவிட் கினோலா (பிரான்ஸ்), ஏரியல் ஓர்கேடா (அர்ஜென்டினா), பிரான்ஸிஸ்கோ மொரியெரோ (இத்தாலி), மைக்கேல் லாட்ராப்... இப்படியே நீள்கிறது பட்டியல்.



உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டிகளில் இதுவரை அதிக கோல் போட்ட நாடு பிரேசில்தான். 73 ஆட்டங்களில் 49 ஆட்டங்கள்

வெற்றி; 13 ஆட்டங்களில் சமநிலை. 11 ஆட்டங்களில் மட்டுமே தோல்வி. 159 கோல்கள் போட்ட பிரேசிலுக்கு எதிராக மற்ற நாடுகள் 68 கோல்களே போட்டுள்ளன. அடுத்த இடத்தைப் பிடிப்பவர்கள் ஜெர்மனி, இத்தாலி, அர்ஜென்டினா, இங்கிலாந்து...

— விளையாட்டுப் பையன்



உலகக் கோப்பை கால் பந்தாட்டம்

ஆண்டு	எங்கே நடந்தது?	யார் வென்றது?	யாரை வென்றது?
1930	உருகுவே	உருகுவே	அர்ஜென்டினா
1934	இத்தாலி	இத்தாலி	செக்கோஸ்லோவாகியா
1938	பிரான்ஸ்	இத்தாலி	ஹங்கேரி
1950	பிரேசில்	உருகுவே	பிரேசில்
1954	ஸ்விட்சர்லாந்து	மேற்குஜெர்மனி	ஹங்கேரி
1958	ஸ்வீடன்	பிரேசில்	ஸ்வீடன்
1962	சிலி	பிரேசில்	செக்கோஸ்லோவாகியா
1966	இங்கிலாந்து	இங்கிலாந்து	மேற்கு ஜெர்மனி
1970	மெக்சிகோ	பிரேசில்	இத்தாலி
1974	மேற்கு ஜெர்மனி	மேற்கு ஜெர்மனி	ஹாலந்து
1978	அர்ஜென்டினா	அர்ஜென்டினா	ஹாலந்து
1982	ஸ்பெயின்	இத்தாலி	மேற்கு ஜெர்மனி
1986	மெக்சிகோ	அர்ஜென்டினா	மேற்கு ஜெர்மனி
1990	இத்தாலி	மேற்கு ஜெர்மனி	அர்ஜென்டினா
1994	யு.எஸ்.ஏ.	பிரேசில்	இத்தாலி
1998	பிரான்ஸ்	?	?

கேட்கட்டுமா டாக்டர்?

● ஆர். அபிமன்யூ, சமயநல்லூர்.

? விபத்துகளின் போது வெட்டுப் பட்ட விரலை மீண்டும் ஒட்ட வைக்க முடியும் என்கிறார்களே, உண்மையா டாக்டர்?

! உண்மைதான், தம்பி! வெட்டுப்பட்ட உடல் பகுதி எதை வேண்டுமானாலும் ஒட்ட வைக்க முடியும். அதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? வெட்டுப்பட்ட பகுதியை உடனடியாக தண்ணீரில் கழுவி சுத்தப்படுத்தி, ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு விட வேண்டும். பின்பு அந்தப் பையைச் சுற்றி ஐஸ் கட்டிகளை வைத்து, ஃபிளாஸ்க் அல்லது பாத்திரத்தில் அவற்றை வைத்து மூடி, மருத்துவரிடம் எடுத்துச் செல்ல வேண்டும். எவ்வளவு விரைவாக இவற்றை எடுத்துச் செல்கிறீர்களோ, அவ்வளவுக்கு அது நன்மை தரும்.

பின்குறிப்பு: வெட்டுப்பட்ட பகுதியையும் ஐஸ்கட்டிகளையும் ஒரு சேரப் பிளாஸ்டிக் பைக்குள் போட்டு விடக் கூடாது. கவனம்!



● எம். சிவசங்கர், திண்டிவனம்.

? நம் உடலில் மச்சங்கள் தோன்றுவது ஏன்?

? முகத்தின் அழகைக் கெடுக்கும் விதத்தில் அமைந்துள்ள மச்சங்களை அகற்ற என்ன வழி?

! 'மெலனின்' (Melanin) என்கிற நிறமிகள் நம் தோலில் புதைந்துள்ள விஷயமும், அவைதான் நம் தோலுக்கு நிறம் தருபவை என்கிற செய்தியும் உனக்குத் தெரியுமா, சிவசங்கர்? இந்த மெலனின்கள் முதன் முதலில் நம் உடம்பில் உருவாகும் போது, தோலில் ஆங்காங்கே சில இடங்களில் மட்டும் சிறிது அதிகமாகவே குவிந்து விடும். அந்தக் குவியல்கள்தான் 'மச்சங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இவற்றை அகற்றுவதற்கு 'ஒட்டறுவை சிகிச்சை' (Plastic Surgery) உதவும். இன்னொரு விஷயம் தம்பி, மச்சங்கள் நம் உடலில் இருப்பதால் பாதகமேதுமில்லை. அவற்றை அகற்ற வேண்டிய அவசியமுமில்லை.

● வ. சுரேஷ்குமார், வெங்கடேசபுரி.

? நாம் பேசும்போது குரல் நாண்கள் அதிர்வடைகின்றன. ஊமைகளுக்குக் குரல் நாண்கள் இடையாதா? அதிர்வடையவில்லையா?

! ஊமைகளுக்குக் குரல் நாண்கள் (Vocal Cords) உண்டு. ஆனால், அதிர்வடையாது. காரணம், குரல் நாண்களை இயக்குவது அவற்றைச் சுற்றியுள்ள குரல் வளைத் தசைகள். பிறவி ஊமைகளுக்கு இந்தத் தசைகள் செயல்படுவதில்லை; குரல் நாண்கள் அதிர்வதில்லை; இதனால் பேச்சு வருவதில்லை.

● நா. ஜெயசுந்தர், சிறுமுகை.

? வாயினுள் இருக்கும் சிறுநாக்கின் பயன் என்ன?

! குறிப்பிடும்படியாக எந்தப் பயனும் அதற்கில்லை. வாயின் உள் அமைப்பில் மேல்



டாக்டர் கு. கணேசன்

சிறு


அண்ணத்தின் பின் சுவர் இயல்பாக விரிந்து சுருங்குவதற்கு சிறிதளவு உதவி புரிகிறது சிறு நாக்கு. அவ்வளவுதான்.



● டெ. ஜோஷ்வின், ஐரேனிபுரம்.

? கண்ணின் கரு விழிக்கு ரத்தம் பாய்வதில்லை என்பது உண்மையா? அப்படியென்றால் ரத்தப் புற்றுநோய் உள்ளவர்களும் கண்தானம் செய்யலாமில்லையா?

! நல்ல சிந்தனை! ஆனாலும் ரத்தப் புற்றுநோய் உள்ளவர்கள் கண்தானம் செய்ய இயலாது. ஏன் என்று கூறுகிறேன். கருவிழிக்கு ரத்த விநியோகம் இல்லை என்பது உண்மைதான். என்றாலும், கருவிழிக்குத் தேவையான உணவு நிணநீர் மூலம் செல்கிறது. இந்த நிணநீர் ரத்தத்திலிருந்துதானே பிரிகிறது? அப்போது ரத்தப் புற்றுநோய் அணுக்கள் நிணநீர் வழியாக கருவிழிக்குச் செல்லலாமில்



லையா? ஆகவே அவர்களுடைய கருவிழி மிகவும் ஆரோக்கியமானது என்று சொல்வதற்கில்லை. இந்தக் காரணத்திற்காக அவர்கள் கண்தானம் செய்ய இயலாது.

● சி. லட்சுமணன், மதுரை - 2.

? வாய்வு என்கிறார்களே, அது எப்படி ஏற்படுகிறது?

! நாம் சாப்பிடும் உணவு குடலில் செரிக்கப்படும்போது சில நொதிகளின் விளைவாக புரதச்சத்துள்ள உணவுப் பொருள்களிலிருந்து வாய்வு வெளியேறுகிறது. இது சாதாரண நிலைகளில் அளவு குறைவாக இருக்கும் என்பதால் மலத்தோடு மலமாக வெளியேறிவிடும். ஆனால் புரதச்சத்து நிறைந்த பருப்பு வகைகளை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு விட்டால், வாய்வும் அளவுக்கு மீறி உற்பத்தியாகி விடும். இதன் விளைவாக வயிறு உப்புசம், வயிற்று வலி, அஜீரணம் போன்ற தொல்லைகள் தலைதூக்கும். ஆகையால் பருப்பு வகைகளை அளவோடு உட்கொண்டால் வாய்வுத் தொல்லை வரவே வராது.

● கே. ஜோதிரெகாவி, முத்தோரை.

? எனது பக்கத்து வீட்டுக் குழந்தைக்குக் காய்ச்சலும், பேதியும் உள்ளது. ஆனால், அருகில் உள்ள சில குழந்தைகளுக்கு அம்மை கண்டுள்ளது. டாக்டரிடம் காட்டுங்கள் என்றால் 'அம்மா கோபித்துக் கொள்வாள்' என அஞ்சுகின்றனர். இதற்கு தங்கள் அறிவுரை என்ன?

! அம்மை நோய்களுக்கு இப்போது மருந்து உள்ளது. எனவே, 'அம்மா'வுக்கு அஞ்சாமல் குழந்தைகளை மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை பெறுவதே நல்லது. அதிலும் காய்ச்சல், பேதி உள்ள குழந்தைகள் அவசியம் சிகிச்சை பெற வேண்டும். உன் பக்கத்து வீட்டுக்காரரிடம் உடனடியாகச் சொல்!

நாக்கின் பயன் என்ன?

நிலா நம்மை பின்தொடர்கிறதா?

நான் எங்கள் கிராமத்துப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலம். என் அப்பாவோடு பெருமாள் கோவில் சாமி புறப்பாட்டைப் பார்த்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தேன். நிலா வெளிச்சம் கிராமம் முழுவதும் பரவிக் கிடந்தது. அப்பாவோடு எதை எதையோ பேசிக் கொண்டு வந்த நான் நீண்ட நாட்களாக என் மனதில் நிலை பெற்று வந்த ஒரு கேள்வியைக் கேட்டேன்.

அவர் ஆச்சரியப்பட்டார். "ஏம்மா, நீ இந்த மாதிரி கேள்விகளையெல்லாம் உங்க வாத்தியாரிடம் கேளேன். எனக்கு இதெல்லாம் அவ்வளவா தெரியாது" என்றார்.

"எங்க வாத்தியாருக்குத் தெரியுமாப்பா...?"

"வாத்தியாருக்குத் தெரியாத கேள்வி இருக்குமாம்மா...?" என்று சொன்னார் அப்பா.

"வாத்தியார் ஒண்ணும் சொல்ல மாட்டாரே...!"

"நிச்சயம் சொல்ல மாட்டாரு. தைரியமாய் கேள்" என்றார் அப்பா.

அப்பா வேறு ஏதேதோ பேசிக் கொண்டே வந்தார். வீடும் வந்து விட்டது. இந்தக் கேள்வியை வாத்தியாரிடம் எப்படிக் கேட்பது? கேட்டால் என்ன சொல்வாரோ தெரியவில்லை! இவ்வாறெல்லாம் மனதைக் குழப்பிக் கொண்டிருந்தேன்.

மறுநாள் காலை வழக்கம் போல் பள்ளிக்குச் சென்றேன். தமிழ் வகுப்பு முடிந்து அறிவியல் வகுப்பு வந்தது. அறிவியல் ஆசிரியர் வகுப்புக்குள் வந்தார். நான் வழக்கமாக முன் வரிசையில் அமர்ந்து பாடம் கேட்க ஆரம்பித்தாலும் கேள்வியை எப்பொழுது கேட்பது என்று தவித்துக் கொண்டிருந்தேன்.

பாடம் ஒரு வழியாக மணியடிக்கும் முன்னதாகவே முடிந்தது. உடனே நான் இருக்கையை விட்டு எழுந்தேன்.

"என்ன பானு... என்னைவிட உனக்கு அவசரமா...?" என்று கேட்டார் ஆசிரியர்.

"இல்லை சார்... எனக்கு ஒரு சந்தேகம்..." என்று இழுத்தேன்.

"சொல்லு... சொல்லு!"

"நாம் நடந்தால் நிலா ஏன் கூடவே வருது சார்?" என்றேன்.

வகுப்பு மாணவர்கள் கொல்லென்று சிரித்தார்கள். மாணவர்களை அடக்கி விட்டு ஆசிரியர் இருக்கையில் அமர்ந்தார். சிறிது நேர மௌனத்திற்குப் பின் "இங்கே கவனிங்க. பானு கேள்வி நல்ல கேள்வி. இது மாதிரி உங்களுக்கு வரும் சந்தேகத்தை தைரியமாய் கேட்கணும்."

"நம்ம ஊர் கோபுரம் ரொம்ப உயரமா இருக்கு. இந்த கோபுரத்தை நம்ம ஊர்லே எங்கிருந்து வேண்டுமென்றாலும் பார்க்கலாம். அது மாதிரி நிலா ரொம்ப... ரொம்ப... உயரத்திலே இருக்கு. அதனால் அதை நாம் எங்கிருந்தாலும் பார்க்கலாம். இப்ப புரியுதா நிலா ஏன் நம் கூடவே வருதுன்னு" என்றார்.

எனக்கு பதில் கிடைத்து விட்ட திருப்தி.


என் அப்பாவிடம் ஆசிரியர் அளித்த பதிலை சொல்லி மகிழ்ந்தேன்.

வருடங்கள் கடந்தன. பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பி.எஸ்.சி படிப்பு.

ஒருநாள் சக மாணவிகளோடு உல்லாசப் பயணம் கிளம்பினோம். நாங்கள் புறப்பட்ட நாள் ஒரு பௌர்ணமி நாள். எங்கள் பேருந்து கிளம்பியது. நான் சன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டு நிலவைப் பார்த்து ரசித்துக் கொண்டு வந்தேன்.

புறப்பட்டு இரண்டு மணி நேரம் ஆகியது. பேருந்து சுமார் நூறு கிலோ மீட்டர் தூரம் கடந்து விட்டது. ஆனால் இந்த நிலா மட்டும்கூடவே வந்து கொண்டிருந்தது. ஆனால் தூரத்தில் தெரிந்த விளக்கொளி எல்லாம் சிறிது நேரத்தில் மறைந்து விடுகிறது. நிலா மட்டும் எப்படித் தொடர்கிறது என்று நினைத்துக் கொண்டே தூங்கி விட்டேன்.

மறுநாள் காலை பொழுது புலர்ந்தது. இந்தக் கேள்வி மட்டும் நெஞ்சில் நிலை கொண்டிருந்தது. மீண்டும் சன்னல் வழியே பார்வை செலுத்தினேன். என் கண்களுக்கு மிகத் தொலைவில் மலைகள் தென்பட்டன. என் தோழிகள் எல்லாம் அந்த மலை இங்கிருந்து கிட்டத்தட்ட 30 மைல் தொலைவில் இருக்கும் என்றார்கள். அதையும் கேட்டுக்



கொண்டேன். அந்த மலை சிறிது நேரத்தில் என் பார்வையை விட்டு அகன்று விட்டது.

ஆனால் நிலா மட்டும் ஏன் அகலவில்லை? இது எங்கு சென்றாலும் கூடவே வந்துதான் ஆகுமா? இதுகூடவே வருவதற்கு வாத்தியார் சொன்ன உயரம் மட்டும்தான் காரணமா? அப்படீன்னா நிலா எவ்வளவு உயரத்தில் இருக்கு? இம்மாதிரி கேள்விகள் என் மூளையை அரித்துத் தின்று கொண்டே வந்தன.

ஒரு வழியாக பஸ் ஊட்டியை வந்தடைந்தது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த அறைகள் எங்களுக்காக காத்துக் கிடந்தன. பேருந்தை விட்டு இறங்கி அறைகளுக்குச் சென்றோம். ஊர் சுற்றத் தயாரானோம். அரை மணி நேரத்திற்குள் பேருந்து தொட்டபெட்டாவை அடைந்தது.

''அடேயப்பா... என்ன அழகு!''

எல்லா மலைகளும் பச்சைக் கம்பளம் போர்த்தினாற் போல பசுமை. இதமான குளிர்ச்சி. உடலை மென்மையாகத் தழுவிச் செல்லும் பனிப்புகை. எங்களைச் சுற்றி பூத்துக் கிடக்கும் வண்ண மலர்க் கூட்டம். இவை அனைத்தும் என் மனதுக்கு இதமளித்தன. நான் பரவசமடைந்து அனைத்தையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

தோழிகள் சிலர் ''ஏய்... அதோ தெரியுதே அதுதான் வியூபாயிண்ட். அங்கிருக்கிற தொலைநோக்கியில் மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் எல்லாம் தெரியும். வா... போய்ப் பார்க்கலாம்'' என்று கூறினார்கள்.

''அங்கே இப்ப ஒண்ணும் பார்க்க முடியாதுடி. நாங்க இப்பதான் போய் பார்த்துட்டு வர்ரோம்'' என்றாள் தோழி.

''யாரோ ஒரு வயதானவர் அங்கே டெலஸ்கோப்பை ரிப்பேர் செஞ்சுகிட்டு இருக்கார். அவர் சென்னையிலிருந்து வந்திருக்கிறாராம். யாரோ பெரிய அஸ்ட்ரானமராம்...'' என்றாள் இன்னொருத்தி

நான் உற்சாகமடைந்தேன். விழிகள் அகன்றன. தோழிகளை அழைத்துக் கொண்டு வியூபாயிண்ட் பக்கம் ஓடினேன். டெலஸ்கோப் பொருத்துவதைப் பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

டெலஸ்கோப் பொருத்தப்பட்டு விட்டது. பெரியவர் டெலஸ்கோப்பை எப்படி இயக்குவது என்பது பற்றி அங்கிருந்த

நிஷா



பத்தாம் பசலி

மொகலாய மன்னரான அக்பர் பஸ்லி என்ற ஆண்டுக் கணக்கை அமுலுக்குக் கொண்டு வந்தார். நிலவரியைக் கணக்கிட இது நடைமுறைக்கு வந்தது 591-ஆம் ஆண்டில். பத்தாம் பசலி என்பது கி.பி.600ஐக் குறிக்கும். 600ம் ஆண்டில் வாழ்பவனைப் போல் பிற்போக்கான, முற்போக்கான எண்ணம் இல்லாதவனே என்று கேலி செய்வதே இது!

— சுகாராஜ்,
மதுரை-2.

ஊழியர்களுக்கு விளக்கினார்.

"இதில் சந்திரனை நன்றாகப் பார்க்கலாம். அதிலுள்ள மலைகள், பள்ளத் தாக்குகள் எல்லாம் தெரியும். அமாவாசைக்குப் பின் ஐந்தாம் நாளிலிருந்து பத்தாம் நாள் வரை பள்ளங்கள், மேடுகள் எல்லாம் நன்றாகத் தெரியும். பௌர்ணமி சமயம் சூரிய ஒளி சந்திரனில் செங்குத்தாக விழுவதால் வெளிச்சம் அதிகமாகி துல்லியமாகத் தெரியாது" என்று கூறினார்.

உடனே நான் "சார்... ஒரு கேள்வி...!"

"சொல்லும்மா... என்ன?" என்றார்.

என்னுடைய சந்தேகத்தைக் கூறினேன்.

பெரியவர் 'நல்ல கேள்வி' என்று பாராட்டினார்.

"இது மாதிரி கேள்வி பலருக்கும் தோன்றும். ஆனால் கேட்க மாட்டார்கள். நீ தைரியமாகக் கேட்டிருக்கே. உனக்கு என் பாராட்டு" என்று சொன்னவர் "உன் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டுமென்றால் நான் உங்களை இரண்டு கேள்விகள் கேட்க வேண்டும். பதில் தெரியுமா என்று பார்க்கலாம்" என்றார்.

"கேளுங்க... கேளுங்க..." என்று ஆர்வத்தோடு கூடியிருந்த கூட்டம் சொல்லியது.

"பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம் எவ்வளவு தெரியுமா?"

எல்லோர் விழியும் பிதுங்கியது. ஆர்வத்துடன் நின்றிருந்த எனக்கும் தெரியவில்லை.

"சரி, யாருக்கும் தெரியவில்லை. அடுத்த கேள்விக்குப் பதில் நிச்சயமாக உங்களுக்குத் தெரியாது. அதனாலே நானே விளக்கமாகச் சொல்றேன். சந்திரனுக்கும் நமக்கும் உள்ள தூரம் 5 கி.மீ - 10 கி.மீ அல்ல. 3, 84,400 கி.மீட்டர்கள். இது ஒரு சாதாரண தூரம் அல்ல. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியம்.

"இரண்டாவது சந்திரனின் விட்டம். இது 3476 கி.மீ. ஏறக்குறைய, அமெரிக்காவின் குறுக்காக நடக்கும் தூரமாகும்.


"இவ்வளவு தொலைவில் உள்ள இவ்வளவு பெரிய சந்திரனை டெலஸ்கோப் மூலம் பார்த்தால் ஏதோ 200 கி.மீ தூரத்தில் உள்ளது போல் தோன்றும். ஆனால் சந்திரனின் தொலைவு... மிகவும் அதிகமானது என்பதை நாம் மறுக்க முடியாது. இந்தத் தொலைவில் உள்ள சந்திரன் ஒரு சில மணிகள் நாம் பஸ்ஸிலோ அல்லது காரிலோ சென்றால் நம்மை விட்டு அகன்று விடாது."

"நாம் காரில் போகும்போது ரோட்டில் உள்ள மரங்கள், வீடுகள், மின்சாரக் கம்பங்கள் எல்லாம் ஒரு வினாடிக்குள் எதிர் திசையில் ஓடி ஒளிவதைக் காண்கிறோம். ஆனால் சந்திரன் மட்டும் நம்மைத் தொடர்வதை நம் மனது ஏற்றுக் கொள்வதில்லை. அதன் காரணமாகவே நமக்கு இந்தக் கேள்வி எழுகிறது.

"நாம் சந்திரனை ஒரு கோணத்தில் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். பிறகு ஒரு நேர்பாதையில் பல கி.மீட்டர் தூரம் சென்று அங்கிருந்து சந்திரனை பார்த்தாலும் இந்த இரண்டு தூரங்களுக்கு இடைப்பட்ட கோணத்தில் மிக மிக சிறிய மாற்றம் அல்லது மாற்றம் இல்லாமல் இருக்கும். இதன் காரணமாகவே சந்திரன் உங்களைத் தொடர்வது போல் தெரிகிறது. இது தான் அறிவியல் ரீதியான விளக்கம்" என்று முடித்தார்.


நான் நன்றி கூறி விடை பெற்றேன்.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones — Editorial : 2345624; Circulation Manager : 2345623;
Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription — (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-



ஐஸ்வர்யாவுக்கு ஐஸ்கிரீம் என்றால் உயிர்தான்... ஆனால் அதற்கு வழி? நீங்கள் அழைத்துச் செல்லுங்களேன்! ஆனால் ஒன்று– கோடுகளைத் தாண்டக் கூடாது.

பிருந்தாவனம்



''சாலையோரம் எதுக்கு மைல் கல் வைச்சிருக்காங்க?''


''நடுரோட்டுல இருந்தா வண்டி போக முடியாதே?''

– தாரை மா. மகேஷ்ப்ரியன்

வண்ணம் தீட்டி மகிழுங்கள்



இந்த நான்கு படங்களை கவனியுங்கள். என்ன தெரிகிறது?



விடை :

1) ஒருவர் சோபாவில் அமர்ந்து செய்தித்தாள் படிக்கிறார்.

2) கொட்டிய பாலை பூனை குடிக்கிறது.

3) மரத்தில் ஒருவர் ஏறுகிறார்.

4) தொப்பி அணிந்து ஒருவர் நடக்கிறார்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka